www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ரூபா 11/00
ஜூலை.21-27,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 162

# கரும்புலிகள் நடத்திய ஒத்திகை



## கமலுக்கு பிடிக்காத காட்சிகள்

## பரபரப்பான ஆரம்பம்

# பூலான்தேவியின் உண்மைக் கதை

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஏட்டுச் சுரைக்காய்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

மனித உரிமை ஆணைக்குழுவை
நிறுவும் சட்டமூலத்தை
பாராளுமன்றம் கடந்தவாரம்
நிறைவேற்றியிருக்கிறது.

கடந்த வருடம்-
மனித உரிமைகள் பணிக்குழு
என்ற ஒரு அமைப்பை
ஜனாதிபதி ஏற்படுத்தியிருந்தார்.

அந்தப் பணிக்குழுவின்
எதிர்காலம் என்ன?

கடந்த ஒரு வருட காலத்தில்
மனித உரிமைகள் பணிக்குழு
சாதித்தது என்ன?
பதில் ஒரு பெரிய பூச்சியம்!

கைது செய்யப்பட்டவர்கள் எங்கே?
யாரால் கைதுசெய்யப்பட்டார்கள்?
என்பதைக்கூட
அறிந்து கொள்ள முடியாமல்
மனித உரிமைப் பணிக்குழுவே
அவதியுடன் அலைந்து திரிந்தது!

தம்மிடம் முறையிட்டவர்களுக்கு
தேறுதல் சொல்ல முடிந்ததேதவிர
தேவையான விபரங்களை
கண்டறிந்து சொல்ல முடியவில்லை!

காரணம் மிகத் தெளிவானது.
பாதுகாப்புப் படையினரோ
காவல்துறையினரோ
மனித உரிமை
என்ற சொல்லைக் கேட்டாலே, அதனை
கெட்டவார்த்தையாக நினைக்கின்றனர்.

மனித உரிமைக் குழுக்களை
தங்களுக்கு எதிரானவையாகவே
அவர்கள் கருதிக்கொள்கின்றனர்!

இந்த மனோபாவம் மாறாததால்
மனித உரிமைக் குழுக்கள்
ஒரு வரம்புக்கு மேல்
செயற்பட முடியாமல் போகிறது!

அரசாங்கம் நியமிக்கும்
மனித உரிமைக்குழுக்கள்கூட
பாதுகாப்புத் தரப்பினரின்
ஒத்துழைப்பில்லாமல்
ஒடுங்கிப் போகும் போது,
அரச சார்பற்ற மனித உரிமை
அமைப்புக்களின் கதி?

ஒரு நபரைக் கைதுசெய்தால்,
அத்தாட்சிப்பத்திரம் வழங்குவது-
அவசியமென்று விதி இருக்கலாம்.
அத்தாட்சிப்பத்திரம் கேட்டவர்கள்
அடிவாங்கிய சம்பவங்கள்தான்
இருக்கிறதே தவிர
விதி கடைப்பிடிக்கப்பட்டதாக
உதாரணங்கள் இல்லை.

விதிகள் இருந்தால் போதாது;
விதிகளை மீறுவோருக்கு
என்ன தண்டனை
என்பதும் முக்கியம்!

மனித உரிமைக் குழுக்களை
அமைத்தால் மட்டும் போதாது;
அவற்றை மதியாத போக்கை
தடுத்து நிறுத்த
தக்க நடவடிக்கை உண்டா
என்பதுதான் முக்கியம்!

ஜனாதிபதி நியமித்த
மனித உரிமைப் பணிக்குழுவே
செயற்பட முடியாமல் முடங்கியது.
புதிதாக நியமிக்கப்பட்டுள்ள
மனித உரிமை ஆணைக்குழு
மட்டும் என்ன செய்யப்போகிறது!

"பாருங்கள், பாருங்கள்
மனித உரிமைமீது
எமக்குள்ள அக்கறையை"
என்று வெளியுலகத்துக்கு
அரசாங்கம் எடுத்துச் சொல்ல
ஒரு வாய்ப்புக் கிடைக்கும்.
அதுதான் பலன்!

அடிகொடுக்காமல்
காரியமாகாது என்றாகிவிட்டது.
மனித உரிமைகளை மீறுவோர்மீது
நடவடிக்கை எடுக்கத் துணியாமல்
சட்ட மூலங்களால் மட்டும்
எதையும் சாதிக்க முடியாது!

சட்டமூலத்தை நிறைவேற்றி,
திருப்பம் என்றும்,
மனித உரிமை காக்கும்
விருப்பம் என்றும்
ஆற்றப்பட்ட உரைகளை
பாராளுமன்றம் பதிவு செய்துவிட்டது!

நிறைவேற்றப்பட்ட சட்டமூலம்
நடைமுறையில் பயன்தருகிறதா
என்பதை யார் கவனிப்பது?

காரியமாகு முன்னரே
திருப்தியடைந்து விடுவதால்,
நினைத்த காரியம் எதுவும்
நிறைவேறாமல் பாதியில் நின்றுவிடுகிறது.
இந்த வழக்கம் மாறட்டும்.
மாறாவிட்டால்-சட்ட மூலங்கள்
ஏட்டுச் சுரைக்காய்தான்!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## இயேசு-நம் தந்தை

இயேசுவானவர் நம் தந்தையாக இருப்பது எவ்வளவு சந்தோசம்: எத்தனை ஆறுதல். நாம் அவருடைய பிள்ளையாக வாழ தீர்மானம் செய்தால் அவர் எங்களை தம் பிள்ளையாக ஏற்றுக்கொள்வார். எங்களை என்றும் ஆசீர்வதிப்பார்.

"நீங்கள் எனக்கு குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள்," என்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்கிறார். (2கொரி 6: 18)

ஆண்டவரின் வஸ்திரத்தை தொட்டு அற்புதமாக சுகம் பெற்ற ஸ்திரியை இயேசுவானவர் அவ்விடத்தில் தந்தையாக, "மகளே திடம் கொள். உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடு போ," என்றார். (லூக் 8:48)

நாங்களும் ஜெபம் பண்ணும்போது அப்பா பிதாவே என்று வேண்டுதல் செய்கிறோம். நம் பரம தகப்பன் நிச்சயம் எங்கள் ஜெபத்தைக் கேட்பார். 'அவன் என்னை நோக்கி கூப்பிடுவான். நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச்செய்வேன்.' (சங் 91:5)

ஆர்.தேவராஜ், கட்டுகஸ்தோட்டை.



## சிந்தனைத் துளிகள்

* தர்ம காரியங்களில் மிக மேலானது பசித்தவனுக்கு உணவளிப்பதாகும். துன்பப்படுவோருக்கு உதவி செய்வது பாவங்களை அழித்துவிடும்.

-(நபி மொழி)

* தூய்மையான இறை நேசர்களைக் குறை கூறுவது இறை கோபத்தை ஏற்படுத்தும். இறைவனின் இனிய நேசர்களைத் தூற்றுவோர் தீய மரணத்துக்கு ஆளாகுவார்கள்.

- (கிதாபுல் ஹிகம்)

* சன்மார்க்க அறிஞர்கள் இவ்வுலக உல்லாசத்தை விரும்புவதும்- சொற்பொழிவாளர்கள் உண்மையை மறைத்துப் பொய்யைப் பறைசாற்றுவதும் இறுதி நாளின் அடையாளங்களாகும்.

-(நூருல் பயான்)

* ஒரு அனாதை அழுகின்றபோது அவன் அழுவதற்கு வகை செய்தவனுக்காக நரகம் விரிவடைகிறது. அவ் வனாதையை மகிழ்வித்து சிரிக்க வைப்பவனுக்காக சுவர்க்கம் விசாலமாகிறது.

- (அல் ஹதீஸ்)

எச்.எச்.எம்.ஹாரித், திஹாரிய.

# கவிதைப் போட்டி இல. 159

## பரிசுக்குரிய கவிதை

### காத்திருப்பு

இதுவரை காத்திருந்தோம்,
மழையின் வருகைக்காக...
இனிமேல் காத்திருப்போம்,
வெள்ள நிவாரணத்தின் வருகைக்காக...!

நா.ஹரி- நீர்கொழும்பு.

## இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### "ஒன்றிணைந்து உயிர்விடுவோம்"

மின்சாரம் சேர்ப்பதற்கு நீரில்லையென்கிறார்கள்;
என் விசாரம் போக்குதற்கு இதுபோது மென்மகனே!
ஒன்றிணைந்து உயிர்விடுவோம்! ஓடிவா! என்கிறாள்
கலி கால நல்ல தங்கை கண்கலங்கி மனம் கசந்து!

வாழையூர் வைரமுத்து.

### யாத்திரை

ஆண்டாண்டு காலமாய் அமைதிவரும் என்று
ஆள் வோரை நம்பியே ஏமாந்த மாந்தரின்
எதிர்பார்ப்பு ஈடேற இறைவன் அருள் வேண்டியே
நீர் பாய்ந்து செல்கின்றார் சேய்களுடன் கனகம்மா
கால் நடையில் கதிர்காமம்-இவர்
நல் நோக்கு நிறைவேற எல்லோரும் துதிப்போமே.

ச.இரத்தினம்- தேசிய கல்லூரி, அக்கரைப்பற்று-7.



### காலம்

கண்ணீரில் தத்தளிக்கும்
மழை,
கரைக்கு
வந்தாலும்,
கண்ணீரில் தானே
காலத்தை தள்ள
வேண்டும்.....?

திருமதி புவனேஸ்வரி- பசறை.

### நாங்கள்

கைகொடுப்பார்
யாருமில்லை;
கரைசேரவும்
மார்க்கமில்லை;
இனவாத வெள்ளமதில்
தத்தளிக்கும்
ஈழத்தமிழர்போல்...!

வை.சித்திக்கிருஷ்ணா-
பாண்டிருப்பு-01.

### கரை சேர..

கடல் நீரும் கண்ணீரும்
கலந்திங்கே பெருகுதையா;
உடல் வருந்தி உளம் வெதும்பி
கரை சேரக் கலங்குகின்றோம்!

பூமணி சேனாதிராஜா, வவுனியா.

### இதில் எது?

உற்றவை எல்லாம் இழந்ததாலே
தற்கொலை முயற்சியோ? இல்லை
கற்பவை பின்னர் உதவுமென
தற்காப்புப் பயிற்சியோ?

ச.மகாலிங்கம்- வெலிமடை.

# கவிதைப் போட்டி இல-162



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 27.07.1996

-முகவரி-
கவிதைப் போட்டி இல.161
தினமுரசு வாரமலர்
த.பெ. இல-1772, கொழும்பு.

### தேவையெங்கே?

முகவரி தவறிய கார் மேகம்,
முட்டுது கொட்டுது எங்கெங்கோ;
மூழ்குது இருளில் ஒரு பக்கம்,
மிதக்குது உயிர்கள் மறு பக்கம்!

பீ.எம்.எம்.அன்ஸார்- பு-தெ-வெலிகம.

### (ஏ)மழை

பூமிப்பெண்
பூப்படைய
வானத் தோழி
தெளித்த பன்னீர்
"இவர்களுக்கு யார் இருக்கார்?"

சுபா வரன்- கண்டி.

### பார்த்துச்செல்

சுட்டெரிக்கும் சூரியன்
கால்பறிக்கும் கண்ணிவெடி
தரை வாழ்வு வெறுக்க
நீர்வாழ்வு நாடினாயோ?
பார்த்துச் செல்-அங்கும்
கடல் கண்ணி-வெடி இருக்கும்.

உன்னவன், வட்டவளை

### மனவரட்சி

வற்றிய குளம் நிரம்ப வான்பெய்தால் வழியுண்டு;
என் வரண்டவாழ்வு வளம் பெற வழியுண்டோ?
அது இல்லை!
நிர்க்கதியாய் நிற்கின்றேன், நிழல்போலக்காத்துவந்த,
கைப்பிடித்த கணவரும் கடுஞ்சமரில் சிக்குண்டார்;
சித்தம் கலங்குகிறேன் சிறாரின் வாழ்வை எண்ணி!

திருமதி க.கதிரவேலு- வவுனியா.

# வாசக(ர்) சாலை

யாழ்ப்பாணத்தை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டபின்னர் அரசியல் பிரச்சனையை அரிசி-பருப்பு பிரச்சனையாக மாற்றப்பார்க்கிறார்கள். சலுகைகளால் மட்டும் தமிழ் மக்கள் மயங்கிவிடுவார்கள் என்று நினைப்பது புத்திசாலித்தனமல்ல. கடந்தகால ஆட்சிகள் செய்துபார்த்து தோல்வி கண்ட முறைகளே அவையாகும். யாழ் நிலை சொல்லும் முரசின் விமர்சனங்கள் சிறப்பாக உள்ளதையும் பாராட்டுகிறேன்.

தி.அந்தனி பெர்ணாண்டோ,
நீர்கொழும்பு.

-●●●-

திரு.சொக்ஸியின் யோசனைகளைப் பற்றி நாரதர் செய்த விமர்சனம் வெகு அருமை. எந்த மயிலும் இறகுபோட விரும்பாது என்பதுதான் நாம் பட்டறிந்த அனுபவம். முதலில் தமது தீர்வு யோசனைக்கு ஆதரவுதரச் சொன்னார்கள். இப்போது வேறு ஒரு யோசனை பற்றிப் பேசுகிறார்கள். எதுவும் உருப்படியாக நடக்கும் போலத் தெரியவில்லை.

ஆ.ஜெயராஜ், வவுனியா.

'முரசின்' அரசியல் விமர்சனங்கள், அலசல்கள் கடந்தகாலத்தை நினைவூட்டுவதுடன், எதிர்கால நடப்புக்களையும் முன்னறிந்து தரும் துல்லியம்தான் எம்மையெல்லாம் வியக்கவைக்கிறது. அதற்காகத்தான் வாரா வாரம் தவம் இருக்கிறோம்.

சி.யோகச்சந்திரன், ∴பிரான்ஸ்.

-●●●-

**ராஜேந்திரகுமாருக்கு கை குலுக்கு!**

நீ... நீயா... வாரம் தோறும் எம்மை பிரமிக்கவைத்த ராஜேந்திரகுமாருக்கு மானசீகமாக கைகுலுக்கி பாராட்டுகிறேன். மறைந்தும் மறையாத அந்த எழுத்தாளர் திலகத்திடம் எனக்குப் பிடித்தது எளிய நடை.

எம்.மகுறூப், பாணந்துறை.

-●●●-

கடைசிவாரம் வரையும் சஸ்பென்ஸ் குறையாமலும், தொய்வேயின்றியும் கதையை நகர்த்திய ராஜேந்திரகுமாருக்கு ஒரு சபாஷ். தேர்ந்தெடுத்து அசத்தல் தொடர்களை வழங்கும் முரசுக்கும் சபாஷ்.

செல்வி பகீரதி லோகநாதன்,
கம்பளை.

'முரசு' தரும் தொடர்கள் எதுவுமே சோடை போனதில்லை. 'நீ! நீயா!'வும் அதற்கு விதிவிலக்கல்ல. புதிய தொடரும் எம்மை கவரட்டும்.

திருமதி இ.பானுமதி.
கொழும்பு-11

-●●●-

ஒருவாரம்கூட தவறவிடாமல் படிக்கத்தூண்டிய தொடர்களில் ஒன்று நீ... நீயா! எனினும் வெகு விரைவாக முடிவை அமைத்ததுதான் சரியில்லை.

எஸ்.பிரதீபன், நுவரெலியா.

-●●●-

அசத்திவிட்டாரய்யா ராஜேந்திரகுமார். 'முரசு' நம் ரசனையறிந்துதான் தொடர் தரும் என்பதற்கு நீ.. நீயா!, கார்லோஸ் போன்ற தொடர்கள் உதாரணம். வாழ்த்துக்கள் முரசுக்கு!

எல்.என்.பாரூக், கண்டி.

-●●●-

ராஜேந்திரகுமாரின் தொடரை அடுத்து பட்டுக்கோட்டையாரின் தொடர் வருவது சபாஷ்! சரியான போட்டி!

ஆ.திலகராஜ், சிலாபம்.

-●●●-

கார்லோஸ் தொடர் நிறைவடைவது ஏதோ ஒரு இழப்புப்போல மனதில் கவலை தருகிறது. கார்லோஸ் அந்தளவுக்கு நம்மோடு ஐக்கியமாகி விட்டான்.

க.சிவகுமார், கந்தப்பளை.

கார்லோஸ் தொடர் முடிவுற்றதும் ரசிகன் என்ன தரப்போகிறார்? கார்லோஸ் நல்லவனா, கெட்டவனா என்று என் நண்பர்களுக்குள் ஒரு விவாதமே நடந்துவருகிறது. சந்தர்ப்ப சூழ்நிலைதான் கார்லோஸின் தவறுகளுக்கு காரணம் என்பது என்வாதம்.

எம்.கதிரேசன், பதுளை.

-●●●-

அன்பின் முரசுக்கு!



வாரம் ஒரு முறை என் கரத்தினில் வந்து போகும் தமிழ் முரசே! நீ தரும் அம்சங்கள் யாவும், படு சூப்பர். உன்னில் நான் விரும்புபவை ஆசிரியர் தலையங்கம், அற்புதனின் அரசியல் தொடர், தித்திக்கும் தேன் கிண்ணம், தெவிட்டாத கார்லோஸ் கதை,

மென் மேலும் உன் அம்சங்கள் சிறப்புற என் இனிய வாழ்த்துக்கள்.

க. புவியந்திரன், பிரதானவீதி,
திருப்பழுகாமம்.

-●●●-

கார்லோஸ் பற்றிய தகவல் மற்றும் இலக்கிய நயம் அள்ளித் தந்து என்னை பிரமிக்க வைக்கிறார் ரசிகன்.

எம். ஆர்.எம்.றஸ்மிஹான்,
புதுக்குடியிருப்பு, கல்பிட்டி.

-●●●-

என் அன்பிற்கினிய முரசே!

உனது அத்தனை அம்சங்களும் சூப்பர். இவைகளில் என்னை கவர்ந்தது சிறுகதை, தேன்கிண்ணம், சினிவிசிட், இலக்கிய நயம் படு ஜோர்.

செல்வி.எஸ்.யுவராணி, பிட்டகந்த.



படிப்பகம்

www.padippakam.com

# கொழும்பு அரசியல்வாதி புலிகளிடம் கேட்ட பதவி!
## அவரது விருப்பம் பிரபாவால் நிராகரிப்பு!

(வர்மா)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச பிரசாரகராக தன்னை நியமிக்குமாறு கொழும்பில் உள்ள தமிழ் அரசியல்வாதியொருவர் கோரியிருந்தார். அவரது கோரிக்கையை பிரபாகரன் நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

தமிழ் மக்கள் மத்தியில் முன்னர் பிரபலமாக இருந்த அரசியல் தலைவர் ஒருவரின் குமாரரான குறிப்பிட்ட அரசியல்வாதி சமீபகாலமாக புலிகளை ஆதரித்து பேசிவருகிறார்.

வெளிநாடுகளுக்கு சென்று புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். கனடா, அவுஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் புலிகளுக்கு ஆதரவாகவும் பிரசாரம் செய்தார்.

முன்னாள் ரூபவாகினித் தலைவர் வசந்தராஜாவும், குறிப்பிட்ட அரசியல்வாதியும் சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் சந்தித்து புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான பிரசாரத்தில் இணைந்து ஈடுபட்டனர்.

அவுஸ்திரேலிய வானொலி ஒன்றுக்காக வசந்தராஜா குறிப்பிட்ட அரசியல்வாதியை பேட்டியும் கண்டு ஒலிபரப்பினார். குறிப்பிட்ட அரசியல்வாதி ஒரு சட்டத்தரணியாகவும் இருப்பதால் வெளிநாட்டு பிரசாரங்களுக்கு அவரை பயன்படுத்தலாம் என்று புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளது பிரமுகர்கள் சிலர் விரும்பினார்கள்.

குறிப்பிட்ட சட்டத்தரணியும் பகிரங்கமாக தெரிவிக்கப்படாதவகையில் தனக்கு ஒரு பொறுப்புத் தந்தால் ஏற்றுக்கொள்ளத் தயார் என்று தெரிவித்தாராம்.

பகிரங்கமாகத் தெரிந்தால் கொழும்பில் இருக்க முடியாது என்பதே காரணம். வசந்தராஜாவும் மேற்படி அரசியல்வாதிக்காக சிபாரிசு செய்தாராம்.

இறுதியில் பிரபாகரனுக்கு தமது விருப்பத்தை தெரிவித்து வெளிநாட்டுக் கிளையினர் அனுமதி கேட்டனர்.

பிரபாகரன் அந்த யோசனையை நிராகரித்துவிட்டார். குறிப்பிட்ட அரசியல்வாதி ஒரு காலத்தில் தமிழ் ஈழக் கோரிக்கையைக் கிண்டலடித்தமையும், தமிழ் ஈழம் வேண்டாம் என்று தேர்தலில் போட்டியிட்டதையும் பிரபாகரன் மறக்கவில்லை என்று தெரிகிறது.

அவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; பதவி எதுவும் கொடுக்க முடியாது என்பது தான் பிரபாகரனின் நிலைப்பாடு என்று தெரிகிறது.

# தனிக்கட்சி-தனி மாகாண முயற்சிக்கு கண்டனம்!
## "கிழக்கைத் துண்டாடும் புதிய சதி"
## 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை தெரிவிப்பு

**வடக்கு-கிழக்கு பிரிப்பு, கிழக்கில் தனிக்கட்சி முயற்சி, கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு ஆதரவு போன்ற நிலைப்பாடுகளை புலிகள் இயக்கத்தினர் கண்டித்துள்ளனர். ஆனி 16-30 திகதி இடப்பட்ட 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை தனது முன்பக்கத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

### துண்டாடும் திட்டம்

'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

தமிழரின் தாயக பூமியைத் துண்டாடி, அதன் ஒருமைப்பாட்டைச் சிதைத்து, முடிந்தளவுக்கு அதனை அபகரிப்பதே பேரினவாதிகளின் அரசியல் மூலோபாயமாக இருந்து வருகிறது.

வெற்றிகரமாக அதனைச் சாதிப்பதன் மூலம், தமிழரின் தேசிய தனித்துவத்தையும், அவர்களது தாயகக் கோட்பாட்டையும் உடைத்தெறிவதே பேரினவாதிகளின் நோக்கமாகும்.

கிழக்கு மாகாணத்தை சிங்களமயமாக்கும் நீண்டகாலத் திட்டத்துடன், ஓய்வற்ற கடும் முயற்சியை பேரினாவாதிகள் செய்து வருகின்றனர்.

அல்லை-கந்தளாய் குடியேற்றத்திட்டத்தின் மூலமாக கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியில் பல்லாயிரம் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.

தமிழரின் நிலத்தைப் பறிப்பதுடன் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களின் நிலத் தொடர்பை அறுத்துவிடும் சதியின் ஓரங்கமே அந்தக் குடியேற்றத் திட்டங்களாகும்.

இதேபோன்றுதான் வெலி ஓயா குடியேற்றத்திட்டத்தின் மூலம் வடக்கு-கிழக்கின் நிலத்தொடர்பை துண்டித்ததுடன், ஒரு பகுதி நிலமும் அபகரிக்கப்பட்டது.

இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டங்கள் என்ற போர்வையிலும் தமிழரின் தாயக பூமியை சிதைக்கும் நடவடிக்கையில் ஆட்சியாளர் ஈடுபாடு காட்டுகின்றனர்.

### மூன்று அலகுகள்

தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்று தனித்தனியான நிர்வாக அலகுகள் என்ற முடுதிரைக்குள் கிழக்கை மூன்று துண்டுகளாக பிரித்துவிடும் திட்டத்தை-ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் இருந்து, இன்று வரை-நடைமுறைப்படுத்த ஆட்சியாளர்கள் துடிக்கின்றனர்.

சந்திரிக்கா அம்மையாரின் அரசாங்கம் வெளியிட்ட தீர்வுப்பொதியின் சட்டவரைவில் தமிழரின் தாயபூமி பற்றியோ அல்லது அந்த நிலத்தின் நிர்வாக அலகுகள் பற்றியோ எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

தமிழ்-முஸ்லிம் பிரிவினையை ஏற்படுத்தியும், கூட்டணி உட்பட தமிழ் குழுக்களுக்கு ஆசைகாட்டியும், மிரட்டியும் கிழக்கை துண்டாட தீவிர முயற்சிகள் நடைபெறுகின்றன.

வடக்கு-கிழக்கை பிரிக்க தற்போது ஒரு புதிய முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிழக்கை தனி மாகாணம் ஆக்கவேண்டும் என்ற கோஷத்தை கூட்டணியின் பிரதிநிதிகள் சிலரைக் கொண்டும், முஸ்லிம் காங்கிரசைக் கொண்டும் எழுப்புவிக்க முயற்சிக்கப்படுகிறது.

### நச்சுவிதை

கிழக்கு தனித்திருந்தால் அது விரைவாக அபிவிருத்தி காணமுடியும் என்ற நச்சு விதையை பேரினவாதப் புத்திஜீவிகள் விதைத்து வருகின்றனர்.

இதேவேளை, படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ் குழுக்களில் சில, வடக்கு விரோதக் கருத்தை கிழக்குவாழ் மக்கள் மத்தியில் பரப்ப முயற்சிகள் செய்து வருகின்றன.

'தனிமாகாணம்' என்ற பெயருடன் கிழக்கை வடக்கில் இருந்து பிரித்தெடுத்து, பின்னர் அதைப் பல்வேறு துண்டுகளாகப் பிரித்து, தமிழரின் தாயகக் கோட்பாட்டை முறியடிப்பதே நோக்கமாகும்.

இந்த நேரத்தில் எச்சரிக்கை உணர்வுடனும், அரசியல் விழிப்புணர்வுடனும் இருந்து சதிகளை முறியடிப்பது தமிழீழ மக்களின் கடமையாகும்" இவ்வாறு விடுதலைப் புலிகள் பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பிரதமர் சிறிமாவின் புத்திர பாசம்
## பொதுஜன முன்னணிக்குள் புதுப் பிணக்கு

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, தேசிய அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாக அரசியல் வட்டாரங்களில் பலத்த வதந்திகள் அடிபடுகின்றன. இதற்கேற்றாற்போல் முன் எப்போதுமில்லாத வகையில் தாய் சிறிமா-தனையன் அநுரா ஆகிய இருவரும் மிக நெருக்கமாக உறவாடுவது சுட்டிக்காட்டப்படுகிறது.

அண்மையில் புட்டப்பர்த்திக்கு, பிரதமர் சிறிமாவோ தனது மகன் அநுரா பண்டாரநாயக்காவையும் அழைத்துக் கொண்டு, பகவான் சாயிபாபாவின் ஆசீர்வாதங்களைப் பெற்று வந்திருக்கிறார். இருவருக்கும் தனிமையில் தரிசனம் தந்த பாபா, பிரதமருக்கு ஒரு மணி மாலையையும் அநுராவுக்கு ஒரு கைக் கடிகாரத்தையும் கொடுத்தாராம்.

சாயிபாபா இவ்விருவரையும் வாழ்த்தும் போது என்ன சொன்னார் என்று அமைச்சர்களும் சபாநாயகரும் வினவியபோது, "அது பரம இரகசியம்" என்று மகிழ்ச்சிப் புன்னகையுடன் சிறிமா சொன்னாராம்.

சிறிமாவோ உத்தேசித்திருக்கும் தேசிய அரசாங்கத்துக்கு அநுரா பண்டாரநாயக்காவை பிரதம மந்திரியாக்குவதுதான் திட்டம் என்று சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் பங்களாதேஷில் நடைபெற்ற பொதுத் தேர்தலையொட்டி அநுரா பண்டாரநாயக்கா இரு தடவைகள் அங்கு சென்று வந்தார். ஒரு தடவை திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் உத்தியோகபூர்வமான இரு கடிதங்களையும் தன்னுடன் எடுத்துச் சென்று அந்நாட்டுப் பிரதமரிடமும் எதிர்க்கட்சித் தலைவியிடமும் கையளித்துள்ளார்.

இதனால் ஆளும் கட்சிக்குள் இயங்கும் மல்பரிக் குழுவுக்குள் பலத்த வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன "தாயும் மகனுமானாலும் இருவரும் எதிரெதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள். பிரதமரின் கடிதங்களை ஆளும் கட்சியைச் சார்ந்த இரு பிரதிநிதிகள் சென்றிருந்தபோதும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவரிடம் எவ்வாறு கொடுத்தனுப்பலாம்" என்று, கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மல்பரிக்குழுக் கூட்டத்தில் டிலான் பேரேரா வினவினார். இது தொடர்பாக பிரதமரிடம் விளக்கம் கேட்பதற்கு டிலான் பெரேரா, நாலந்த எல்லாவல மற்றும் சிலர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

# படையினர் சல்லடைத் தேடுதல்
## பசு மாடுகள் குண்டு வீச்சுக்குப் பலி!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு-புளியந்தீவு நகர்ப்பகுதியின் சகல வீதிகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை போக்குவரத்துத் தடைப்படுத்தப்பட்டு திடீரென வீடு வீடாகச் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது. பி.ப.2.30 மணிக்குப் பின்னரே மக்கள் நகருக்குள் பிரேவசிக்க அனுமதிக்கப்பட்டார்கள். நகருக்குள் வருவதற்காக ஏராளமானோர் நெடு நேர வெய்யிலில் பாலத்தின் முனைகளில் காத்துக் கிடந்தார்கள். இதில் பெரியாஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளிகளும் அடங்கியிருந்தனர்.

நகருக்குள் தற்கொலைப் புலிப்போராளிகள் ஊடுருவியிருக்கலாம் என்பதனாலேயே தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கோட்டைமுனைப் பாலத்தைக் கடக்கும் மாலை நேரப் போக்குவரத்து சற்று இறுக்கமான நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஈரலக்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சின் போது அப்பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த 25 ற்கு மேற்பட்ட பசுமாடுகள் சிக்கிப் பலியானதாகத் தெரிய வருகிறது. இம்மாடுகள் புலிகளுடையவை அல்ல பொதுமக்களுக்குச் சொந்தமானவை என்றும் தெரிய வருகிறது.

# தொழில் நுட்பக்கல்லூரியில் மூடுவிழா?
## தமிழ் மொழிமூல வகுப்புக்கள் நிறுத்தம்

(கண்டி நிருபர்)

கண்டி அறுப்பொலையில் இயங்கும் தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த பல்லாண்டுகாலமாக இயங்கி வரும் தமிழ் மொழி மூல போதனா வகுப்புக்கள் விரைவில் மூடுபடக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கல்லூரியில் தேசிய தராதர கணக்கியல் தொழில்நுட்ப சான்றிதழுக்கான இரண்டு வருட கற்கை நெறியும், தேசிய உயர் டிப்ளோமா கணக்கியல் தராதர சான்றிதழுக்குமான 4 வருட கற்கை நெறியும் நடைபெறுகிறது. தமிழில் தட்டச்சு பயிற்சி நெறிகளும் நடைபெற்று வருகின்றன.

இவற்றில் தேசிய தராதர கணக்கியல் தொழில் நுட்ப பயிற்சிநெறி இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்தே மூடப்பட்டுவிட்டது. மற்றும் இங்கு இவ்விரண்டு பயிற்சி நெறிகளுக்குமான தமிழில் விரிவுரைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஓரிரு மாணவர்கள் மாத்திரமே இப்பொழுது இந்தக் கற்கை நெறியில் பங்கு கொள்கின்றனர். தமிழ்ப்பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றுவிட்டார். இதன் விளைவாக, இந்தக் கல்லூரியின் தமிழ் போதனா பிரிவு மூடப்படக் கூடிய இக்கட்டான சூழ்நிலையை தமிழ் பேசும் மாணவர்களும், கல்லூரியும் எதிர்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாவனல்லை, கண்டி, மட்டக்களப்பு, அம்பாறை, குருநாகல் போன்ற பல்வேறு இடங்களில் இருந்து பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் பலரும் இங்கு விரிவுரைகள் சீராக நடைபெறாத காரணங்களினால் கவலை கொண்டுள்ளனர். தமிழ்ப்பிரிவு அனாதரவாக விடப்பட்ட நிலையில் இருப்பதால் பயிற்சி மாணவர்களின் பெற்றோர்களும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

# நெருக்கடிக்குள் தவிக்கும் மக்கள்!
## மட்டக்களப்பில் வாகனப் பறிப்புக்கள்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது மக்கள் நாளாந்தம் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. யுத்தத்தில் ஈடுபடும் தரப்பினரால் வேண்டுமென்றே கொடுக்கப்படும் பல நெருக்கடி நிலமைகளுக்குள் மக்கள் நாளாந்தம் சிக்கி பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

வீதியில் செல்லும் பொதுமக்களிடம் படையினர் பொதிகளையோ கொடுத்துவிடுகிறார்கள்.குறிப்பிட்ட தூரத்திற்கப்பால் நிற்கும் படையினரிடம், அல்லது காவல் அரணில் அதனை ஒப்படைத்துவிட்டு செல்லுமாறு கூறுகின்றனர். அவற்றைக் கொண்டு செல்லப்படும் பொழுது இடைவழியில் ஏதாவது விபரீதங்கள் ஏற்பட்டால் பொது மக்கள் பல வித இன்னல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இதேவேளை ஏறாவூரில் வைத்து கடந்த வாரம் முச்சக்கர வண்டி (ட்ரைசோ) யொன்றைப் புலிகள் ஏறாவூர் தளவாயில் வைத்துப் பறித்துச் சென்றுள்ளனர். "கர்ப்பிணி நோயாளியொருவரை எடுத்துச் செல்ல வேண்டும்" என்று கூறியே முச்சக்கர வண்டி வாடகைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாம். இதேபோல் சமீப சில நாட்களுக்கு முன்னர் வாழைச்சேனையிலும் ஒரு முச்சக்கர வண்டியொன்றைப் புலிகள் பறித்துச் சென்றனர்.

கடந்த வாரம் வாழைச்சேனை காகித ஆலைச் சேவையில் ஈடுபட்டிருந்த இ.போ.ச. பஸ்ஸின் பற்றரியொன்றைப் புலிகள் சித்தாண்டியில் வைத்து அகற்றிச் சென்றுள்ளனர்.

இத்தகைய வாகனப் பறிப்புக்களால் ஆபத்து அவசரத் தேவைகளுக்கோ நோயாளிகளைக்கொண்டு செல்லவோ முச்சக்கர வண்டிக்காரர்கள் தயங்குகிறார்கள். வீதிப் பாதுகாப்பிற்குப் படையினர் வந்த பின்னரே அவசரத் தேவைகளுக்கு வாடகை வாகனங்களைப் பெறமுடிகிறது.

சி.ஏ.ஏ(C.A.A) எனப்படும் வெளிநாட்டு உதவி நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்று புலிகளால் வந்தாறுமூலையில் வைத்துக் கடந்தவாரம் பறித்துச் செல்லப்பட்டுள்ளது. சமீப சில மாதங்களுக்கு முன்னால் இதே நிறுவனத்திற்குச் சொந்தமான பெஜரோ வாகனம் ஒன்றும் புலிகளால் பறித்துச் செல்லப்பட்டு நொருங்கிய நிலையில் மீட்கப்பட்டதும் தெரிந்ததே.

# "இனவிகிதாசாரம் மீறல்"
## திருமலையில் ஆர்ப்பாட்டம்

(திருமலை நிருபர்)

நியமனத்தில் இனவிகிதாசாரம் பேணப் படவில்லை என்பதற்காக இலங்கைத் துறைமுக அதிகார சபைக் காரியாலயத்துக்கு முன்பாக சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

தொழிலாளர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இடம் பெற்ற நேர்முகத் தேர்வில் 73 முஸ்லிம்களும் 34 தமிழர்களுமே அழைக்கப்பட்டிருந்தனர். சிங்களவர் ஒருவர்கூட இருக்கவில்லை.

தமிழர்கள் குறைவாக அழைக்கப் பட்டமை, சிங்களவர் எவரும் அழைக்கப் படாமை அகியவற்றைக் காரணங்காட்டியே கடந்த 11.07.96 அன்று மேற்படி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசின் பேரில் திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கோஷ்டியொன்று தமிழ் இளைஞர் ஒருவரது சான்றுப்பத்திரங்களை கிழித்தெறிந்து நேர்முகத் தேர்வுக்குச் செல்வதைத் தடுக்க முயன்றது. எனினும் பின்னர் கிழிக்கப்பட்ட சான்றிதல்களுடன் அந்த இளைஞர் நேர்முகத் தேர்வுக்குச் சமூகமளித்தார்.

# "இணைப்புக்கு என்றுமே எதிர்ப்பு"
## ஐ.தே.கட்சி உறுதியாகத் தெரிவிப்பு!

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுக்கான யோசனைகளில் இரண்டாவது சரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒற்றை ஆட்சி முறையினை எச்சந்தர்ப்பத்திலும் ஐ.தே. கட்சி விட்டுக் கொடுக்கப்போவதில்லை. சமஷ்டி அரசியலமைப்புக்கு ஒருபோதும் சம்மதமளிக்கப்போவதுமில்லை. பிராந்தியங்கள் ஒன்றிணைப்புப்பற்றி யோசனைகளில் குறிப்பிடப்படுவது சமஷ்டி ஆட்சி முறைக்கான மறைமுகமான ஏற்பாடேயாகும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரான கருணசேன கொடித்துவக்கு குறிப்பிட்டார். ஐந்து தமிழ்கட்சிகள் ஐ.தே.கட்சி தலைமைப் பீடத்துடன் நடத்திய பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, தமது கட்சி சிலதினங்களில் தமது நிலைப்பாட்டை தெளிவாகக் கூறவிருப்பதாகக் கூறினார் அவர்.

வட-கிழக்கு ஒன்றிணைப்புக்கு ஐ.தே. கட்சி முற்று முழுதான தனது எதிர்ப்பினைத் தொடர்ந்து நிலை நிறுத்தும் என்றும் கூறினார்."சிறிய அலகுகள் அமைப்பதில் தான் இக்கட்சி கவனம் செலுத்தும். பிரதேச சபைகளுக்கும் மாகாண சபைகளுக்கும் கூடுதலான அதிகாரங்களை வழங்குவது பொருத்தமாகவிருக்கும். 13வது திருத்தத்துக்கு மேலும் வலுவூட்டுவதைப் பற்றியே நாம் ஆராய்ந்து வருகிறோம்," என்றும் கொடித்துவக்குக் கூறினார்.

# கனடாவில் அமிர் நினைவு தினம்

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபர் அமரர் அமிர்தலிங்கத்தின் 7வது நினைவு தினம் கனடாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

கனடாவில் உள்ள றிச்மன்ஹில் என்னும் இடத்தில் உள்ள பிள்ளையார் கோவிலில் விசேஷ அபிஷேகம், ஆராதனைகள் என்பவை நடைபெற்றன. நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

மன்னார் முன்னாள் எம்.பி.சூசைதாசன், சட்டத்தரணிகள், கரிகாலன், கனகமனோகரன் உட்பட கூட்டணியின் முன்னாள் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை கொழும்பில் நடைபெற விருந்த அமிர் நினைவுதின வைபவம் வேறு வேலைகள் காரணமாக கூட்டணியினரால் பின்போடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலக்கிய விழாவில் குளறுபடி

திருக்கோணமலையில் நடைபெற்ற 'பிரதேச தமிழ் இலக்கிய விழா' தொடர்பாக புகார்கள் எழுந்துள்ளன.

15.07.96 அன்று திருமலையில் புனித சூசையப்பர் கல்லூரியில் 'பிரதேச தமிழ் இலக்கியவிழா' நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட மேற்படி விழாவுக்கு திருமலை கலை இலக்கியவாதிகள் அழைக்கப்படவில்லை. மாகாணசபை உத்தியோகத்தர்களாக உள்ள எழுத்தாளர்களுக்கே முன்னுரிமை தரப் பட்டது என்று கூறப்படுகிறது. இதனால் விழாவில் பங்குகொள்ளாமல் எழுத்தாளர்கள் பலர் பகிஷ்கரித்தனர்.



படிப்பகம்

★**ம**ட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களில் புலிகளின் போர் ஊக்கம் முன்னரைவிட அதிகரித் திருப்பதை அவதானிக்கலாம். ஒழிந்திருந்து தாக்குதல், தற்கொலைப்படை ஏவுதல் போன்ற போர்த் தந்திரோபாயங்கள் விரிவடைந்திருப்பதால் மக்கள் மத்தியில் தளப்ப நிலை காணப்படுகிறது.

**★ இரு அரசு:**

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் இரு அரசாங்கங்கள் நடைபெறுகின்றன. வாவிக்கு மேற்குப் புறத்தில் புலிகள் அரசும், மறு புறத்தில் ஆளும் அரசும் என வகைப்படுத்தலாம். புலிகள் கால் நடைகள், காணிகள் வேலைத்திட்டங்களுக்கு வரிவிதித்துள்ளன. வரிசெலுத்த நிர்ணயிக்கப்பட்ட திகதி–காலக்கெடு உண்டு. இதுவே வழங்கப்பட்டுள்ள அவகாசம்.

**★ பேரூட் முகாம்:**

**கொ**க்கட்டிச்சோலைப்பகுதியில் புலிகளின் மிகப் பெரிய பேஸ் பேரூட். இங்குதான் மாவீரர் துயில்கொள்ளும் பாசறையும் உண்டு. மாவட்டத்தில் போரில் உயிர்நீக்கும் புலிப் போராளிகள் இங்குதான் எடுத்துச் செல்லப்படுகின்றனர். அண்மையில் மத்திய முகாம் பொலிஸ் காவல் நிலையம் தாக்கப்பட்டபோது உயிர் நீத்த ஒரு சில புலிகளின் சடலங்கள் ஊர்வலமாக மாவீரர் துயிலறைக்கு எடுத்துச் செல்லப் பட்டன; கிராம மக்கள் பார்த்தனர்.

**★ படுவானில் சந்திப்பு:**

**வ**ன்னியில் தலைவர் பிரபாகரனின் அழைப்பை ஏற்று அங்கு சென்று மீண்ட புலிகளின் கிழக்குத் தலைவர்கள், அண்மையில் படுவான்கரைப் பிரதேசத்தில் அவசரமாகச் சந்தித்து உரை யாடியதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். பல கோணங்களில் பாரிய தாக்குதல் நடத்துவது பற்றி பேசியிருக்கலாமென புலி ஆதரவாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

**★ றெட்குரோசுக்குள் குண்டு:**

**ம**ட்டக்களப்பு புளியந்தீவுப்பகுதியில் பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்த எடுத்த இரகசிய முயற்சியொன்று முறியடிக்கப் பட்டது. மட்டக்களப்பில் உள்ள ஒரு தொகுதியின் யு.என்.பி அமைப்பாளர் என நம்பப் படும் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் இத் திட்டத்தின் சூத்திரதாரி என விசாரணைகள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு நகருக்கு வடக்கே வேலை பார்க்கும் இவர் நகரில்தான் வசிக்கிறார். ஆண்டவனின் கிருபையால்

# மட்டக்களப்பு புதினம்

## காதோடு காது



உதாரா

இவ்வழிவு தவிர்க்கப்பட்டதென மக்கள் பேசிக் கொள்ளுகின்றனர். போர்க்கருவி உட்பட, பல திடீர் தாக்குதல் செய்யும் குண்டுகளை இவர் கடத்தி வந்தமை தெரியவந்துள்ளது. தனது மோட்டார் சைக்கிளில் 'றெட்குரோஸ்' கொடி பறப்பதனால் ஆயுதக் கடத்தலுக்கு அக்கொடி உதவியது போலும்!

**★ கடிதக்குண்டுகள்:**

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் 'கடிதக் குண்டுகள்' கனத்தது போல் வேறு எதுவுமில்லை. அதனால் தபால் சேவகரிடம் காலையில் கடிதங்களை ஆவலுடன் வாங்க ஓடும் ஆர்வம் இல்லாது போயிற்று. மாறாக கடிதத்தைக் கண்டால் விட்டெறிந்து ஓடும் நிலவரம். களுவாஞ்சிக்குடி பிரதேச சபைத் தலைவர் கடிதக்குண்டை வாங்காமலே தப் பித்துக் கொண்டார். மண்டூர் பிரதேச சபைத் தலைவர் தபால் சேவகரிடம் வாங்கிப் பிரித்ததினால் வெடித்து சாவைத் தழுவினார். களுவாஞ்சிக்குடி பிரதேச சபையின் பிரதித் தலைவர் இருதடவைகளிலும் தப்பித்துக் கொண்டார். முதல் தடவை கடிதக் குண்டு வெடித்து உடல் காயம் காயவில்லை, மீண்டும் மட்டக்களப்பு தபாலக வழியாக இரண்டாவது குண்டு அனுப்பப்பட்டது. சந்தேகத்தின் பேரில் இக்கடிதம் பாதுகாப் புப் படையினரின் குண்டுப் பரிசீலனைப் பிரிவினரால் பிரதம தபாலகத்திற்கு அருகில் பரிசீலிக்கப்பட்டது. இதனால் மட்டக்களப் பில் கடிதங்களை தீண்டாப்பொருளாக மக்கள் பார்க்கின்றனர்.

**★ தீவிர பரிசோதனை:**

**பு**லிகளின் போர்த்தந்திரங்கள் மலிந் துள்ளதால் மாவட்டத்தின் பல்வேறு பரி சோதனை தடைமுகாம்களிலும் 'செக்கிங்' பலப்படுத்தப்பட்டுள்ளது. இதே வேளையில் மட்டக்களப்பு-கொழும்பு வழியில் புனாணை, வெலிக்கந்தை, நாவலடி தடைமுகாம்களில் 'பரிசீலிப்பை' தளர்த்தும்படி கோரிக்கைவிடப் பட்டுள்ளது. இத்தாமதத்தால் கொழும்புக்கு செல்லும் பயணிகள் பெருத்த சிரமத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

**★ புதிய காவல் அரண்கள்:**

**ம**ட்டக்களப்பின் பல்வேறு பிரதேசங்களி லும் பாதுகாப்புப்படையின் காவல் அரண் களை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படும். முன்னர் செயல்பட்ட இரு அரண்கள் திடீரென அகற்றப்பட்டதால் 'புலிகளின்' நடமாட்டம் அதிகரித்துள்ளமை அரசபடை நிர்வாகிகளால் அவதானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# "தமிழ் பிரதேச செயலகம் வேண்டும்"

(திருமலை நிருபர்)

"**க**ட்டைபறிச்சான், சேனையூர், கடற்கரைச் சேனை, சம்பூர், கூனித்தீவு, நவரத்தினபுரம், பள்ளிக்குடியிருப்பு நல்லூர், பாட்டாளிபுரம் ஆகிய கிராமங் களை உள்ளடக்கியதாக தமிழ்ப் பிரதேசச் செயலகப் பிரிவொன்றை ஏற்படுத்தித் தாருங்கள்," என அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார் பிரபல சமூகசேவகர் எஸ்.குணநாயகம் அவர்கள்.

இவர் தனது மகஜரில் மேற்படி கிராமங்களின் சனத்தொகை விபரங்களையும் இணைத்துள்ளார். இக்கிராமங்களில் 22075 மக்களைக் கொண்ட 4415 குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களில் பெரும்பாலோர் பின்தங்கிய பகுதியினர். தொடரான நிலப்பரப்பைக் கொண்ட இத் தமிழ்க் கிராமங்களை புதிய பிரதேசச் செயலகப் பிரிவாக அமைப்பதன் மூலம் இவர்கள் வாழ்க்கை முறையில் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திருகோணமலையில் தெரிவு செய்யப் பட்ட எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் இந்தக் கிராமங்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உறவினர்கள் என்ற வகையில் சம்பூர் வாசிகளிற் சிலர் மட்டும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரிடம் சலுகைகள் பெற்றுள்ளனர். மற்றும்படி கிராமங்களோ மக்களோ நன்மை எதுவும் அடையவில்லை.

# மட்டு மாநகர முதல்வரால் வீடுகள் கையளிப்பு

**இ**ந்திய வம்சாவளித் தமிழர்களாக இதுகாலவரை கணிக்கப்பட்டு வந்த பதினான்கு மாநகரசபை ஊழியர்களுக்கு- மாநகர முதல்வர் செழியன் ஜே. பேரின்ப நாயகம்- வீடுகளை உரிமையாக்கும் உறுதி களை வழங்கினார்.

"இந்திய வம்சாவளித் தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமை வழங்க வேண்டுமென மாணவனாக இருந்த காலத்தில் போராட்டம் நடாத்தியவன் நான்- தமிழ் மக்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகள் வழங்கப்படு தல் வேண்டும். பிரஜா உரிமைச் சட்டம் திருத்தப்படவேண்டும்- போன்ற ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து- அனைத்தி லங்கை தமிழ் மாணவர் பேரவை போராட்டம் நடாத்தியது. கூரிய அலகுகளினால் எங்கள் கரங்களைக் கிழித்து, பீறிட்ட இரத்தத்தில் கையெழுத்திட்டு உரிமைக்குரல் எழுப்பியவர் களில் ஒருவனான நான், அந்த மக்களுக்கு காணி உறுதிகளை, முதல்வர் என்ற அந்தஸ்தில் கரம் சேர்க்கக் கிடைத்த பெருவரம் என் வாழ்நாளில் கிடைத்த பெரும்பாக்கியமாகக் கருதுகிறேன்," என்று மாநகர முதல்வர் தெரிவித்தார்.

எல்லை வீதியிலுள்ள 5 வீடுகளில் குடியிருப்பாளர்களுக்கும், பார் வீதியில் ஒரு குடியிருப்பாளருக்கும், நாவற்குடாவில் 8 குடியிருப்பாளர்களுக்குமாக 14 வீடுகளின் உறுதிகள் வழங்கப்பட்டன.

மேலும் எல்லை வீதி, நாவற்குடா வீட்டுத் திட்டங்களில் எஞ்சியிருக்கும் 13 வீடுகளின் பிரதான குடியிருப்பாளர்கள் இறந்த காரணத்தாலும் சிலர் இங்கு இல்லாத காரணத்தாலும் அவ்வீடுகளுக் குரிய உறுதிகளை வழங்க முடியாத நிலையுள்ளது. ஆகவே அவர்கள் உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் இவ்வீடு களுக்கான உறுதிகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று மாநகர முதல்வர் தெரிவித்தார். கையளிக்கப் பட்ட வீடு ஒன்றின் பெறுமதி எட்டு இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# கோட்டக்கல்வி அலுவலகத்தில் குளறுபடி

(திருமலை நிருபர்)

**த**னது மனைவியின் சுகயீனம் காரணமாக வேலைக்கு வர முடியவில்லை என்று தந்தி கொடுத்தார் ஒரு சிற்றூழியர். தந்தி அடுத்த நாள் அலுவலகம் சேர்ந்தது. எனினும் அவசரக் குடுக்கை அதிகாரி அதற்குள் ளாகவே அந்தச் சிற்றூழியருக்கு பதவிஇடை நிறுத்த அறிவித்தல் கொடுத்து விட்டார்.

இந்த அதிவேகச் செயற்பாடு திருக் கோணமலைக் கோட்டக் கல்வி அலுவல கத்தில் நிகழ்ந்துள்ளது. சேவை நீடிப்பில் காலந்தள்ளும் இந்த அதிகாரியின் போக்கால் கல்வி அலுவலக வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தொழிற்சங்கவாதி ஒருவருடன் முரசு நிருபர் தொடர்புகொண்டு இதுபற்றி விசாரித்தபோது "தாபனக்கோவையைப் பிழையாக விளங்கிக் கொண்டதால் செய்யப்பட்ட மனிதாபிமானமற்ற செய்கை இது" எனக்கூறினார்.

அந்தச் சிற்றூழியர் இப்போது தனது பதவியை மீளப் பெறுவதற்காக விளக்கத் துடனான கடிதங்களை கல்வி மேலதிகாரி களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

ஊழியர்கள் மேல் இவ்வளவு விரைவான எதிர் நடவடிக்கை எடுப்பதில் ஆர்வமுள்ள அதிகாரிகள்-ஊழியர்கள், ஆசிரியர்களது சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் விடயத்தில் கண்ணை மூடி விடுகிறார்கள்.

ஆசிரியர்களின் இடர் கொடுப்பனவு இன்னமும் கொடுக்கப்படவில்லை. கடந்த ஆண்டு ஆங்கில தினப் போட்டிகளைக் கோட்டமட்டத்தில் நடத்திய ஆசிரியர்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வரை விடயத்தைக் கொண்டு சென்ற பின்தான் கொடுப்பனவுகளும் பெற்றுக் கொண்டனர். அதே ஆசிரியர்கள் இம் முறை ஆங்கில தினப் போட்டி நடத்துவதில் மிகக் கவனமாகவே செயற்பட உள்ளனர் என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# நொந்துபோன ஊழியர்கள்

**வீ**தி அபிவிருத்தி அதிகார சபையின் அமய ஊழியர்கள் தங்களுக்குரிய இடர்க் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளாததால் நொந்து போயிருக்கிறார்கள்.

"தெருவில்- வெயிலிலும் மழையிலும் நாங்கள் வேலை செய்கிறோம். அரச சுற்று நிருபம் எங்களுக்கும் இடர்க் கொடுப்பனவு வழங்கலாம் என அறிவுறுத்துகிறது. ஆனால் காற்றாடிக்குக் கீழிருந்து வேலை செய்ப வர்கள் தங்களுக்குச் சேர வேண்டியதைப் பெற்றுக் கொண்டு எங்களைக் கை விட்டுவிட்டார்கள்" என்று முரசு நிருபரிடம் தெரிவித்தனர்.

"நாங்கள் பலதடவை அதிகாரிகளிடம் மன்றாடி விட்டோம். பலனில்லை. இப்போது கையறு நிலையில் முரசிடம் வந்துள்ளோம்" என்றும் கூறினார்கள், அந்தத் தொழிலாளர்கள்.


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஜூலை 19 முதல் 31 வரை **Dr.P. ARUMUGAM**, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax:436439

ஒகஸ்ட் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், ஒகஸ்ட் 11, 12, 13 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOA விலும் சந்திக்கலாம்.



## பாகிஸ்தான் குவ்வத்தே பஹார்


இது முற்றிலும் இஸ்லாமிய முறைப்படி தயாரிக்கப்பட்டது.
இழந்த சக்தியை மீட்டுத் தரும்.
நரம்பு பலவீனத்தைப் போக்கும்.
சிந்தனா சக்தியை அதிகரிக்கும்.
உடம்புக்கு புஷ்டியைத் தரும்.
வயது வந்தவர்களுக்கு மிகச் சிறந்தது.
ஒரு மாத பாவனைக்குரியது V.P.P செலவுட்பட விலை ரூபா 190/=

QUATHE BAHAR
310/2 BULUGOHOTENNA
(Off Neerella Road)
AKURANA





## மலையாள மாந்திரீகம்



நம்பினார் கெடுவதில்லை என்ற நற்பெயரை 33 வருடமாக தன்னகத்தே கொண்டுள்ள எமது நிறுவனம் என்றென்றும் நற்பெயரை பெற்றுள்ளது. என்னையும் எமது நிறுவனத்தையும் நம்பி பணம் அனுப்பி வைப்போருக்கு அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவே செயல்படுகிறோம். வாடிக்கையாளர்களை கண்ட மாத்திரம், "இதுவே உங்கள் பிரச்சினை" என திட்டவட்டமாக என்னால் கூறமுடியும். இதையொட்டியே மக்கள் கூட்டம் குவிந்த வண்ணம் உள்ளது. வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எந்நேரமானாலும் என்னோடு உரையாட அதிக செலவில் T.O.D. CALL ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வெளிநாட்டவர் தங்கு தடையின்றி உரையாடலாம்.

தொடர்புகளுக்கு:-

மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
டாக்டர் பி.கே.சாமி (J.D.G.A.N.)JP.
பி.கே.சாமி அஸோசியட் பிரைவேட் லிமிடட்.
இல.162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் ரோட், கொழும்பு-13.

விசேட வெளிநாட்டு தொலைபேசி :-
TEL 00941344831 EXT. FRS
FAX 00941342464



விளம்பரப் பகுதி

## Bright ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர்.........................

விலாசம்.........................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO 11. TEL : 434770



## தேவை

முதற்தர பாதணி விநியோக ஸ்தாபனமொன்றிற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. பிணை (செக்கியூரிட்டி) அவசியம். மிகவும் நியாயமான தரகுகளும் சலுகைகளும் வழங்கப்படும்.

உடன் விண்ணப்பிக்கவும் :–

சிட்டி ஷூ கம்பனி (பிரைவேட்) லிமிட்
129, காலி வீதி,
பள்ளிமுல்லை,
பாணந்துறை.



## I. A. B. (London)

நீங்களும் முறைப்படி கணக்குப்பதிவியல் கற்று பெறுமதியான சான்றிதழ் பெறலாம்.

விரிவுரை :- இலங்கை / லண்டன் பட்டயகணக்கறிஞர்.

இடம்:- FTB கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தை அடுத்துள்ள விகாரை மண்டபம்

விண்ணப்பங்களும், பதிவுகளும் நேரில்
(ஞாயிறு மட்டும்)



## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S. மணி

மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030





www.padippakam.com

# காட்டில் நடந்த கரும்புலிகள் அணிவகுப்பு

ஜூலை 5ம் திகதி. வடக்கில் வன்னிப் பகுதியிலும், கிழக்கில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் கரும்புலிகள் தினத்தை அனுஷ்டித்துக்கொண்டிருந்தனர் புலிகள்.

அதேவேளை வன்னிக்காட்டில் உள்ள கரும்புலிகளின் தளமொன்றில் அணி வகுப்பைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார் பிரபாகரன்.

கிட்டத்தட்ட முன்னூறு கரும்புலிகள் வரை அணிவகுப்பில் கலந்துகொண்டு, பிரபாகரன் முன்பாக உறுதியுரை செய்து கொண்டதாக தெரியவருகிறது.

கரும்புலிகளின் கறுப்பு நிற சீருடையில் காணப்பட்டவர்களில் பாதிப்பேர் பெண் கரும்புலிகள்.

புலிகள் இயக்கத்தில் உள்ள உறுப்பினர்களில் தாமாகவே விரும்பி கரும்புலிகள் பிரிவில் சேர விரும்புவோர் தமது விருப்பத்தை பிரபாகரனுக்கு தெரிவிக்கிறார்கள்.

விருப்பம் தெரிவிப்போர் அனைவரும் கரும்புலிகளாக சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. நூறுபேர் பெயர் கொடுத்தால் அதில் பத்துப்பேர்தான் பிரபாகரனால் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

கரும்புலித் தாக்குதல் ஒன்றுக்கு முடிவு செய்யப்பட்ட பின்னர், யாரை அனுப்புவது என்று தெரிவு செய்வதிலும் ஒரு முறை இருக்கிறது.

துண்டுச் சீட்டில் பெயர்களை எழுதி குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுகிறவர்கள் தாக்குதலுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

வடக்கு-கிழக்குக்கு வெளியே அனுப்பப்படுகிறவர்கள் விடயத்தில் மட்டும் ஒரு மாற்றம்.

சிங்களம் பேசக்கூடியவர்கள், புதிய சூழ்நிலைக்கு பழக்கப்பட்டு நடந்துகொள்ளக் கூடியவர்கள் மட்டுமே தெரிவு செய்து அனுப்பப்படுகிறார்கள்.

கரும்புலியாக களம் செல்பவருக்கு பிரியாவிடை கொடுக்கும் நிகழ்ச்சியும் தவறாமல் நடைபெறுகிறது.

பிரபாகரனுடன் சேர்ந்து படம் எடுத்துக் கொள்வதும், கடைசிச் சாப்பாட்டை பிரபாகரனுடன் சேர்ந்து சாப்பிடுவதும் பிரியாவிடை நிகழ்ச்சியில் முக்கிய அம்சமாக இருக்கும்.

குறிப்பிட்ட கரும்புலியின் பிரியாவிடை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் யாவும் வீடியோ படமாகவும் எடுக்கப்படும்.

கரும்புலிகளுக்கு பிரபாகரன் சொல்லியனுப்பும் கடைசி வார்த்தை, "நீங்கள் முன்னால் செல்லுங்கள். நான் பின்னால் வருகிறேன்."

அடுத்து வரப்போகும் சில மணிநேரங்களில் அல்லது சில நாட்களில் தாம் சாகப் போகிறோம் என்பதற்கான சிறிதளவு சலனமேயில்லாமல் பிரியாவிடை பெறும் கரும்புலிகள் காட்சிதருகிறார்கள்.

கரும்புலிகள் பற்றிய வீடியோப்படங்கள் பலவற்றை புலிகள் வெளியிட்டுள்ளனர். உரிமை கோரப்படாத தாக்குதல்கள் மட்டும் விதிவிலக்கு.

அந்த வீடியோப்படங்களை பார்க்கும் எவருமே ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. புலிகள் தொடர்பான மாறுபாடுடைய கருத்துடையவர்கள் கூட நெகிழ்ந்துபோகின்றனர்.

சாவதற்கு என்றே தயாராக முன்வரும் கரும்புலிகள்தான் பிரபாகரனின் மன உறுதிக்கும் ஆதாரமாகத் திகழ்கிறார்கள் என்ற கூற்றில் உண்மை இருக்கிறது.

யாழ்-குடாநாட்டு தளப்பிரதேசம் கைவிட்டுப்போன பின்னர் முதலாவது கரும்புலி தாக்குதல் ஜூலை 4ம் திகதி நடைபெற்றது. அத்தாக்குதலுக்கு முன்னர் வன்னிக்காட்டில் கரும்புலிகளது தாக்குதல் ஒத்திகை ஒன்று நடந்திருக்கிறது.

வாகனத் தொடர்மீது தாக்குதல் நடத்துவது எப்படி என்று கரும்புலிகள் அணியினர் ஒத்திகை நடத்திப் பார்த்ததாகத் தகவல்.

அதன்பின்னரே கரும்புலிகள் அணியொன்று யாழ்ப்பாணத்திற்குள் புகுந்திருக்கிறது.

அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள், பிரமுகர்கள் யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி சென்று வந்தனர். அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் மக்களோடு மக்களாக நின்று புலிகளது உளவுப்பிரிவும் நோட்டமிட்டது.

யாழ்ப்பாணத்திற்கு சுலபமாக சென்றுவர முடியும். பாதுகாப்பு அச்சுறுத்தல் பெரியளவில் இல்லை என்ற எண்ணம் அரசதரப்புக்கு ஏற்படும் ஒரு தருணத்திற்காக புலிகள் காத்திருந்தனர். அப்படியான எண்ணம் ஏற்பட்டால்தான் விழிப்பும், தாக்குதலை எதிர்பார்க்கும் உஷார் நிலையும் தளர்ந்து காணப்படும்.

தாம் எதிர்பார்த்த தருணம் வந்துவிட்டதாக உளவுப்பிரிவு தகவல் கொடுக்க, தாக்குதலுக்கான உத்தரவு கரும்புலிகள் அணிக்கு

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**



கரும்புலிகள் அணிவகுப்பைப் பார்வையிடுகிறார் பிரபாகரன்

கிடைத்தது.

குறிப்பிட்ட அமைச்சரைத்தான் தாக்க வேண்டும் என்றில்லை. வாய்ப்பான சூழ்நிலையைப் பொறுத்து குறிவைக்கலாம் என்பதுதான் உத்தரவு.

எனினும் குறி தப்பிவிட்டது. ஒரு கரும்புலி பலியாகிவிட்டார். ஏனையோர் யாழ்ப்பாணத்தில் தான் மறைந்திருக்கின்றனர்.

கூட்டங்கள், நிகழ்ச்சிகள் நடைபெறும்போது கூட்டத்தோடு கூட்டமாக நிற்கும் கரும்புலி தன்னை வெடிக்கவைத்துக் கொள்ளுவார்.

அந்த உத்திதான் இதுவரை முக்கிய பிரமுகர்களுக்கு எதிரான கரும்புலித் தாக்குதல்களில் பிரயோகிக்கப்பட்டது.

அதனால், அத்தகைய உத்தி பழக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. எனவே, கூட்டம் நடைபெறும் வரை எதுவும் செய்யாமல் இருந்துவிட்டு, வாகனத்தில் ஏறிப் புறப்படும்போது தாக்குவது என்று புதிய உத்தி வகுத்தனர்.

வாகனத் தொடர் புறப்படும் ஏற்பாட்டில் கவனம் சிதறி இருக்கும்போது வாகனத்தை நெருங்குவது சுலபம் என்பதுதான் கணிப்பு.

எனினும், பாதுகாப்புக்கு சென்ற மோட்டார் சைக்கிள் பிரிவினரின் விழிப்புணர்வும், உஷார்நிலையும் புலிகளின் கணிப்பைப் பொய்யாக்கிவிட்டன.

தாக்குதல் தோல்வியடைந்தால் மீண்டும் முயற்சிப்பது என்பது புலிகளின் வழக்கம். அதனால் கரும்புலிகள் அணியின் தாக்குதல்களை யாழ்-குடாநாட்டில் எதிர்பார்த்தேயாக வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த மக்கள் திரும்பிச் செல்லும்போதே, அவர்களோடு கலந்து புலிகளின் பல பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் உள்ளே சென்றுவிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகள் பின்வாங்கிச் சென்றபோது தென்மராட்சியில் வைத்து ஒரு புலி உறுப்பினர் தனது நண்பரிடம் சொன்னாராம், "நான் வன்னிக்குச் செல்ல மாட்டேன். இங்கு நின்றுதான் சாவேன்."

யாழ்ப்பாணத்திற்கு மக்கள் திரும்பியபோது குறிப்பிட்ட புலிகள் இயக்க உறுப்பினரும் அழுக்கான உடையுடன், சைக்கிள் ஒன்றில் தட்டுமுட்டுச் சாமான்களுடன் சென்று கொண்டிருந்தாராம்.

யாழ்-குடாநாடு நீண்டகாலமாக புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலரை மக்களுக்குத் தெரியும். ஆனாலும் புலிகளின் உளவுப்பிரிவில் இருந்த பலரைத் தெரியாது.

யாழ்குடாநாட்டுக்குள் மக்கள் திரும்பி வந்தால் போதும் என்பதுதான் சூரியக்கதிர் 1 நடவடிக்கையின் பின்னர் படைத்தரப்பின் பிரதான நோக்கமாக இருந்தது. அதனால் யாழ்ப்பாணம் திரும்பிய மக்களை பிரச்சனையில்லாமல் உள்ளே எடுப்பதில்தான் கவனமெல்லாம் இருந்தது.

இப்போதுதான் பிரச்சனையே ஆரம்பம். மக்கள் யார், மக்கள் மத்தியில் மறைந்துள்ள புலிகள் யார் என்று இனம்காண்பது லேசுப்பட்ட வேலையல்ல.

மக்களிடம் இருந்தும் படையினருக்கு தகவல்கள் கிடைக்காமல் இல்லை.

நீண்டகாலமாக புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இருந்து ஏற்பட்ட அதிருப்திகள் காரணமாக படையினருக்கு உதவுவோர் இருக்கிறார்கள்.

ஏனைய இயக்கங்களில் இருந்த தமது பிள்ளைகள் புலிகளால் கொல்லப்பட்ட, பாதிக்கப்பட்ட சம்பவங்களால் கசப்போடு உள்ளவர்களும் புலிகள் மீண்டும் மேலோங்கி விடக்கூடாது என்று நினைக்கின்றனர்.

புலிகள் இயக்கத்தினர் தமது உறுப்பினர்களது குடும்பங்களை இரண்டு வகையாக பிரித்து வைத்திருந்தனர். பலியான உறுப்பினர்களது குடும்பங்கள் மாவீரர் குடும்பம். உயிரோடு உள்ள உறுப்பினர்களது குடும்பங்கள் போராளிகள் குடும்பம்.

அக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் சில நியாயமானவை. எனினும் சில குடும்பத்தினர் தமக்குள்ள அங்கீகாரம் காரணமாக சற்றுக் கர்வத்துடன் நடந்து அயல் குடும்பங்களின் அதிருப்தியையும் சம்பாதித்து வைத்திருந்தனர். இப்போது அக் குடும்பத்தினர்பாடு சிக்கலாகியிருக்கிறது.

குறிப்பிட்ட குடும்பத்தினர் தொடர்பான விலாவாரியான தகவல்கள் படையினருக்கு கிடைக்கின்றன.

இப்படி நடக்கலாம் என்று தெரிந்துதான் மாவீரர் குடும்பங்கள், போராளிக் குடும்பங்கள் பல வன்னிக்கு போய்விட்டன.

புலிகள் இயக்கத்தில் இருந்து தம் பிள்ளைகள் விலகி வெளிநாடு சென்றுவிட்டதை ஆதாரபூர்வமாக நிரூபிக்கக்கூடிய குடும்பங்கள் பல யாழ்ப்பாணம் திரும்பியிருந்தன. அவர்களிடமும் விசாரணைகள் நடந்திருக்கின்றன. அவர்கள் கூறும் தகவல்களும் சரிபார்க்கப்படுவதாகத் தெரிகிறது.

அதேவேளை இருதரப்பின்மீதும் பட்டுக் கொள்ளாமல் தாமுண்டு, தம் பாடுண்டு என்று இருப்பவர்கள்தான் யாழ்குடாநாட்டில் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். ஒரு கட்டத்தின்பின்னர் இவர்களில் கணிசமானவர்களிடம் மாற்றம் ஏற்படலாம்.

தாம் எந்தத் தரப்பால் நேரடியாகப் பாதிக்கப்படுகிறார்களோ, அந்தத் தரப்புக்கு எதிரான தரப்பினரை மௌனமாக ஆதரிப்பவர்களாக அவர்கள் மாறலாம்.

எனினும் தற்போதைக்கு அவர்களால் இரு தரப்புக்குமே பாதகமுமில்லை. பெரிய சாதகமுமில்லை.

இதேவேளை புலிகளின் தாக்குதலால் படையினர் ஆத்திரமூட்டப்படக்கூடும் என்ற அச்சம் யாழ்குடாநாட்டு மக்களிடம் பரவலாகக் காணப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையானது புயலுக்கு முந்திய அமைதிதான் என்று புரிந்தாலும், இந்த அமைதியாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நீடிக்க வேண்டும் என்று பரவலான ஆதங்கம் மக்களிடம் இருக்கிறது.

இப்போதுதான் மீண்டும் தமது வீடுகளை குடியிருப்பதற்கு ஏற்றவகையில் தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் மீண்டும் வேட்டொலிகள் கேட்பதை நினைத்துப் பார்க்கவே அஞ்சுகிறார்கள்.

ஆனால் மக்களின் இந்த எதிர்பார்ப்பு புலிகளுக்கு சம்மதமில்லாத விஷயம்.

படையினர் உங்களுக்கு உதவ வரவில்லை. புலிகள் இல்லாத ஊரில் குடியிருக்க நினைப்பது சாத்தியமுமில்லை. என்பதை யாழ் மக்களுக்கு எவ்வளவு விரைவாக நிரூபிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக நிரூபிப்பதுதான் புலிகளின் விருப்பம்.

ஆனால், பொதுமக்களின் விருப்பம் புலிகள் இல்லாத ஊரில் குடியிருப்பதல்ல. தெருவில் கிடக்காமல், தமக்கென்று உள்ள ஒரு கூட்டுக்குள்ளோ, குடிசையிலோ வாழ்வதுதான். கூழோ, கஞ்சியோ குடித்தாயினும் தமது கூட்டில் வாழவே அவர்கள் விரும்பினார்கள். அதனால்தான் திரும்பிச் சென்றனர்.

புலிகளைப் பொறுத்தவரை அந்த வாழ்க்கை அர்த்தமில்லாதது. புதுவை இரத்தினதுரையின் கவிதைப்படி, "இழிநிலை சுமக்கும் தமிழர்களாக இருப்பதிலும், பழிதுடைக்க எழுவதே" சிறப்பு.

வன்னியில் நடைபெற்ற கரும்புலிகள் அணிவகுப்புக்கு பின்னர் புதுவை இரத்தினதுரை எழுதியிருப்பது இது:

**"புலிகள் கறுப்பு**
**பிரபாகரன் நெருப்பு.**
**விரைவில் உணர்வாய் பகையே.**
**உன் வெற்றியெல்லாம் கனவே!"**

கரும்புலித்தாக்குதலுக்கான முன்னெச்சரிக்கையாக இதனைக் கருதலாம்.

★★★

தி.மு.க.வின் நிலைப்பாடு இலங்கைத் தமிழர் விவகாரத்தில் எப்படியிருக்கும் என்று நாம் கணித்தது தவறாகவில்லை.

புலிகளுடன் மட்டுமல்ல ஆயுதத்தை தொட்ட எந்த இயக்கத்தோடும் தமக்கு ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்று காட்டுவதில் தான் கலைஞரும், தி.மு.க. தலைமையும் மிகுந்த அக்கறையாக இருப்பது தெரிகிறது.

போதாக்குறைக்கு ஜெயலலிதாவும் 'தமிழ் நாட்டில் புலிகளின் ஊடுருவல்' என்று நீண்ட அறிக்கை ஒன்றை விடுத்தார். உடனே செயலில் இறங்கினார் தமிழக முதலவர். பாதுகாப்பு மாநாடு நடத்தி, கரையோர பாதுகாப்பை இறுக்குமாறு உத்தரவும் போட்டுவிட்டார்.

இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு தமிழக கல்லூரிகளில் அனுமதி. விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க கடும் உத்தரவு. தான் ஒரு தேர்ந்த நேர்த்தியான அரசியல் வாதியென்பதை அதன்மூலமாகவும் கலைஞர் நிரூபித்திருக்கிறார்.

இதேவேளை 'குமுதம்' சஞ்சிகைக்கு தி.மு.க.வின் உயர் தலைவர் முரசொலி மாறன் கொடுத்துள்ள பேட்டிதான் பெரும் முரண்பாடாக இருக்கிறது.

தனது பேட்டியில் மாறன் சொல்லியுள்ள முக்கிய விஷயங்கள் இவை.

**1. இலங்கைத் தமிழர்கள்தான் தமக்கு எத்தகைய தீர்வு நல்லது என்பதை தீர்மானிக்க வேண்டும்.**

**2. இந்தியாவை புலிகள் பகைத்துக் கொண்டார்கள். உதவச் சென்றபோது வேண்டாம் என்று திருப்பி அனுப்பி விட்டார்கள். இனி நாம் தலையிடும் அவசியமில்லை.**

இந்த இரண்டு கருத்துக்களில் முதலாவது கருத்து மிகச் சரியானது.

இரண்டாவது கருத்து சரியா தவறா என்பதைவிட, அது மாறனிடம் இருந்து வெளிப்பட்டிருப்பதுதான் வியப்பளிக்கிறது.

இலங்கைத் தமிழர்கள் சார்பாக இந்தியப் படையை அனுப்புமாறு யாரும் கோராதபோதே, இந்தியப்படையை அனுப்புங்கள் என்று கோரிக்கை விட்டவர் கலைஞர்.

அப்போது அதனை எம்.ஜி.ஆர். எதிர்த்தார். படை அனுப்பத் தேவையில்லை என்று பிரபாகரன் மூலமாக அறிக்கையும் விடச்செய்தார்.

பின்னர், இந்திய இலங்கை ஒப்பந்தத்தை தொடர்ந்து இந்தியப் படை அனுப்பப்பட்டபோது எம்.ஜி.ஆர். எதிர்க்கவில்லை. கலைஞர் எதிர்த்தார்.

இந்தியப்படை தமிழர்களை காப்பதற்காகச் செல்லவில்லை. அவர்களின் போராட்டத்தை அடக்கவே சென்றிருக்கிறது. எனவே இந்தியப்படையை திருப்பி அழைக்க வேண்டும் என்று உரத்துக் குரல் கொடுத்தவர் கலைஞர்தான்.

அக் கட்டத்தில்தான் கலைஞர்-புலிகள் உறவும் மலர்ந்தது. வளர்ந்தது.

இந்தியப் படையின் ஒரு பிரிவு சென்னையில் போய் இறங்கியபோது, அதனை வரவேற்கவே செல்லாமல் புறக்கணித்தார் அப்போது முதல்வராக இருந்த கலைஞர்.

ஆக, அப்போது தி.மு.க.வும் இந்தியப் படைக்கு எதிரான புலிகளின் நிலைப்பாட்டை வரவேற்றது. ஆதரித்தது. அதாவது இந்தியப் படை உதவச் செல்லவில்லை, உபத்திரவம் செய்யச் சென்றது என்பதுதான் தி.மு.க.வின் உறுதியான கருத்து.

ஆனால் இப்போது மாறனின் பேட்டி கடந்தகால வரலாற்றுக்கு நேர்மாறானதாக இருக்கிறது.

இந்தியப்படையை திருப்பி அழைத்த வி.பி.சிங் அரசில் மாறனும் அமைச்சராக இருந்தவர்.

'பகைச்சுக்கிட்டாங்க நாம் என்ன செய்வது' என்கிறார் அல்லவா மாறன்.

எம்.ஜி.ஆர்.உயிருடன் இருந்தபோது பிரபாகரன் கலைஞரை நாடவில்லை. அது மட்டுமல்ல ரெலோ தலைவர் சிறி சபாரத்தினத்தை புலிகள் கொலை செய்ததையும் கலைஞர் கண்டித்திருந்தார்.

பின்னர் கலைஞர் புலிகளை ஆதரித்த போது ஒரு கேள்வி எழுந்தது. "முன்னர் உதாசீனப்படுத்திய புலிகளை கலைஞர் ஆதரிக்கலாமா?" அதற்கு கலைஞர் ஒரு கூட்டத்தில் பதில் சொன்னார், "விரல் கண்ணைக் குத்தியது என்றால் விரலை வெட்டியா எறிகிறோம்? இல்லையே!"

இது கடந்தகாலம். புலிகளை ஆதரித்தால் தமிழகத்திலும் வரவேற்புக் கிடைத்த காலம்.

இப்போது பேச்சு மாறிவிட்டது. காரணம், காலம்மாறிவிட்டது. மாறன் கடந்த காலத்தை மறந்திருக்க மாட்டார். ஆனால் புலிகளுடன் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்று காட்டுவதற்கு அவசரமாக காரணம் தேடியிருக்கிறார். அகப்பட்டதை எடுத்து வீசியிருக்கிறார்.

இந்த நிலைக்கு தாமும் ஒரு காரணம் என்பதை புலிகளும் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



தேனக வெகுஜனப் பிரதிநிதி ஒருவரின் பேச்சும், போக்கும் பிடிக்காமல் தான் ரெண்டு எழுத்தார் முதல் எச்சரிக்கை விட்டவையாம். பிரதிநிதியோ, ஆள் மாறாட்டம் நடந்துபோச்சு, யாரோ என்று நினைச்சு தவறுதலாக சுட்டுப் போட்டினம் எண்டு சொல்லித் திரியுறாராம். என்றாலும் ரெண்டு எழுத்தாரைப் பற்றி அவர் இப்படி குறைத்து மதிப்பிடக்கூடாது. கண் கடை தெரியாமல் சுட்டுத்திரியிற ஆட்கள் எண்டமாதிரியல்லோ சொல்லுறார்.

நான் போனவாரம் சொன்னது சரியாகப் போச்சுப் பார்த்தியளோ! யாழ் செல்ல புத்தி சீவிகள் ஒரேயடியாக மறுப்பாம். எல்லாம் ஒரு குண்டுசெய்த வேலைதான். அதிகாரம் போதாது தீர்வுப் பொதியில் எண்டு காரணம் சொல்லுகினமாம். உதுதானுங்கோ கலாதி. குண்டு வெடிக்க முன்னர் அந்த சப்ஜெக்ட் அவைக்கு தெரியேல்லைப் பாத்தியளோ? குண்டு வெடிச்சவுடனை கொள்கை முரண்பாடு பொத்துக் கொண்டு வெளியிலை வந்திட்டுது பாத்தியளோ!

தலைநகரில் பிடிபட்ட ரெண்டு எழுத்து உறுப்பினர் கடகடவென்று எல்லாவற்றையும் சொல்லிப் போட்டாராம். வீடுகள் சில மாறி மாறி அவர் தங்கியிருந்த போதும், அந்த வீடுகளில் இருந்த ஆட்களும் சந்தேகப்படும் அளவுக்குத்தான் நடந்துகொண்டாராம். அவர் கரும்பிரிவைச் சேர்ந்தவர் அல்ல. உளவுப் பிரிவைச் சேர்ந்தவராம்.

கூட்டான கட்சிக்குள் கிழக்கை பிரிக்கும் கோரிக்கையை எழுப்பிய கிழக்கின் வெகுஜனப் பிரதிநிதிகளில் ஒருவர் பல்டி அடிச்சப்போட்டாராம். உள்ளே கதைச்ச விஷயம் வெளியே தெரிந்ததும், அது ரெண்டு எழுத்தார் காதில் விழுந்ததும்தான் அண்ணர் அட்டகாசமாக ஒரு பல்டி அடிக்கக்காரணமாம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்றரீதியில் பிரித்தும், குணவிசேச பிரிப்புக்காட்டியும் குறிப்பிட்ட பிரதிநிதி பலருடன் பேசிய விபரங்கள் வெளியாகியிருக்கு. பெரிய சிங்கம் இருக்க சின்ன சிங்கம் ஏன் கர்ஜித்து பார்க்குது எண்டு கட்சிக்காரர் சிலரே கேள்வி எழுப்புகினமாம்.

திருவான மலையின் தங்கமானவர் கூட்டமொன்றில் பேசும்போது, நான் வெளியிட்ட தகவல் ஒன்று தொடர்பாக பிரஸ்தாபித்தவராம். தாம் கூறியதை தவறாக விளங்கிக்கொண்டு பிழையாக வெளியான செய்தி எண்டவராம். கூட்டத்தில் இருந்த ஒருவர் தன் நண்பரிடம் கொஞ்சம் சத்தமாக சொன்னாராம் இப்படி: "தவறாக விளங்கிக்கொண்டது நாங்கள் தான் அதனால்தானே இவரை சபைக்கு அனுப்பிவைச்சனாங்கள்" எண்டாராம்.

போனவாரம் கொழும்பு செய்த 'பாக்கியம்' உலக அழகியின் விஜயம். ஆடை விளம்பரத்துக்காக நிறுவனம் ஒன்று கொடுத்த கட்டைச் சட்டையுடன் உலக அழகிக்கு இருக்கவும் முடியேல்லை. நிற்கவும் முடியேல்லை. தொலைக் காட்சியும் அதனை சென்சார் செய்யாமல் திவ்வியமாய் காண்பித்தது. அழகிக்கு நடந்த வரவேற்பில் குறிப்பிடத்தக்க விஷயம் அமைச்சர் பெருமக்கள் தவறாமல் ஆஜராகி பவ்வியமாய் காட்சியளித்தது. நாட்டை யுத்த நிலையில் வைத்திருக்க வேண்டும். நோ கேளிக்கை, நோ வேடிக்கை எண்டு சொன்ன கைத்தொழிலுக்கு பொறுப்பானவரும் அழகியின் வரவேற்பில் காணப்பட்டதும் மிக ஆழமாய் குறிப்பிடத்தக்கது. போதாக்குறைக்கு தகவல் தொடர்புக்கு பொறுப்பானவருக்கும் போனஸ் கின். பாவம் அவர் ஒரு பிரம்மச்சாரி. ஏதோ அழகியின் புண்ணியத்திலாவது அவர் மனம் மாறினால் நல்லது எண்டு சொல்லுகினமாம் அவர் நலனில் அக்கறையுள்ளவர்கள். ஆனால் அவர் ஒன்றும் விசுவாமித்திரர் அல்ல. எந்த மேனகையாலும் அசைக்க ஏலாது.

கொழும்பு நகரபிதாவின் துணிச்சலைப் பாராட்டத்தான் வேணும். பச்சைக்கட்சியின் நழுவல் போக்கைச் சாடியிருக்கிறார். உள்ளே எவ்வளவோ தரம் எடுத்துச் சொல்லியும் கேட்க வேண்டியவர்கள் கேட்கவில்லை. அது தான் வெளியே தனது கருத்தைச் சொல்லியிருக்கிறார். பச்சைக் கட்சிக் குள் உள்ளவை தன்மீது பாயச்சல் நடத்தலாம் எண்டு தெரிந்தும் பேசியிருக்கிறார். நடவடிக்கை எண்டு வந்தால் எதிர்கொள்ளத் தயாராகத்தான் இருக்கிறாராம்.

யாழில் பல வீடுகளுக்குள் ரெண்டு எழுத்தார் பங்கர் வெட்டியிருக்கினமாம். சனம் இடம்பெயர்ந்த பின் வீடுகளுக்குள் நடந்த வேலை அது. இப்ப திரும்பிவந்த சனத்துக்கு பங்கர் மூடும் வேலை. வெறுமையாக இருக்கும் வீடுகளில் இரவு நேரத்தில் ரெண்டு எழுத்தார் வந்து குடிகொண்டுவிட்டு காலையில் திரும்பிச் செல்லுகினமாம்.

யாழில் சமீபத்தில் ரெண்டு எழுத்தார் கடும் 'டமார்' நடத்திய போது, மறுதரப்பு டுமீல், டுமீல் செய்ததிலும் பலர் போய்ச்சேர்ந்தனராம். அந்தக் கணக்கும் 'டமார்' விளைவில்தான் கேட்கப்பட்டதாம்.

இந்தவாரம் ஒரு தமாசு. பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் காலத் தமாசு.

**ஒரு பெண் சர்ச்சிலைப் பார்த்து, "எனக்கு உமது மீசையும், அரசியலும் பிடிக்கவில்லை." என்றாள்.**

**சர்சில் உடனடியாக அமைதியாகச் சொன்னது இது: "நல்லது சீமாட்டி! அவை இரண்டோடும் தொடர்பு கொள்ளவேண்டிய அவசியம் உங்களுக்கு ஏற்படாது."**



படிப்பகம்




அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

### இடைநிறுத்தம்

ஈரோஸ் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் மைக்கேல். யாழ்ப்பாணத்தில் நாவாந்துறையைச் சேர்ந்தவர்.

ஈரோஸ் இயக்க தலைமையோடு மைக்கேலுக்கு பிரச்சனை ஏற்பட்டது.

# ஒரே பெயரில் இரண்டு இயக்கங்கள்!

தமிழ்நாட்டில் தங்கச்சிமடத்தில் இருந்த ஈரோஸ் முகாமுக்கு மைக்கேல் தான் பொறுப்பாக இருந்தார். இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஆயுதங் களும் அந்த முகாமில் வைக்கப்பட்டுத் தான் தளத்திற்கு அனுபப்பபடுவதுண்டு.

தங்கச்சிமடத்தில் ஈரோஸ் முகா முக்கு அருகில்தான் புலிகள் இயக்கத்தின் முகாம் ஒன்றும் இருந்தது.

மைக்கேலின் பிரச்சனை புலிகளுக் கும் தெரியும். உள் பிரச்சனையால் விரக்தி நிலையில் இருந்த மைக்கேல் சக இயக்கங்களுக்கும் ஈரோஸ் உள்பிரச்சனை தொடர்பாக கூறியிருந்தார்.

மைக்கேலின் போக்கு ஈரோஸ் தலை மைக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. அவரை சென்னைக்கு அழைத்து விளக்கம் கேட்டனர்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இயக்க நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கியிருக்கு மாறு மைக்கேலுக்கு கூறப்பட்டது.

தங்கச்சிமடத்துக்கு செல்ல வேண டாம். சென்னையிலேயே இருங்கள் என்று மைக்கேலுக்கு கூறிவிட்டார் சங்கர்ராஜு.

தன்னை வெட்டிவிடப் பார்க்கிறார் கள் என்று நினைத்தார் மைக்கேல். 'தன்னை கட்டுப்படுத்தும் தகுதி சென்னை யில் உள்ளவர்களுக்கு கிடையாது. தளத் தில் உள்ள தோழர்கள் தனது பக்கம்தான் இருக்கிறார்கள் என்று கூறினார் மைக்கேல்.

சென்னையில் உள்ள ஏனைய இயக்க தலைவர்களைச் சந்தித்து தனது நிலைப் பாட்டை கூறினார்.

### நடுக்கடலில்

சென்னையில் இருந்து புறப்பட்டு நேராக தங்கச்சிமடத்துக்குச் சென்றார் மைக்கேல்.

தங்கச்சிமடம் முகாமில் இருந்தவர்கள் பலர் மைக்கேலுக்கு விசுவாசமானவர்கள்.

அக்கட்டத்தில் இந்திய அரசாங்கத் தால் வழங்கப்பட்ட ஆயுதங்கள் தங்கச்சி மடம் முகாமில்தான் வைக்கப்பட்டிருந் தன.

முன்பு வழங்கப்பட்ட ஆயுதங்களை விட புதியரக ஆயுதங்களையும் அக்கட்டத் தில்தான் இந்திய அரசு கொடுத்திருந்தது.

மோட்டார்கள், 90 கலிபர் துப்பாக்கி கள் 2 உட்பட பெருந்தொகையான ஆயு தங்கள் அங்கு இருந்தன. மைக்கேல் ஆயுதங்களை கணக்கிட்டுப்பார்த்தார், தனியாக ஒரு இயக்கம் நடத்துவ தானால்கூட தாராளமாகப் போதும்.

சகல ஆயுதங்களையும் படகொன்றில் ஏற்றினார்; நம்பகமான சிலருடன் புறப் பட்டார். ஈரோஸ் உறுப்பினரும், பட கோட்டியுமான மன்னாரைச் சேர்ந்த வீராதான் படகை செலுத்தினார்.

படகு புறப்பட்டு கடலில் சென்று கொண்டிருந்தபோதுதான் தொலைத்- தொடர்பு சாதனம் மூலமாக தலைமைக்கு தகவல் சொன்னார் மைக்கேல்.

மைக்கேல் ஆயுதங்களுடன் புறப்பட்டு விட்ட செய்தி சென்னையில் இருந்த ஈரோஸ் தலைமைக்கு பலத்த அதிர்ச்சி. அவர்கள் தளத்தில் இருந்தவர்களுக்கு அவசரமாகச் செய்தி அனுப்பினார்கள்.

நேராக மன்னார் சென்று இறங்குவது தான் மைக்கேலின் திட்டம். மன்னாரில் ஒரு தளத்தை வைத்துக் கொண்டு பின்னர் அடுத்த கட்டத்தைப் பற்றி யோசிக்கலாம் என்பதுதான் அவரது நினைப்பு.

ஆயுதங்களோடு மைக்கேல் புறப்பட்ட போதே தங்கச்சி மடத்தில் இருந்த புலிகளுக்கு அது தெரிந்துவிட்டது.

மைக்கேல் குழுவினர் சென்ற படகு நடுக்கடலில் வைத்து புலிகளின் படகொன் றால் வழிமறிக்கப்பட்டது.

படகில் இருந்தவர்கள்மீது சரமாரியாகச் சுட்டனர் புலிகள், மைக்கேல், வீரா உட்பட படகில் இருந்தவர்கள் அனைவரும் பலியா னார்கள்.

அவர்களது படகில் இருந்த ஆயுதங் களை தமது படகில் ஏற்றினார்கள் புலிகள்.

ஆயுதங்கள் அனைத்தும் ஏற்றப்பட்டதும் மைக்கேல் குழுவினரின் படகு தகர்க்கப் பட்டது. நடுக்கடலில் படகு எரிந்துகொண்டி ருந்தது.

தங்கச்சிமடத்தில் இருந்து புறப்பட்ட மைக்கேல் குழுவினர் எங்கே போய் இறங்கி னார்கள்? என்ன செய்கிறார்கள்? என்று அறிய முடியாமல் யோசித்துக் கொண்டி ருந்தது ஈரோஸ் தலைமை.

சில நாட்களின்பின்னர்தான் விஷயம் மெல்லக் கசிந்து, நடுக்கடல் விபரீதம் தெரியவந்தது.

புலிகளுடன் முரண்படுவதை விரும்பாத தால் கடலில் நடந்த சம்பவம் பற்றி ஈரோஸ் வெளியே சொல்லவில்லை.

ஈரோசுக்குள் மைக்கேல் பிரச்சனை பட்டது வெளியே தெரியும் என்பதால், மைக்கேலைக் காணவில்லை என்றதும் ஈரோஸ்மீதுதான் ஏனைய இயக்கங்கள் சந்தேகப்பட்டன.

ஈரோசிற்குள் நடந்த உட்கொலை என்று அதனைக் கணக்கில் சேர்த்துக்கொண்டனர்.

மைக்கேல் சுறு சுறுப்பான ஒரு போராளி. நாவாந்துறையில் இருந்து பலரை ஈரோசில் இணைத்தார். அரசியல் வகுப் புக்கள் நடத்தி ஈரோசிற்கு உறுப்பினர் திரட்டலில் தீவிரமாக செயற்பட்டவர்களில் முன்னணியில் இருந்தவர் மைக்கேல்.

என்ன நடந்தது, எப்படி மறைந்தார் என்றே மக்களுக்குத் தெரியாமல் அவரது மரணம் நிகழ்ந்ததுதான் மாபெரும் சோகம்.

### ஈரோசின் தனித்துவம்

கடந்த சில வாரங்களாக ஈரோசின் இராணுவ நடவடிக்கைகள் பற்றி விபரித் திருந்தேன்.

ஈழப்போராளி அமைப்புகளுக்குள் ஆயுதப் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்தி யதில் ஈரோஸின் பங்கு குறிப்பிடத்தக்க தாயிருக்கிறது.

1983 இல் ஏனைய இயக்கங்கள் சில விதிமுறையற்ற வகையில் உறுப்பினர் திரட்டலில் ஈடுபட்டன. சக்திக்கு மீறிய வகை யில் உறுப்பினர் பெருக்கம் ஏற்பட்டு, அதுவே பின்னர் ஒழுக்க மீறல்கள், கட்டுப்பாடற்ற தன்மை என்பவற்றுக்கும் காரணமாயின.

ஈரோஸ் அந்த அலையில் சிக்கிக் கொள்ளாமல் இருந்தது. 1987 வரை உறுப் பினர் தொகையைப் பொறுத்தவரை ஈரோஸ் ஏனைய இயக்கங்களைவிட பின்னணியில் தான் இருந்தது.

அதே சமயம் குண்டுவெடிப்புக்கள், வெற்றிகரமான கண்ணிவெடித் தாக்குதல்கள் மூலம் ஈரோஸ் முன்னணியில் இருந்தது.

உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்தள வில் இருந்ததும் ஈரோஸ் கெட்ட பெயரை சம்பாதிக்காமல் தப்பிக்கொண்டதற்கு ஒரு பிரதான காரணம் எனலாம்.

உறுப்பினர்களது எண்ணிக்கையை வைத்து மட்டுமே ஒரு இயக்கத்தின் ஆற்றலை மதிப்பிட முடியாது என்பதற்கு ஈரோஸ் ஒரு உதாரணம்.

ஈரோஸ் இயக்கத்தின் வெற்றிகரமான நடவடிக்கைகளில் பங்குகொண்ட பலர் தற்போது ஒதுங்கிச் சென்றுவிட்டனர்.

ஈ.பி.ரி வரதன் கிளிநொச்சியில் விவ சாயம் செய்துகொண்டிருக்கிறார். ஈரோஸ் இயக்க இராணுவ துணைத் தளபதியாக இருந்த கரண் வெளிநாட்டில் இருக்கிறார். மலையகத்தைச் சேர்ந்த முன்னணி உறுப் பினர்களான கிருஷ்ணன், வரதன் ஆகியோர் ஒதுங்கிவிட்டனர். லொறிக் குண்டோடு கைதான ஹென்றி வெளிநாட்டில் இருக் கிறார்.

மட்டக்களப்பு, திருமலை, யாழ்ப்பாணம், மன்னார் பிராந்தியங்களில் ஈரோஸ் பொறுப் பாளர்களாக இருந்து முக்கிய நடவடிக் கைகளை மேற்கொண்டவர்கள் ஒதுங்கி வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர்.

ஈரோஸ் இயக்கம் 1987ற்கு பின்னர் மேற்கொண்ட நிலைப்பாடுகள் காரண மாகவே தனது சக்திமிக்க முன்னணிப் போராளிகளை இழந்தது.

### ஒரேபெயரில்

அதேபோல 1987 இல் ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்பும் சமரசத்திற்கே இட மில்லாதவகையில் இரண்டாக உடைந்தது.

டக்ளஸ்தேவானந்தா தலைமையில் செயற் பட்டவர்கள் தாமே உண்மையான ஈ.பி.ஆர். எல்.எஃப். என்று உரிமை கோரினார்கள்.

டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான அணியினருடன் எவ்விதமான தொடர்போ, உறவோ வைத்துக்கொள்ளக்கூடாது என்று பத்மநாபா தலைமையில் செயற்பட்டவர்கள் தமது அணிக்குள் ஒரு சுற்றறிக்கை வெளி யிட்டனர்.

பத்மநாபா உட்பட அவரது தலைமை யில் செயற்படும் உறுப்பினர்கள் ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கத்தில் இருந்து வெளி யேற்றப்பட்டுள்ளார்கள் என்று டக்ளஸ்

# உறவுகளும் - பிரிவுகளும்

தேவானந்தா அணியினர் ஒரு அறிக்கை வெளியிட்டனர்.

ஒரே பெயரில் இயங்கினால் நாம் யாரை அங்கீகரிப்பது? எனவே பெயரை மாற்றிக் கொள்ளுங்கள் என்றனர் இந்திய 'றோ' அமைப்பினர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்பது பத்மநாபா தலைமையிலான அமைப்புத்தான் என்பதே 'றோ' வின் நிலைப்பாடாக இருந்தது.

1987 இல் மீண்டும் இயக்கங்களுக்கு பயிற்சியும், ஆயுதமும் வழங்க முடிவு செய்தது றோ.

### புளொட் பிரிவு

இதேவேளையில் புளொட் அமைப்பில் இருந்து பிரிந்து ஈஸ்வரன், பரந்தன் ராஜன் ஆகியோர் தலைமையில் ஒரு அணியினர் இயங்கிக் கொண்டிருந்தனர்.

புளொட்டும் இரண்டாக உடைந்து இரு பிரிவினருமே தம்மை புளொட் என்றே அழைத்துக்கொண்டனர்.

சென்னையில் இரு பிரிவினருக்கும் இடையே துப்பாக்கி வேட்டுக்களும் பரி மாறப்பட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இரண்டாகப் பிரிந்த போதும் தமக்குள் ஆயுத மோதல் எதிலும் ஈடுபடவில்லை.

புளொட்டில் இருந்து பிரிந்தவர்கள் மத்தியில் ஒத்த கருத்து காணப்படவில்லை. பரந்தன் ராஜனை தமக்கு பாதுகாப்பாக பயன்படுத்தவே நினைத்தனர். ஒருவரோடு ஒருவர் நம்பிக்கையில்லாத அணியினராகவே அவர்கள் இருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் பிரிவைப் பொறுத்த வரை இரண்டுபிரிவுமே தமது தலைமைமீது விசுவாசம் கொண்டதாகவே இருந்தது.

இந்நிலையில் பரந்தன் ராஜனை ஓரங்கட்ட நினைத்த ஈஸ்வரன் குழுவினர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான அணி யினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இரண்டு அணியினரும் ஒரே இயக்கமாக மாறுவது, புதிய பெயரில் செயற்படுவது என்ற அடிப்படையில் பேச்சு நடந்தது.

ஈஸ்வரன் குழுவினர் நம்பிக்கையற்ற ஒரு குழுவினர் என்பதால் அவர்களோடு ஒன்றாகச் செயற்படுவது சாத்தியமில்லை என்று டக்ளஸ் தேவானந்தா அணியினர் கருதினார்கள். ரமேஷ், இப்ராகிம் போன்ற வர்கள் ஈஸ்வரன் குழுவினரை நம்பமுடியாது என்று கூறினார்கள்.

சூழ்நிலை கருதி கூட்டாக செயற்படலாம். விதிகளை மீறினால் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று டக்ளஸ் தேவானந்தா கூறினார். அவரது முடிவின்படி பேச்சுக்கள் நடந்தன.

### கூட்டமைப்பு

இரு அணியினரின் கூட்டமைப்பாக ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ENDLF) உருவானது.

ஒரே பெயரில் இயங்கிய போதும் தனியாகவும், தனித்துவமாகவுமே இரு பிரிவினரும் செயற்பட்டனர்.



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

முகாம்களை ஒன்றாக்க வேண்டும். ஒரே அணியாக செற்படவேண்டும் என்று ஈஸ்வரன் குழுவினர் தொடர்ந்து வற்புறுத் தினார்கள்.

அப்படியானால்தான் தமது குழுவில் உள்ள பரந்தன் ராஜனின் செல்வாக்கை குறைக்க லாம் என்பது அவர் களின் ஆவலாக இருந்தது.

எனினும் டக்ளஸ் தேவானந்தா அணி யினர் அதனை விரும்பவில்லை.

அதே நேரத்தில் 'றோ' பயிற்சிக்காக ஆட்கள் கேட்டது. இரண்டு அணியிலிருந்தும் ஆட்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட்டனர்.

பயிற்சி முடித்து உறுப்பினர்கள் திரும் பியதும் ஆயுதம் வழங்கப்பட்டது.

ஈ.என்.டி.எல்.எஃப். என்ற பெயரில் ஆயுதங்கள் பொதுவாக வழங்கப்பட்டது. ஆயினும் அதனை பிரித்தெடுப்பதில் இரு அணியினர் மத்தியில் கசப்பு ஏற்பட்டது.

பரந்தன் ராஜனை விமர்சித்த சிலரும் அவருடன் இணைந்து கொண்டதால் ஈஸ்வரன் குழுவுக்குள்ளும் பிரச்சனை ஏற்பட்டது.

### பிளவு

இந்திய-இலங்கை ஒப்பந்த நேரத்தில் டக்ளஸ் தேவானந்தா அணியினர் கடுமை யான நிலைப்பாட்டை மேற்கொண்டனர்.

ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள சில விடயங்களோடு உடன்படமுடியாது என்று 'றோ'வுக்கு கூறினார்கள்.

வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்பு விடயம் அதில் முக்கியமானது.

அதனால் டக்ளஸ் தேவானந்தாவை அழைக்காமல், பரந்தன் ராஜனைமட்டுமே டில்லிக்கு அழைத்தது 'றோ'. ராஜனும் யாருக்கும் அறிவிக்காமல் கனகராசா என்பவரை மொழி பெயர்ப்பு உதவிக்கு அழைத்துக் கொண்டு டில்லி சென்றார்.

பரந்தன் ராஜனின் நடவடிக்கையால் பிரச்சனை ஏற்பட்டது.

அத்தோடு ஈ.என்.டி.எல்.எஃப். கூட்டில் இருந்து டக்ளஸ் தேவானந்தா அணியினர் வெளியேறினார்கள்.

தமது அணிக்கு ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி (EPDP) என்று பெயரிட்டனர்.

ஈஸ்வரன் குழுவினரும் பரந்தன் ராஜனுடன் முரண்பட்டுக் கொண்டு வெளியேறினார்கள்.

ஈஸ்வரன் குழுவில் இருந்த யோகன் கண்ணமுத்து, அர்ச்சுனா, செல்வம் ஆகியோர் ஈ.பி.டிபி.யுடன் இணைந்து சில காலம் செயற்பட்டனர்.

ஈஸ்வரன் விரக்தி நிலைக்கு உள்ளாகி ஒதுங்கிச் சென்றார்.

"ஈ.பி.டி.பி. இந்தியாவுக்கு விரோத மான அமைப்பு. இந்தியாவின் ஆணைக்கு கட்டுப்படக்கூடாது என்பதே அதன் கொள்கை. எனவே 'றோ' ஈ.பி.டி.பி.க்கு உதவி வழங்கக்கூடாது" என்று பரந்தன் ராஜன் குழுவினர் 'றோ' அதிகாரிகளிடம் கூறினார்கள்.

அதனால் 'றோ'வுக்கும், ஈ.பி. டி.பி.க்கும் இடையே நல்லுறவு ஏற்பட முடியவில்லை.

இத்தோடு அந்த விபரம் போதும். நாம் மீண்டும் 1987 இன் ஆரம்பகட்டத்துக்கு திரும்பிச் செல்லலாம்.

புலிகளின் யாழ்ப்பாண தளபதியாக பொறுப்பேற்ற ராதா தலைமையில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிட்டனர் புலிகள்.

திட்டமும் வகுக்கப்பட்டது.

(தொடர்ந்துவரும்)

# "தமிழ் ஈழத்தை கைவிடோம்"

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர், முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் அமரர் தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் 13.07.89 அன்று புலிகளால் கொல்லப்பட்டார்.

1978இல் பிரபல எழுத்தாளர் சாமிஜிக்கு அமிர் அளித்த பேட்டியில் இருந்து ஒரு பகுதி.

### கொள்கை மாறுமா?

**"உங்கள் 'தமிழ் ஈழக்' கோரிக்கையை கைவிடக்கூடிய சந்தர்ப்பமோ சூழ்நிலையோ எதிர்காலத்தில் ஏற்படும் என்று கருதுகிறீர்களா?" என்கிறார் டென்மார்க் நிருபர்.**

"நிச்சயமாக இல்லை! 1958இலும், 1961இலும், 1977இலும் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக எங்களது கொள்கைகளுக்கு வலு ஊட்டியவண்ணமே வருகின்றன.

நாம் சிறைவாசத்தை அனுபவித்திருக்கிறோம்: வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, பல தடவைகள் நாம் இரண்டாந்தரப் பிரஜைகளாக இருக்கின்ற காரணத்தினால், தமிழ் பேசும் இனம் முழுவதுமே பல சித்திரவதைகளை அனுபவித்துவந்திருக்கிறது.

எத்தனையோ வழக்குகளை நாம் எதிர்நோக்க வேண்டி இருந்தது.

என்னையே பல தடவைகள் பொலிசார் குண்டாந்தடிகளினால் தாக்கியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஏற்ற பின்னருங்கூட பொலிசார் காட்டுமிராண்டித் தனமாக ரைபிளினாலும், குண்டாந்தடிகளினாலும் என்னைத் தாக்கியிருக்கிறார் கள். எந்தநாட்டிலுமே நடை பெற்றிராத அடக்குமுறை ஆணவ, சர்வாதிகார நிகழ்ச்சிகள் இவை.

ஆனால்-

இவற்றினாலெல்லாம் எமது கொள்கைப் பிடிப்பு மாறப் போவது கிடையாது. இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எங்கள் இனத்தின் ஒற்றுமைக்கும், கொள்கை உறுதிக்கும் எருக்களாகவே பயன்பட்டு வருகின்றன.

தமிழ் ஈழம் என்பது தான் முடிந்த முடிவு.

ஆனால்-இது சமாதான முறையில் அமையப்போகின்றதா, அஹிம்சைப்போராட்டத்தின் மூலம் அமையப்போகின்றதா அல்லது வன்முறைப் போராட்டத்தின் மூலம் அமையப்போகின்றதா என்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி! இதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்." என்கிறார் அமிர்.



### இளைஞர்களுக்கு என்னசொல்ல விரும்புகிறீர்கள்?

**"இன்றைய அரசியல் சூழ்நிலையில், இளைஞர்களுக்கு, நீங்கள் என்ன புத்திமதி கூற விரும்புகிறீர்கள்?" என்றேன்.**

எமது இளைஞர்கள் தன்னம்பிக்கை அற்ற ஒரு நிலைக்கு கடந்த சில வருடங்களாக தள்ளப்பட்டு வருகிறார்கள். தாழ்வு மனப்பான்மைக்கு எமது மக்கள் ஆளாக்கப்பட்டு வருகிறார்கள்.

இளைஞர்கள் தமது அறிவை விருத்தி செய்வதிலும், ஊக்கத்துடன் கல்விச் செல்வத்தைத் தேடுவதிலும் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும். தமிழர்கள் பலர் இன்று எத்தனையோ நாடுகளில் மிகச்சிறந்த பதவிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பல ஆபிரிக்கநாடுகள், பல அரபு நாடுகள் ஆகிய இடங்களிலெல்லாம் எமது தமிழ் இளைஞர்கள் பலர் தமது அறிவினாலும், முயற்சியினாலும் முன்னேறிக்கொண்டு இருக்கிறார்கள்.

தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், எதற்கும் அஞ்சாத இயல்பும், நல்ல ஒழுக்கமும் கொண்டவர்களாக ஒவ்வொரு தமிழ் வாலிபனும், விளங்கவேண்டும். அதுதான் எனது ஆசை!

தமிழ இளைஞர்கள்- இங்கேயிருந்தாலும் சரி, அல்லது பிறநாடுகளில் இருந்தாலும் சரி- 'தமிழ் ஈழம்' என்ற லட்சியத்திற்காக உழைக்க உற்சாகத் தோடு முன்வரவேண்டும்.

தமிழ ஈழத்தை அடையும் லட்சியத்தைக் கொண்ட இயக்கத்தலைவர் கள் மீது இளைஞர்கள் பூரண நம்பிக்கை வைக்கவேண்டும்.

ஒவ்வொரு தமிழ் இளைஞனும்- விடுதலை இயக்கத்தில்- பார்வை யாளனாக இருக்காது பங்காளனாக மாறவேண்டும்!

இளைஞர்கள் எம்மீது வைக்கும் நம்பிக்கைக்கு நாம் எப்போதும் பாத்திர வாளிகளாகச் செயல்படுவோம். இது உறுதி!" என்கிறார் அமிர்.

www.padippakam.com

### அலசுவது- இராஜதந்திரி

# தொண்டர் அணி — சீருடையணியாத இராணுவம்

கிழக்கு மாகாணத்தில் ஆயுதப்படையினர் எல்.ரி.ரி.ஈ யினருக்கெதிரான நடவடிக்கைகளை கடந்த வாரம் ஆரம்பித்திருந்தனர்.

ஹொலிவூட் திரைப்படங்களில் வரும் வியட்நாமிய யுத்தக் காட்சிகளைப் போன்று இராணுவ கமாண்டோக்கள் திருமலை, மட்டக்களப்புப் பகுதிக்காடுகளில் ஹெலிகொப்டர்களில் வந்து குதித்து தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை- யாழ்ப்பாணத்தின் தரைத்தோற்றம் வேறு; ஏனைய பகுதிகளின் தரை அமைப்பு வேறாகும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு முதற்கொண்டு வன்னிக்காடு, மற்றும் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிவரை அடர்த்தியான காடுகளே பரந்திருக்கின்றன.

இக்காட்டுப் பிரதேசங்கள் எல்.ரி.ரி.ஈ.யினரைப் பொறுத்தவரை மிகவும் அத்துப்படியானதாகும்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சியின்போது எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

அப்போது கொழும்பிலிருந்து ஹெலிகொப்டர்கள் மூலமாக பத்திரிகையாளர்களை எல்.ரி.ரி.ஈ. பேச்சாளர் அன்டன் பாலசிங்கம் வன்னிக்காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்றார்.



வன்னியில் மிகவும் அடர்ந்த கானகமொன்றின் மத்தியில் எல்.ரி.ரி.ஈ.யினர் தயாரித்து வைத்திருந்த இறங்கு தளத்திலேயே கொழும்பிலிருந்து சென்ற ஹெலிகொப்டர்கள் இறங்கின.

இதன்பின்னர் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் ஹெலிகொப்டர்களில் வந்தவர்களை உபசரித்தனர். அவர்களுக்கு குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்பட்ட சொக்லெட்டுகள் கூடப் பரிமாறப்பட்டன.

'இத்தனை பெரிய அடர்ந்த காட்டினுள் சில்லென்ற சொக்லெட்டுக்களா?' என்று பத்திரிகையாளர்கள் வியந்தனர்.

காட்டினுள் வைத்து சொக்லெட்டுகள் வழங்கி உபசரித்தது எதுவும் முக்கியமானதல்ல; ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினரது 'வனவாசம்' எவ்வளவு தூரம் கச்சிதமாக இருக்கின்றது என்பதையே அந்த உபசரிப்பு வெளிப்படுத்தியிருந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் எல்.ரி.ரி.ஈ.யினர் நடமாடித்திரிந்து தமது ஆதிக்கத்தைச் செலுத்திய காலகட்டத்தில் வன்னிக்காட்டில் தமது தளத்தை நன்கு பலமாகவே வைத்திருந்தனர்.

இந்நிலையில் வன்னிவனப்பிரதேசமே எல்.ரி.ரி.ஈ.யினரது அடித்தளமாக இருந்து வருகின்றதுடன், இங்கிருந்தே எல்.ரி.ரி.ஈ.யினர் தமது முக்கிய முடிவுகள், தீர்மானங்கள் என்பவற்றையும் எப்போதும் எடுத்து வந்துள்ளனர்.

ஆரம்பகாலங்களில் எல்.ரி.ரி.ஈ.யினரது பயிற்சிப் பாசறைகள் பலவும் வன்னிக்காடுகளுக்குள்ளேயே இருந்துவந்தன. இக்காடுகளே எல்.ரி.ரி.ஈ.யினரது பல முன்னணித் தலைவர்களையும் உருவாக்கி விட்டிருந்தது.

எனவே யாழ்ப்பாணத்தில் எல்.ரி.ரி.ஈ.யினரைப் பின்வாங்கச் செய்ததன்மூலம் அவர்களது முதுகெலும்பு முறிக்கப்பட்டுள்ளது என்று பிரசாரம் செய்யப்படுமானால், அதுவோர் தப்பான பிரசாரமாகவே இருக்கும்.

எல்.ரி.ரி.ஈ.யினரது முதுகெலும்பாக வன்னிக் காடுகளும், அவற்றோடு இணைந்த கிழக்கிலங்கைக்காடுகளுமே எப்போதும் இருந்து வந்துள்ளன.

கதிர்காம யாத்திரைக்காலம்

## அழிவுக்கு வழிவகுக்கும் கானக யுத்தம்

ஆரம்பமாகியுள்ளது. இந்த யாத்திரைக் காலம் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் வடக்கே செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து, தெற்கே கதிர்காமம்வரை அடியார்கள் பாத யாத்திரை சென்றனர்.

இப்பாதயாத்திரை இடம்பெற்ற பாதை பெரும்பாலும் வடக்கு-கிழக்கின் காடுகளை அண்டிய வழியாகவே சென்றது. இக்காடுகளுக்குள் பல கோயில்கள், குக்கிராமங்கள் கூட இருக்கின்றன.

எனவே வடக்கு-கிழக்கின் ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகிய காலப்பகுதியிலிருந்து வடக்குக்கும், கிழக்கிற்குமிடையிலான இணைப்பைப் பலமாக்குவதாகவே இப்பிரதேசக் காடுகள் இருந்து வருகின்றன.

இக்காடுகளுக்குள் எப்பகுதியினால் நுழைந்து, எப்பகுதியினால் வெளிவரவேண்டும்; எங்கெங்கு எப்பேர்ப்பட்ட வளைவு, நெழிவு, சுழிவுகள் இருக்கின்றன என்பது போன்ற அனைத்தையும் எல்.ரி.ரி.ஈ.யினர் அறிந்து வைத்திருக்கவே செய்வர். இந்நிலையில் அவர்களது பலம் என்பது வனாந்தரப்பகுதிகளில் நல்ல வளமுடனேயே இருப்பதை அறிய முடிகின்றது.

இராணுவ நடவடிக்கைகளில் காட்டு யுத்தம் என்பது (Jungle Warfare) முக்கியமானதொன்றாகும்.

இத்தகைய போர்முறையே உலகில் நவீன இராணுவ அணுகுமுறைகளிலும் முக்கிய இடம்பெறுகின்றது.

இரண்டாம் உலகப்போரில் மலேசியக் காடுகளும், பின்னர் 60ம் ஆண்டுகளில் வியட்நாமியக் காடுகளும் இந்தக் கானகப் போர்முறைக்கு நல்ல உதாரணங்களாக விளங்கின.

கானகப்போர் முறையானது எப்போதுமே நீடித்துச் செல்லக் கூடியதாகும். இதில் இழப்புகளே எப்போதும் இருந்துவருமே தவிர எத்தரப்பினரும் இலகுவில் வெற்றிகளைப் பெற முடியுமென்பது இயலாத காரியமாகும்.

தென் வியட்நாமிற்குள் இறங்கிய அமெரிக்கப்படையினருக்கு வியட்நாமிய காடுகளுக்குள் இருந்த 'வியட்கொங்' கெரில்லாக்கள் 'சிம்ம சொப்பன'மாகவே இருந்தார்கள்.

வியட்நாமில் அமெரிக்கர்களின் நவீன யுத்தசாதனங்களோ, அல்லது அமெரிக்கர்களின் சர்வதேச ரீதியிலான பிரசாரங்களோ எவ்வித பலனையும் தந்திருக்கவில்லை.

பலகோடிக்கணக்கான பணவிரயமும், பல்லாயிரம் உயிர்விரயமும், பண்பாட்டுச் சிதைவுகளும், அவலங்களும், அழிவுகளுமே வியட்நாமிய யுத்தத்தினால் தோன்றியிருந்தன.

அன்று வியட்நாமில் அமெரிக்கா மேற்கொண்டிருந்த ஆக்கிரமிப்புக்கெதிராக உலகில் பல்வேறு மட்டங்களிலும் எதிர்ப்புகள் வெளியாகியிருந்தன. வியட்நாமின் முடிவற்ற யுத்தத்தை, அங்கிருந்தும் அமெரிக்கத்துருப்புகளை வாபஸ் பெறச் செய்வதன் மூலமே முடிவுக்குக் கொண்டுவரச் செய்ய முடியும் என்று உலகில் பல்வேறு அமைப்புகளும் கோஷமெழுப்பின.

ஃபிரான்ஸில்கூட பல சோஷலிஸ சிந்தனைகொண்ட இளைஞர்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர்.

அப்போது, அதாவது 70ம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதிகளில் பாரிஸ்நகரில் இடம் பெற்ற, வியட்நாமில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கெதிரான ஆர்ப்பாட்ட மொன்றில் அன்று இளம் மாணவியாக இருந்த ஜனாதிபதி சந்திரிகாகூட ஈடுபட்டிருந்தார்.

70ம் ஆண்டுகளின் ஆரம்பப்பகுதியில் இலங்கையின் பிரதமராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இருந்தபோது, சந்திரிகா பாரிஸில் சோபோர்ன் பல்கலைக்கழகத்தில் பயின்று வந்தார்.

அச்சமயமே ஃபிரான்ஸில் சோஷலிஸ சிந்தனையைக் கொண்ட மாணவர்கள் குழாம் பாரிஸ் நகரில் நடத்திய வியட்நாமிய யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் சந்திரிகாவும் பங்குபற்றினார்.

இதன்காரணமாக பாரிஸ்நகரப் பொலிஸாரினால் சந்திரிகா அன்று கடுமையாக எச்சரிக்கை செய்யவும்பட்டிருந்தார்.

இது இவ்வாறிருக்க, தற்போது வடக்கே யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள ஆயுதப்படையினர், அடுத்த கட்டநடவடிக்கையாக எல்.ரி.ரி.ஈ.யினரைத் தேடி அழிக்கும் நடவடிக்கையையே ஆரம்பிப்பர்.

இதற்கு முன்னேற்பாடாக வடக்கே ஆயுதப்படையினரை சிவில் நிர்வாகப் பணிகளிலிருந்தும் விலகி எல்.ரி.ரி.ஈ.யினருக்கெதிரான தாக்குதல்களில் முழுமையாக ஈடுபடுத்தச் செய்யும் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

வடக்கே அனுப்பிவைப்பதற்கென 10 ஆயிரம் பேர் கொண்ட தொண்டரணியொன்றைத் திரட்டுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. இந்தத் 'தொண்டர் அணி' என்பது சீருடையணியாத இராணுவமாகவே விளங்கப்போகிறது.

இத்தொண்டரணியே வடக்கில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவப் போவதாகவும் பிரதிப்பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த அறிவித்துள்ளார்.

இத்தொண்டர் அணியில் சேரும் ஆண், பெண் இருபாலாருக்கும் ஆயுதப்பயிற்சி வழங்கப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இத்தொண்டர் அணியில் சேருவதற்கு எவ்வித தகைமையோ, அல்லது பின்னணியோ தேவையில்லை, எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தென்னிலங்கையில் உள்ள பல்வேறு விஷமச்சக்திகளும் இத்தொண்டரணியில் இடம்பிடித்து வடக்கே செல்லமுடியும். இந்த விஷமக் கும்பல்கள், அமைதித் தீர்வு குறித்துத் தோற்றம் பெறக் கூடிய நல்லெண்ண அணுகுமுறைகளைக் குழப்பிவிடவும் முடியும். பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக, புலிகளை முறியடிப்பதாக நினைத்துக்கொண்டு மக்களை பகைத்துக்கொள்கின்ற தன்மையைத்தான் 'தொண்டர் அணி' மூலம் சாதிக்கக் கூடியதாயிருக்கும்.

எனவே எல்.ரி.ரி.ஈ.யினரைத் தேடி அழிக்கும் முயற்சிகளைக் கைவிட்டு அவர்களைத் நாடிச்சென்று, அரசியல் அணுகுமுறைகளையே ஆட்சியாளர்கள் முன்னெடுக்கவேண்டும்.

யாழ் குடாநாட்டிலிருந்து வன்னிக்காடுகளுக்குள் காலடி எடுத்து வைக்க முயலும் நடவடிக்கைகளை அரசு கை விடவேண்டும்.

ஏனெனில், கானக யுத்தம் பொல்லாதது. எண்ணிலடங்காத உயிர்களைப் பலியெடுக்கவும் கூடியது.

எனவே- இப்பொல்லாத யுத்தங்களுக்குக் கட்டியம் கூறாது, ஆரோக்கியமான அரசியல் சிந்தனைகளுக்கு நல்வரவு கூறவேண்டியதே அவசியமானதாக இருக்கின்றது.

# "இந்தியா தலையிடப் போவதில்லை. என்னா, ஒரு தரம் சூடு பட்டாச்சு"

## முரசொலி மாறன் பேட்டி

தமிழக முதல்வர் கலைஞரின் மருமகன் தான் முரசொலி மாறன். தற்போது மத்திய அமைச்சர். இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக தமிழக சஞ்சிகை குமுதத்துக்கு மாறன் அளித்த பேட்டியில் இருந்து:

**கேள்வி:-** விடுதலைப் புலிகள் அல்லாத ஈழவிடுதலைக் குழுக்கள் உங்களைச் சந்தித்ததாக ஒரு செய்தி வந்திருக்கிறதே?

**பதில்:-** இல்லை. சந்திக்க விரும்புவதாகத் தகவல் வந்ததே தவிர, அவர்கள் யாரையும் நான் சந்திக்கவில்லை. சில பேர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள். அவ்வளவுதான்.

**கேள்வி:-** புலிகள் மீதான தடையை மத்திய அமைச்சரவை நீடித்திருக்கிறது. இந்த விஷயத்தில் தி.மு.க. எந்த மாதிரியான நிலையை எடுக்கப்போகிறது.?

**பதில்:-** தி.மு.கவைப் பொறுத்தவரைக்கும் விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புக்களுடன் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. அதை ஒருமுறை அல்ல பல முறை நாங்கள் சொல்லியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் அங்கே என்ன நடக்கிறது என்று நாங்களும் உங்களை மாதிரி பத்திரிகைகள் மூலம் தெரிந்து கொள்கிறோமே தவிர, நேரடியான தகவல் கிடையாது.

நம்முடைய கவலையெல்லாம் அங்கிருக்கிற நம்முடைய தமிழ் சகோதரர்கள் உரிமைகள் பெற்று வாழவேண்டும். அந்த உரிமைகளை தமிழ் ஈழம் மூலம் தான் பெறமுடியும் என்று அவர்கள் நினைத்தால், அதற்கான தியாகங்களைச் செய்ய அவர்கள் தயாராக இருந்தா, ஓ.கே. பெறட்டும். அல்லது ஒரு கூட்டாட்சி மூலமாக, அதிக மாநில சுயாட்சி பெற்று தங்களுடைய நோக்கங்களை ஈடேற்ற முடியுமென்று நினைச்சாங்கன்னா சரி. ஆகவே, அதைத் தீர்மானிக்க வேண்டியது அவர்கள். அவர்கள் எதுசரி என்று தீர்மானிக்கிறார்களோ அதனை ஆதரிக்க வேண்டியது தான் எங்கள் கடமையே தவிர, இதுதான் உங்களுக்கு நல்லது என்று சொல்கின்ற உரிமை வெளிநாட்டில் வாழுகின்ற இந்தியத் தமிழர்களுக்குக் கிடையாது. அதுதான் தி.மு.கவின் எண்ணம்.

ஆனால் என்னுடைய அனுதாபம், என்னுடைய அனுதாபம் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மக்களுடைய அனுதாபம் முழுக்க அங்கே தமிழர்கள் உரிமையோடு வாழணும் என்பதுதான். அந்த ஒரு நல்லெண்ணம் உண்டு. அத்தோடு சரி.

> "நம்பளை பகைச்சுக்கிட்டாங்க நாம் என்ன செய்ய முடியும்?"

**கேள்வி:-** நாம் எதுவுமே செய்யமுடியாத சூழ்நிலையில் இருக்கிறோமா?



**பதில்:-** நிச்சயமாக அப்படித்தான் இருக்கிறோம். காரணம், நம்பளை பகைச்சுக்கிட்டாங்க. என்ன செய்ய முடியும்? இப்போ வந்து இந்தியா தலையிட வேண்டும் என்று சொல்லறாங்க. எப்படித் தலையிட முடியும்? இந்தியா தலையிட்டபோது அதை வேண்டாம் என்று சொல்லி திருப்பி அனுப்பிச்சாங்க. இப்போ இந்தியா எப்படித் தலையிட முடியும்? அதற்கான எந்த விதமான அவசியமும் இருக்கிறதா எனக்குத் தெரியலை.

முதலில் வெளிநாட்டு மத்தியஸ்தம் வேணும்னு திருமதி சந்திரிக்கா சொன்னாங்க. அப்போ எல்.ரி.ரி.ஈ. கூடாதுன்னு சொன்னாங்க. இப்போ மத்தியஸ்தம் வேணும்ங்கிறாங்க. இது அவங்களே தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சனையே தவிர, இந்தியா தலையிட்டு செய்யக்கூடிய நிலையில் இல்லை. ஏன்னா ஒரு தரம் சூடு பட்டாச்சு.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி

தருவது ரசிகன்

எல்லோருக்கும்-அவள் பயங்கரக் கொள்ளைக்காரி; படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும்!
அவள்-அதுவும் ஒரு பெண்-ஏன் அப்படி மாறினாள், என்று எத்தனை பேருக்கு தெரியும்?
பூ, ஒன்று புயலான கதை-பூலான்தேவியின்கதை இந்த வாரம் முதல்
ஒரு புயல் பறவையின் வாழ்க்கைப் பக்கங்கள் புரட்டப்படுகின்றன.
கார்லோஸ் தொடருக்கு வாசக நெஞ்சங்கள் குவித்த வரவேற்பு மடல்கள் இந்த தொடருக்கான உற்சாக மாத்திரைகள்!

இந்தியா-அந்தப் பரந்த பூமியின் வடபிராந்தியத்தில் மத்திய பிரதேச மேற்கு எல்லையில், உத்தரபிரதேசத்தை ஒட்டியிருப்பதுதான் சம்பல் பள்ளத்தாக்கு.

மலைகள்-அந்த மலைகளின் இடுக்குகள் வழியாக சலசலத்தோடும் சம்பல்நதி.

புறத்தோற்றத்தில் அழகாகத்தெரியும் சம்பல் பள்ளத்தாக்கில் ஓர் அபாயமும் அடங்கியிருந்தது.

மறைந்து வாழவும், ஓடி ஒளியவும் மலை இடுக்குகள் வெகுவசதியானவை. உபயோகமானவை.

அந்த உபயோகம் கொள்ளையர்களுக்கு தெரிந்திருந்தது. அதனால் 12ம் நூற்றாண்டில் இருந்தே சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையர்களின் உறைவிடமாக இருந்தது.

அதில் இன்னொரு வசதியென்னவென்றால், இந்தியாவின் மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம், தென்கிழக்கு பிராந்தியம் மற்றும் ராஜாஸ்தான் மாநிலங்களிலிருந்து இந்தியாவின் தலைநகரான டில்லிக்குச் செல்லும் வர்த்தகப்பாதைகள் சம்பல் பள்ளத்தாக்கின் வழியாகத்தான் செல்லவேண்டும்.

மலைகளுக்குள் பதுங்கியிருக்க வேண்டியது: அப்பாதை வழியாகச் செல்லும் வர்த்தகர்களிடம் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிடுவது. எங்கும் தேடிச் சென்று கொள்ளையிடத் தேவையில்லை.

சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று வேறு பிரதேச கொள்ளையர்கள் பொறாமையோடு பெருமூச்சு விட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

பொலிசாருக்கும் இடைக்கிடையே ரோசம் வந்து ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு சம்பல் பள்ளத்தாக்கில் புகுந்திருக்கிறார்கள்.

புகுந்தவர்கள் எவருமே உயிருடன் திரும்பி வந்ததில்லை. செத்துப்போன பொலிஸாரின் ஆயுதங்கள் கொள்ளைக் கூட்டங்கள் வளருவதற்கு உபயோகமாக இருந்தன.

சம்பல் பள்ளத்தாக்கை கௌரவமாக நினைவுகொள்ளக்கூடிய ஒரு வரலாற்றுப் பெருமையும் இருக்கிறது.

வெள்ளையர்கள் ஆட்சியை எதிர்த்து ஆயுதம் ஏந்திய ஜான்சிராணி மறைந்து வாழ இடம்கொடுத்து அரவணைத்தது சம்பல் பள்ளத்தாக்கின் மலைகள்தான்.

ஜான்சிராணியும் தன்னோடு கொள்ளைக்காரர்கள் சிலரையும் சேர்த்துக் கொண்டு போராடினாள்.

வெள்ளைக்கார சிப்பாய் ஒருவரின் துப்பாக்கியால் சல்லடையாக்கப்பட்ட ஜான்சிராணியின் உடல் சம்பல் பள்ளத்தாக்கில்தான் சரிந்து சரித்திரமானது.

சம்பல் பள்ளத்தாக்கு என்பது சம்பல் நதி அங்கு பாய்வதால் ஏற்பட்ட பெயர். சம்பல் என்பது வடமொழிச் சொல். சம்பல் என்பதற்கு 'பழிக்குப் பழி' என்று பொருள்.

சம்பல் பள்ளத்தாக்கில் ஏறத்தாழ 8000 சதுர கிலோ மீட்டர் நிலம் கொள்ளைக் கூட்டத்தாரின் கட்டுப்பாட்டில் இருந்தது.



மலையுண்டு. நதியுண்டு. எனினும் சம்பல் பள்ளத்தாக்கு வரண்டபூமியாகவே காட்சியளித்தது.

விவசாயம் செய்யவும் முடியாமல் பெருவாரியான மக்கள் இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். எஞ்சியிருந்தவர்களில் பாதிப்பேர் கொள்ளைக்கூட்டத்தோடு சேர்ந்து பிழைத்துக்கொண்டனர்.

ஒரு சில நிலச்சுவாந்தார்கள் மட்டுமே இருந்தனர். அவர்களின் காணிகளில் கூலியாகப் பணிபுரியும் குடும்பங்களும் இருந்தன. கிடைக்கும் கூலியில் கால் வயிற்றையும் நிரப்ப முடியாமல் அக்குடும்பங்கள் திண்டாட வேண்டியிருந்தது.

அப்படியான ஒரு குடும்பத்தில்தான் பூலான்தேவி பிறந்தாள்.

அவள் கொள்ளைராணியாவாள் என்றோ, கொலைபல செய்வாள் என்றோ, பாராளுமன்றத்திற்குள் ஒரு நாள் புகுவாள் என்றோ அப்போது யார்தான் நினைத்திருப்பர்?

அதோ... வருகிறாள் பூலான் தேவி. இனி அவளே உங்களுடன் பேசட்டும்.

**1981-சம்பல் பள்ளத்தாக்கு**

என்ன அப்படிப்பார்க்கிறீர்கள்? கையிலே துப்பாக்கி, இடையிலே ஒரு பட்டி. பட்டியிலே துப்பாக்கி ரவைகள். காக்கி உடை. அந்த காக்கி உடைக்கு கட்டுப்பட மறுக்கும் இளமை. கட்டான உடல். தலையிலே ஒரு துணிக் கட்டு.

பார்த்தவுடன் நிறையப் பயம். கொஞ்சம் மயக்கம், கொஞ்சம் சபலம் எல்லாம் கலந்த ஒரு உணர்ச்சி வருகிறதா?

வரும். எனக்குத் தெரியும். அடிபட்டு. அடிபட்டு. அந்த ரணங்களால் வதைபட்டு வதைபட்டு மனிதர்களை படிக்கப் பழகியவள் நான்.

என் கையில் இந்தத் துப்பாக்கி இல்லையென்று வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கும் என்னைத் தொட்டுப்பார்த்தால் என்னவென்று யோசனைவரும். இப்போதும் வரலாம்; தொடமாட்டீர்கள். உயிர்மேல் ஆசை.

இப்போதுதான் ஒரு வேசிமகனை சுட்டுப்போட்டுவிட்டு வருகிறேன்.

அவன் என்ன செய்தான் தெரியுமா? தன் நிலத்தில் கூலி வேலை செய்த பெண்ணை சேதப்படுத்திவிட்டான். மூன்று நாட்களுக்கு முன்னர்தான் அவளுக்கு திருமணம் நடந்தது. அவளது கணவனும் அங்குதான் கூலியாக இருக்கிறான். அவன் பட்ட கடனை அடைக்கவில்லையாம்.

எப்படி அடைப்பது? இவன் கொடுக்கிற கூலி கஞ்சி குடிக்கவே போதாது. கடனைத் தரவில்லை என்று அவனை ஒரு மரத்தில் கட்டிவைத்து அடித்தார்கள். அவன் கண் முன்னாலேயே அவளை.. அவளை... வேசிமக்கள். வேசிமக்கள்.

பொலிஸில் போய் அவள் தாய் புகார் செய்தாள். அசிங்கமாக திட்டி துரத்தி விட்டார்கள். என்னிடம் வந்து கதறியழுதாள்.

அதன்பின்னர் தான் நானும் என் ஆட்களும் உள்ளே புகுந்தோம். பேடிகள். பெண்ணிடம் வீரத்தைக் காட்டிய பேடிகள். எங்களைக் கண்டதும் தலைதெறிக்க ஓடினார்கள். நிலச்சுவாந்தார் மட்டும் வசமாக மாட்டிக்கொண்டான்.

"என்னை ஒன்றும் செய்துவிடாதீர்கள். உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன். இனிமேல் எந்தப் பெண்ணையும் நினைத்துக்கூடப் பார்க்க மாட்டேன்."

"எவ்வளவு பணம் தருவாய்?" என்று கேட்டேன். எழுந்து உள்ளே ஓடினான். ஐயாயிரம் ரூபா பணமும், ஒரு தங்கச் சங்கிலியும் தந்தான். வாங்கி என் பையில் போட்டுக்கொண்டேன். அவனுக்கு அப்போதுதான் போன உயிர் திரும்பி வந்தது போல் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

"இனிமேல் இப்படிச் செய்யாதே என்ன?"

"சத்தியமாகச் செய்யமாட்டேன்."

நான் அவன் வீட்டினுள் போனேன். பருத்தி மூட்டைகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. உள்ளே அவன் மனைவி பெரிய உடம்போடு, என்னைக் கண்ட பயத்தில் மூச்சுவாங்கினாள். "வெளியே ஓடு" என்றேன். தன் உடம்பை மலைபோல அசைத்தபடி போய்விட்டாள்.

நிலச்சுவாந்தார் வெளியே நின்றான். "வா உள்ளே!" என்று அழைத்தேன்.

பயந்து நடுங்கியபடியே வந்தான். உள்ளே வந்ததும் கதவைச் சாத்தினேன். என் துப்பாக்கியை பருத்தி மூடை யோடு சாத்திவைத்தேன்.

அவன் வியர்த் திருந்தான். "சட்டையைக் கழற்று" என்றேன். கட்டளைக்கு பணியும் ஒரு நாய்க்குட்டி போல தனது சட்டையை கழற்றி கீழே போட்டான்.

நான் அவன் அருகில் சென்றேன். மிக, மிக நெருங்கி அவன் முகமருகே என் முகத்தை வைத்துக்கொண்டு, "பயப்படுகிறாயா?" என்று கேட்டேன். அவன் பதில் சொல்லவில்லை. அவன் தோள்கள் இரண்டிலும் என் கைகளை ஊன்றிக்கொண்டு, "நீ ஆண்மகன்தானே?" என்று கேட்டேன். எச்சில் விழுங்கினான்.

தோளில் ஊன்றிய கைகளில் ஒன்றை இறக்கி அவன் மார்பை உள்ளங்கையால் தேய்த்தேன். "உன் உடம்பை எனக்கு பிடித்திருக்கிறது. மொழு மொழு என்றிருக்கிறாய்." பதில் சொல்லாமல் முழித் தான். உள்ளங்கையால் தேய்த்தபடியே "சூடாக இருக்கிறதா?" என்றேன்.

மெல்ல, மெல்ல அவனுக்குள் சபலம் எட்டிப்பார்க்கத்தொடங்கியது. "நான் அழகாக இருக்கிறேனா?" என்று கேட்டேன். "ம்..ம்" என்றான். "நான் வேண்டுமா?" என்றேன்.



சம்பல் பள்ளத்தாக்கு-மலை இடுக்குகள் வழியே பாதை.

நம்பமுடியாமல் பார்த்தான். "பயப்படாதே, சொல்!" அவன் தயங்கித் தயங்கி "ஆ..ஆம்.." என்றான்.

"வேஷ்டியை உருவிப்போட்டுவிடு" என்றேன். அப்படியே செய்தான். நான் பின்னடைந்து, பருத்தி மூட்டையோடு சாத்தி வைக்கப்பட்ட என் துப்பாக்கியை எடுத்துக் கொண்டேன்.

அவனுக்கு புரிந்திருக்கவேண்டும். கதவை நோக்கி ஓடினான். உடம்பில் துணியே இல்லாமல் ஓடினான். கதவைத் திறக்க முயன்றான்.

நான் அவனைக் குறிவைத்து துப்பாக்கியை உயர்த்தினேன். சுடவில்லை.

கதவு திறந்து கொண்டது.

வெளியே ஓடினான்.

வெளியே நின்ற என் ஆட்கள் அவனைப் பிடித்துக்கொண்டார்கள். நான் வெளியே வந்தேன்.

"விடுங்கள் அவனை. ஓடட்டும். ஒரு நாய் நிர்வாணமாக ஓடுவதை எல்லோரும் பார்க்கட்டும்." விட்டனர். ஓடினான்.

என் துப்பாக்கி உயர்ந்தது.

-டுமீல்-

அந்த நாய் செத்துப்போனது!

அந்த வேசிமகன் துடிதுடித்து செத்துப் போனான். என்ன ஒரு அழகான காட்சி! என் கண்களில் என்னையறியாமல் ஒரு கண்ணீர்துளி.

அது ஆனந்தக் கண்ணீர்!

அவனிடம் வாங்கிய பணத்தையும் நகையையும் அந்தப் பெண்ணிடம் கட்டாயப்படுத்திக் கொடுத்தேன். அவள் கணவன் என் காலில் வீழ்ந்து அழுதான்.

"அழாதே! அடிபட்டால் அழக்கூடாது! அடிபட்டவன் அழுதால், அடித்தவன் ரசிப்பான். கைகொட்டிச் சிரிப்பான். கையால் அடித்தது போதாது என்று காலால் உதைப்பான். அடிபட்டால் பல்லைக்கடித்து தாங்கு. திருப்பியடிக்க உன்னை தயார்படுத்து. இது இந்த பூலானின் அனுபவம்."

கூடியிருந்த கூட்டம் "பூலான்தேவிக்கு ஜே" என்று ஆர்ப்பரித்தது.

என்ன திகைத்து போனீர்கள்! என் தண்டனையில் ஒரு வக்கிரம், ஒரு கொடூரம் இருப்பதாக நினைக்கிறீர்கள் அல்லவா?

இவள் பெண்ணா, பேயா என்று சந்தேகம் வருகிறதல்லவா? வாருங்கள். என் கதையை ஆரம்பத்தில் இருந்தே சொல்கிறேன்.

என்னுடன் சேர்ந்து அழுங்கள். என்னுடன் சேர்ந்து விதம், விதமான மனித மிருகங்களைச் சந்தியுங்கள். என்னுடன் சேர்ந்து ஆவேசப்படுங்கள். இறுதியாக உங்கள் தீர்ப்பைச் சொல்லுங்கள்.

ஆரம்பிக்கலாமா?

(தொடர்ந்து வரும்)

# ஒரு அழகியும் டாக்டரும்



நீதி மன்றத்தில் டோலினாவும் சகோதரனும். அலட்சியப் புன்னகை

அவர் ஒரு டாக்டர். காலில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை செய்ய வந்தாள் ஒரு பெண். அவளோ மகா அழகி. டாக்டர் ஏற்கெனவே ஒரு 'சபலிஸ்ட்.' அழகியைக் கண்டதும் மயங்கிப்போனார்.

இருவரும் நெருங்கிப் பழகினார்கள். அழகியின் பெயர் டோலினா. டாக்டரின் பெயர் ராஜு. டாக்டருக்கு வயது 48. அழகி டோலினாவுக்கு வயது ஆக 19. காந்தம் இரும்பைக் கவர்வதுபோல டாக்டரை தன் பிடியில் கொண்டுவந்தாள் அழகி.

ஆடம்பரப்பிரியையான டோலினாவுக்கு பணம் தேவை. அது டாக்டரிடம் இருந்தது. கேட்டாள் கொடுத்தார். கேட்டுக்கொண்டே இருந்தாள். டாக்டர் ஒடிந்துபோனார். கையை விரித்தார்.

பணம் தராவிட்டால் எங்களுக்குள் உள்ள தொடர்பை பகிரங்கப்படுத்திவிடுவேன் என்று மிரட்டினாள் டோலினா.

அப்போதுதான் டாக்டருக்கு அந்த யோசனை தோன்றியது. டோலினாவுக்கு ஒரு மயக்க மாத்திரை கொடுத்து மயக்கினார். அவளுடன் உல்லாசமாக இருக்கும் காட்சியை தானியங்கி வீடியோ மூலம் படம்பிடித்துக் கொண்டார்.

அந்தப் படம்தான் துருப்புச் சீட்டு. அதனைவைத்தே அழகியை மிரட்டத் தொடங்கினார். முன்னர் டாக்டரை ஆட்டிப் படைத்த டோலினா இப்போது டாக்டரின் கையில் மாட்டிய பொம்மையானாள்.

டாக்டரும் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் டோலினாவை தனது விருப்பப்படியெல்லாம் பயன்படுத்திக்கொண்டார்.

பொறுக்க முடியாத டோலினா தன் சகோதரனின் உதவியை நாடினாள்.

சகோதரனும், அவனது நண்பர்களும் சேர்ந்து திட்டம் போட்டனர்.

டாக்டரை கர்நாடக மாநிலத்தில் உள்ள ஒரு ஊருக்கு "உல்லாசமாக இருக்கலாம் வாருங்கள்" என்று அழைத்துப் போனாள் டோலினா.

டாக்டருக்கும் ஆசை விடவில்லை. காரில் இருவரும் சென்றனர்.

அங்கு ஒரு மறைவான இடத்தில் காரை நிறுத்தச் சொன்னாள் டோலினா. கார் நின்றது. திமு திமுவென்று 6 பேர் ஓடிவந்து டாக்டரை குண்டுக்கட்டாக தூக்கிப்போனார்கள்.

'படமாடா எடுக்கிறாய் படம்' கேட்டு கேட்டு உதைத்தனர். சித்திரவதை தாங்காமல் டாக்டர் இறந்து போனார்.

பிணத்தை பெற்றோல் ஊற்றி கொளுத்திவிட்டு டோலினாவும், அவளது சகோதரர் மற்றும் ஐந்து பேரும் எதுவுமே நடக்காததுபோலத் திரும்பிவிட்டனர்.

பின்னர் பொலிசாரின் விசாரணையில் விஷயம் கசிந்தது. டோலினா உட்பட ஆறுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இப்போது டோலினா பொலிஸ் காவலில் இருக்கிறாள். அவளுக்கு சில பெரிய இடங்களில் செல்வாக்கு இருக்கிறது. அதனால் பொலிஸ் நிலையத்தில்கூட ராஜமரியாதை கிடைக்கிறது.

விசாரணை ஒன்றுக்காக வெளியூருக்கு அழைத்துச் சென்றபோதுகூட நட்சத்திர ஹோட்டல் ஒன்றில்தான் அவளை வைத்திருந்தார்கள்.

"டாக்டரை நான்தான் கொன்றேன். மயக்க மாத்திரை கொடுத்து என்னை ஏமாற்றினார். அதனால் அவரை கொஞ்சம், கொஞ்சமாக சித்திரவதை செய்து கொல்லவேண்டும் என்ற வெறி ஏற்பட்டது. கொன்றுவிட்டேன்" என்று வெகு அலட்சியமாகச் சொல்லியிருக்கிறாள் டோலினா.

ஒருவகையில் பார்த்தால் டாக்டருக்கும் தேவையான தண்டனை போலத்தான் படுகிறது.

அழகில் ஆபத்தும் உண்டு என்பதை நிரூபித்துவிட்டாள் டோலினா.

டாக்டர் பறித்த ரோஜாவில் இருந்த முள் அவரைக் கிழித்துவிட்டது.

# டைசனும் புலியும்!

குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் என்றாலே விவகாரம்பிடித்த ஆள் என்பது மாதிரி ஒரு எண்ணம் ஏற்பட்டுவிடப் போகிறது.



எல்லோரும் நாய் வளர்ப்பார்கள். பூனை வளர்ப்பார்கள். மைக் டைசன் இரண்டு புலிக்குட்டிகளும், ஒரு சிங்கக்குட்டியும் வளர்க்க ஆசைப்பட்டிருக்கிறார்.

வனவிலங்குகளை வீட்டில் வைத்து வளர்க்க அனுமதியில்லை என்பதால் டைசனின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது. சற்றும் தனது முயற்சியில் மனம் தளராத டைசன், தனது கோரிக்கையைப் பரிசீலிக்குமாறு அரசாங்கத்திடம் மனுமேல் மனுப்போட்டுக்கொண்டிருக்கிறார். தற்போது ஒரு புலிக்குட்டியை மட்டும் வளர்த்துவருகிறார்.

# முகப்பில் பறக்கும் முன்னாள் இளவரசி

பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்கு இது கெட்ட காலம். ஒரே சர்ச்சைதான்.

இளவரசர் சாள்ஸ்-டயனா விவாகரத்து விவகாரம் விகாரமாகிக்கொண்டிருந்த வேளையில், சில மாதங்களுக்கு முன்னர் தனது மனைவி சாராவை விவாகரத்துச் செய்தார் இளவரசர் ஆண்ட்ரூ. சாள்ஸின் தம்பிதான் ஆண்ட்ரூ.

விவாகரத்துபெற்ற சாரா சும்மா இருக்கவில்லை. பிரிட்டிஷ் அரச குடும்ப மானத்தை உலகின் பிரபல பத்திரிகைகளின் முகப்பில் பறக்க விட்டுக் கொண்டிருக்கிறார். அதாவது மொடலிங் தொழிலில் இறங்கியிருக்கிறார். அவரது படங்களை பெரும் பணம் கொடுத்து வாங்கி தமது முகப்பில் போடுகின்றன பத்திரிகைகள்.

சமீபத்தில் பிரபல பத்திரிகையான 'ஹலோ' பத்திரிகையில் வெளியான முகப்பு படம்தான் இங்கே காணப்படுகிறது. பறப்பது சாராவின் ஆடை மட்டுமல்ல, பிரிட்டிஷ் இராஜகுடும்ப மானமும்தான். சாரா இதைவிடவும் பலபடி மேலே சென்று போஸ்கள் கொடுக்கக்கூடும் என்று கலங்கிப் போயிருக்கிறது பிரிட்டிஷ் ராஜகுடும்ப வட்டாரம்.





படிப்பகம்


www.padippakam.com



## வல்லவனுக்கு–பல்லும் ஆயுதம்

ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த பயில்வான் ஆர்பட்றிக் புதிய சாதனை படைத்திருக்கிறார். 17 தொண் 17 ஆயிரம் கிலோ) எடையுள்ள விமானத்தை பத்துப்பேர் சேர்ந்தாலும் பிடித்திழுக்க முடியாது. இந்தப் பயில்வான் தனது பல்லினால் மாத்திரம் 10 மீட்டர் தூரம் வரை இழுத்துக் காட்டியிருக்கிறார். தம் பிடித்து ஒரே இழுவையாக இழுத்துவிட்டு மயங்கி விழுந்துவிட்டார். தயாராக நின்ற டாக்டர் சிகிச்சை செய்தபின்னர்தான் பயில்வான் பழைய தெம்புடன் எழுந்துநடந்தார்.

## நெளிவு - சுழிவான பாதை



இரயில் தண்டவாளங்கள் தெரியுமல்லவா. (யாழ் குடாநாட்டில் உள்ள புதிய தலைமுறைக்கு இக்கேள்வி பொருந்தாது) அந்த தண்டவாளங்கள் நேர் கோட்டில் செல்வதைத்தான் பார்த்திருப்பீர்கள். வளைந்து, வளைந்து, நெளிந்து, நெளிந்து செல்லும் தண்டவாளத்தை உலகில் எங்கும் காணமுடியாது. படத்தில் இருக்கும் வளைவு, நெளிவான தண்டவாளம் மெக்ஸிக்கோ நாட்டின் பசுபிக் கடற்கரை ஓரம் உள்ள லாசாரோ கார்டினாஸ் என்ற ஊரில் இருந்தது. இப்படியான தண்டவாளத்தில் ரயில் எப்படி ஓடும்? என்று கேட்கிறீர்களா? உங்கள் கேள்வி சரி. நேராகத்தான் இந்த தண்டவாளமும் இருந்தது. பூகம்பம் ஒன்று ஏற்பட்டபோது அந்த தாக்கத்தால் இப்படியாகிவிட்டது. அப்போது எடுக்கப்பட்ட படம்தான் இது. பின்னர் திருத்தி அமைத்திருப்பார்கள்.

## தகவல் பெட்டி



## வசூல் 'பேபி'



ஹொலிவுட் திரைப்படங்களில் வசூல் படங்களில் ஒன்று 'பேபி'. வசூலுக்கு காரணம் பெரிய நடிகர்கள் அல்ல. ஒரு பன்றிக் குட்டிதான். அவுஸ்திரேலியாவில் மட்டும் திரையிடப்பட்ட முதல் மூன்று வாரத்தில் 17 மில்லியன் டொலர்களை சம்பாதித்த படம் 'பேபி'.

ஆடைத்தானம், ஆட்டம், பாட்டம், அலுங்கல், குலுங்கல் இல்லாமல் பன்றியார் அசத்திவிட்டார். 'பேபி' பன்றிக்குட்டியும், அதன் உடன்பிறவா சகோதரனான வாத்தும் படத்தில் தோன்றும் காட்சிதான் இது. வட்டத்திற்குள் இருப்பவர் பன்றிக்கு நடிக்கச் சொல்லித்தந்த இயக்குநர் ஜோர்ஜ் மில்லர்.

## முற்றிலும் சுத்தமான காற்றுக்கு



இவரது தலையிலே இருப்பது ஒலிபெருக்கி. வித்தியாசமாகப் பிரசாரம் செய்கிறாராக்கும் என்றும் நினைக்க முடியும்தான். ஆனால் விஷயம் அதுவல்ல. இவர் ஒரு விஞ்ஞானி. பிரிட்டிஷ் நாட்டவர். பெயர்; வில்ஃப் லன். சுற்றுப்புறச் சூழலால் கெட்டுப்போன காற்றை சுவாசிப்பதால் நோய்கள் ஏற்படுகின்றன. எனவே தண்ணீரை வடிகட்டிக் குடிப்பதுபோல, காற்றையும் வடிகட்டிச் சுவாசிக்கலாம் என்பது இவரது அபிப்பிராயம். அதற்காக அவர் தயாரித்துள்ள கருவியோடுதான் காட்சியளிக்கிறார்.

இதனை மனிதனைக் கோமாளியாக்கும் கண்டு பிடிப்பு என்று கிண்டலடித்துள்ளனர் சக விஞ்ஞானிகள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இந்தக் கருவியை அணிந்துகொண்டு உங்கள் அன்றாட பணிகளைச் செய்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பாருங்களேன்.

## இந்த உயரம் போதுமா?

உலகில் அதி உயரமான மனிதர் இவர்தான். பெயர்; ஹாஜி முகமட் ஆலன் சன்னா. பிறந்தது பாகிஸ்தானில். பிறந்த ஆண்டு, 1956.உயரம், எந்தப் பெரிய மனிதரும் கண்டிப்பாக அண்ணாந்து பார்க்க வேண்டிய உயரம். ஏழடி ஏழேகால் அங்குலம். கின்னஸ் புத்தகத்தில் பொறிக்கப்பட்டுள்ள தகவல்கள் இவை.


இந்த பெ...ரி...ய...ம...மனிதர் தொடர்பாக முரசில் முன்பே செய்தி வெளியாகிவிட்டது. புதிய செய்திகள் பின்வருமாறு;

இவர் இப்போது துபாய் நாட்டில் உள்ள ஒரு ஹோட்டலில் வேலை செய்கிறார். அவரைச் சந்திக்கவே தினமும் ஒரு கூட்டம் வருவதால் ஹோட்டலுக்கும் நல்ல விளம்பரம்.

அலுவலகங்களுக்கும் சரி, வீடுகளுக்கும் சரி உள்ளே செல்லவேண்டுமானால் தலை குனியாமல் செல்ல முடியாது. அதனால் அடிக்கடி கழுத்துச் சுளுக்கு ஏற்பட்டுவிடுகிறதாம்.

இவருக்கு நிறைய காதல் கடிதங்கள் வருகிறதாம். யாரையும் காதலிப்பதுமாதிரி ஐடியா கிடையாது. காதலித்தாலும் காதோடு இரகசியம் பேச முடியாது. ரொம்பவும் வளைய வேண்டியிருக்கும்.

நீண்டகாலமாக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்து அசையாமல் இருக்கிறது இவரது பெயர். இவரை முறியடிக்க இன்னொரு உயர்ந்த மனிதன் நேற்றுவரை பிறக்கவில்லை என்று தெரிகிறது.



## குத்தாத முள்

என்ன இது? ஊகிப்பது கஷ்டமாக இருக்கிறதல்லவா. சொன்னால் நம்பமாட்டீர்கள் இது ஒரு வகையான மீன். இதனை சிங்க மீன் என்று அழைப்பர். உடல் முழுவதும் கூர்மையான செதில்கள் கத்திபோல நீட்டிக்கொண்டிருக்கும். தொட்டால் முள்ளால் குத்திவிடுமோ என்று பயம் வரத்தான் செய்யும். ஆனால் இது பரம சாது. இதன் செதில்களால் எந்தப் பாதிப்பும் நேராது. பயமின்றி தொடலாம்.

சிங்கமீன் தனது முட்செதில்களை விசிறி மடிப்பு போன்று விரித்து விரித்து மூடிக்கொள்ளும் அழகே தனிதான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இந்த மீனுக்கு முள் அழகு.



படிப்பகம்

www.padippakam.com


நவீன்-சிந்து
படம் கள்வன்

# ஒளிப்பதிவாளர் மாற்றம்

வஸந்த் இயக்கிய 'ஆசை' படத்திற்கு ஒளிப்பதிவு செய்தவர் ஜீவா. தற்போது வஸந்த் இயக்கும் 'மனசுக்குள் வரலாமா' படத்திற்கு ஜீவா ஒளிப்பதிவு செய்யவில்லை. 'உல்லாசம்' படத்தில் ஜீவா பிஸியாக இருப்பதால், 'காதல் தேசம்' படத்திற்கு ஒளிப்பதிவு செய்யும் கே.வி.ஆனந்தை ஒப்பந்தம் செய்துள்ளார் வஸந்த். ஜீவாவும், கே.வி. ஆனந்தும் பிரபல ஒளிப்பதிவாளரான பி.சி.ஸ்ரீராமின் சிஷ்யர்கள்.


விஜயகாந்த்-ரோஜா
படம் தமிழ்ச்செல்வன்

# வித்தியாச தலைப்பு

'மகாபிரபு' வெங்கடேஷ் இயக்கத்தில் பவித்ரன் தற்போது தயாரித்து வரும் படம் 'செல்வா'. இந்தப் படம் முடிவடைந்ததும் இன்னும் சில படங்களைச் சொந்தமாகத் தயாரிக்கவுள்ளார். இதற்காக இவர் புதிய படத்திற்காக அண்மையில் ஃபிலிம் சேம்பரில் பெயர் ஒன்றைப் பதிவு செய்திருக்கிறார்.

படத்தின் பெயர் என்ன தெரியுமா? 'காலேஜ் பாய்ஸ் வெர்சஸ் குறூப் டான்ஸர்.'

# மறுபடியும் அம்மாவிடம்

காதல் திருமணம் செய்து போதை மருந்துக்கு அடிமையாகி துரும்பாக இளைத்துப்போனவர் ஐஸ்வர்யா. 'மகளை மீட்டுத் தாருங்கள்' என்று உருக்கமான வேண்டுகோளும் விடுத்திருந்தார் அவரது அம்மா நடிகை லட்சுமி.

ஐஸ்வர்யாவுக்கு பெண் நண்பிகள்தான் அதிகம். பிரபலமாக இருந்தபோது சக நடிகைகள் சிலருடன் ஐஸ்வர்யா நெருக்கமாக இருந்தவர். திருமணமான பின்னர் அவரால் பழைய நினைவுகளை மறக்க முடியவில்லை. அதுதான் போதை மருந்துக்கு அடிமையானார். நான் ஒன்றும் அவரை தவறான வழிகளில் நடக்கத் தூண்டவில்லை. என்று இரகசிய வாக்குமூலம் விடுத்துள்ளார் ஐஸ்வர்யாவின் கணவர்.

இப்போது தாயார் லட்சுமியுடன் சேர்ந்துவிட்டார் ஐஸ்வர்யா.

தமிழ்ப் படவுலகில் மட்டும் நின்றால் நாலு காசு பார்க்கமுடியாது என்று இந்திப் படவுலகப் பக்கம் போனார் மோகினி.

பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து தனது திறமையைக் காட்டினார். அடித்தது சான்ஸ். றெக்கை கட்டிப் பறந்தார் மோகினி. படப்பிடிப்புக்கு போனார் மோகினி. அதிர்ச்சி காத்திருந்தது. குட்டி வேஷம்தான் கொடுத்திருக்கிறார்களாம். செமத்தியான ஏமாற்றம்.

# மினி சீனி

* தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம் ஆகிய மொழிப்படங்களில் நடித்துள்ள விஜயசாந்தி, முதன்முறையாக கன்னடப்படமொன்றில் நடிக்கவுள்ளார். படத்தின் பெயர் 'சி.ஐ.டி.'
* ஆறு வருடத்திற்கு முன்னர் பி.வாசு இயக்கத்தில் சத்யராஜ்-கௌதமி நடித்த 'வேலை கிடைச்சிடுச்சு' படம் இப்போது 'லோஃபர்' என்ற பெயரில் இந்தியில் தயாராகியுள்ளது. இதில் சத்யராஜ் வேடத்தில் அனில் கபூரும், கௌதமி வேடத்தில் ஜூஹி சாவ்லாவும் நடித்துள்ளனர்.
* என்.கே.விஸ்வநாதன் இயக்கத்தில் பாண்டியராஜன்-ரஞ்சிதா ஜோடியாக நடித்து வரும் 'சிவபார்வதி' என்ற படத்தின் பெயரை 'புருஷன் பொண்டாட்டி' என்று மாற்றியுள்ளனர்.
* தமிழில் படவாய்ப்புக்களின்றி இருக்கும் கனகா மலையாளத்தில் ஜோஷி இயக்கத்தில் 'சூர்யா' என்ற படத்தில் நடித்து வருகிறார். இதில் சுரேஷ்கோபி கதாநாயகனாக நடிக்கிறார்.
* 'ஆசை' படத்தில் அறிமுகமான சுவலட்சுமி தற்போது விக்னேஷுடன் 'வாணி மஹால்' என்ற படத்தில் நடித்து வருகிறார். அடுத்து இவர் பாலுமகேந்திரா இயக்கும் படமொன்றில் கதாநாயகியாக நடிக்கவிருக்கிறார்.
* ஏ.வி.எம்.தயாரிக்க அரவிந்தசாமி, பிரபுதேவா, கஜோல் நடித்து வரும் 'மின்சாரக் கனவு', தமிழில் வெளியாகும் அதே நேரத்தில் இந்தியில் 'சப்னே' என்ற பெயரில் வெளியாகவுள்ளது.
* மக்கள் திலகம் அமரர் எம்.ஜி.ஆர். இரட்டை வேடங்களில் நடித்த படங்களில் ஒன்று நினைத்ததை முடிப்பவன். அண்மையில் இதே பெயரைத் தனது புதிய படமொன்றிற்கு வைத்துள்ளார் ராமநாராயணன்.
* மோகன் கதாநாயகனாக நடிக்க 'தலைவாசல்' செல்வா இயக்கத்தில் தொடங்கப்பட்ட 'மகேசன்' சிறிது காலம் தடைப்பட்டிருந்தது. இது விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.
* தெலுங்கில் வெங்கடேஷ்-ரம்யா கிருஷ்ணன் நடித்த படம் ஒன்று தமிழில் 'நக்கீரன்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. பிரபு-சத்யராஜ் இணைந்து நடிக்கும் 'சிவசக்தி' படத்தின் இயக்கிவரும் சுரேஷ் கிருஷ்ணா நக்கீரனை இயக்கியுள்ளார்.


பிரசாந்த்-ஹீரா
படம் கிருஷ்ணா

# ஒத்திவைக்கப்பட்...

ரகுவரன் -...
நடித்த 'தொட்டாச் சி...
தமிழ்ப்படத்தை இ...
இயக்குவதாக இரு...
கே.எஸ் அதியமான்...
மில் ரகுவரன் வே...
நானா படேகரும், ...
வேடத்தில் ஜூஹி ச...
வும் நடிப்பதாக இரு...
ஆனால் இருவரது ...
களும் சரிப்பட்டு ...
தால், அந்தத் திட்டத்...
ஒத்தி வைத்துள்ளா...
கள்.

முகப்பில்
கமல்-கமல்-கமல்

ஜெயராம்-உதயா
படம்:-சின்னராமசாமி பெரியராமசாமி

# மறுத்த காரணம்

கடந்த ஆண்டின் சிறந்த தமிழ்ப்படத்திற்கான தேசிய விருது பெற்ற பாரதிராஜாவின் 'அந்தி மந்தாரை' படத்தில் நடிக்க முதலில் சிவகுமாரைத்தான் அணுகியிருந்தார்களாம். இதே போன்றதொரு பாத்திரத்தில் ஏற்கனவே 'இனி ஒரு சுதந்திரம்' படத்தில் நடித்து விட்டதால் இந்தப்படத்தினை மறுத்து விட்டாராம் சிவகுமார்.

# மீண்டும் தமிழில்

ரஜினி நடித்த 'அடுத்த வாரிசு', 'நான் அடிமை இல்லை, போன்ற படங்களைத் தயாரித்தவர் கன்னடத் தயாரிப்பாளர் துவாரகீஷ். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இவர் தமிழில் மீண்டும் ஒரு படத்தைத் தயாரிக்கவுள்ளார். இந்தப்படத்தில் விஜய் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.


குஷ்பு-ராம்கி-ஊர்வசி
படம் இரட்டை ரோஜா

# இரட்டை ரோஜாக்கள்

குஷ்புவும், ஊர்வசியும் இணைந்து நடித்தால் ராசியாக இருக்கும் என்று ஒரு சென்டிமென்ட். இருவரும் இணைந்து நடித்த 'இரட்டை ரோஜா' வெற்றிகரமாக ஓடியிருந்தது. அதன்பின்னர் இருவரையும் இணைத்து நடிக்க வைக்க பல தயாரிப்பாளர்கள் கதையோடு அழைகிறார்கள்.

'எட்டுப்பட்டி ராசா' படத்தில் இருவரும் நடிக்கின்றனர். பவித்ரன் பட நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் ஒன்றிலும் குஷ்புவும், ஊர்வசியும் ஜெயராமுக்கு ஜோடியாக நடிக்கப்போகின்றனர். அந்தப் படத்தில் கதை, வசனம், எழுதி இயக்கப் போகிறார் குருதனபால். 'தாய் மாமன்','மாமன் மகள்' போன்ற படங்களை இயக்கினாரே அவர்தான். படத்திற்கு இன்னமும் பெயர் சூட்டப்படவில்லை.

'இரட்டை ரோஜா' படத்தின் பின்னர் குஷ்புவும், ஊர்வசியும் இரட்டை ரோஜாக்கள் போல நட்பாகி விட்டார்களாம். எனினும் நல்ல கதை, நல்ல இயக்குநர் கிடைத்தால் மட்டுமே இணைந்து நடிப்போம் என்கிறார் ஊர்வசி.


புதுமுகம் ரிவியா
படம் செல்வா



படிப்பகம்

www.padippakam.com

# "துப்பாக்கிக்குக் கிடைப்பது மரியாதையல்ல ஹிட்லரும், முசோலினியும் நாட்டைத் திருத்த முடியாது!"

'இந்தியன்' படம் வியாபார ரீதியாக நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது. எனினும் 'இந்தியன்' படத்தில் தனக்கு பிடிக்காத அம்சங்களும் இருக்கின்றன என்கிறார் கமல். அதென்ன? பேட்டியைப் பாருங்கள்.

**கேள்வி:-** இந்தியன் படத்தில் வயதானவர் வேடத்தில் அடிக்கடி தலைமுடியை சரிசெய்யும் மேனரிஸத்திற்கு யாருடைய பாதிப்பாவது காரணமா?

**பதில்:-** இது தற்செயலானது. ஆனால் மக்களுக்குப் பிடித்திருந்தது. உண்மையில் நெற்றியில் முடி விழுவது எரிச்சலானதே. அதனால் அடிக்கடி சரி செய்தேன். தவிர எழுத்தாளர் சுஜாதாவுக்கும் இதே போன்று வெள்ளைமுடிகள். அவரைப் போல இருக்கவேண்டும் என்று நினைத்ததும் காரணமாக இருக்கலாம்.



**கேள்வி:-** 'இந்தியன்' படத்தின் வெற்றியை எதிர்பார்த்தீர்களா?

**பதில்:-** கண்டிப்பாக. அப்படி இல்லையென்றால் கேரளாவுக்கான விநியோக உரிமையை நான் வாங்கியிருக்க மாட்டேன். அதைத்தவிர அப்பா-பிள்ளை படங்கள் பெரும்பாலும் வெற்றி பெற்றிருக்கின்றன. உதாரணமாக, ஒரு கைதியின் டயரி.

**கேள்வி:-** உங்கள் கருத்துப்படி 'இந்தியன்' எதனால் வெற்றி பெற்றது?

**பதில்:-** நம்முடைய தினசரி வாழ்க்கையில் நாம் லஞ்சத்தை சந்திக்கின்றோம். உண்மையில் எல்லாக் குடிமகனும் லஞ்சத்தை விரும்புவதில்லை. இந்தப் படம் அவர்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இருந்தது. அதுவும் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம்.

**கேள்வி:-** உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** என்னுடைய எண்ணங்கள் பாசிசம் அல்ல. ஏனென்றால் பாசிசம் எப்போதும் ஜெமிக்காது. ஒரு ஹிட்லரோ, முசோலினியோ நாட்டைத் திருத்த முடியும் என்று நினைப்பது தவறு. துப்பாக்கி எடுத்தால் கிடைப்பது மரியாதையல்ல. பயம்.

**கேள்வி:-** இந்தியனில் வயதான வேடம் பிரமிக்கவைத்த அளவுக்கு மகன் வேடம் இல்லையே ஏன்?

**பதில்:-** எனக்கு அந்த வேடம் செய்ய இஷ்டமேயில்லை. ஆனால் அதுவும் ஒரு வேலைதானே. அதிலும் என்னுடைய நடிப்பைக் காண்பித்தேன். வயதான வேடத்தில் முழுக் கவனமும் செலுத்தினேன். சில சமயங்களில் அந்தக் கதாபாத்திரமாகவே மாறினேன். அதேபோல மகன் பாத்திரத்தில் வரும் பாடல் காட்சிகளும் எனக்குப் பிடிக்கவில்லை.

அவுஸ்திரேலியாவில் படமாக்கப்பட்ட பாடல் காட்சியும் எனக்குப் பிடிக்கவில்லை. தொழில் நுட்ப விஷயத்திற்காக மட்டுமே அந்தப் பாடல் படமாக்கப்பட்டது. படத்தில் ஆறு பாடல்கள் வைக்க வேண்டியதாகிவிட்டது. ஏ.ஆர் ரகுமான் இசைக்காக.

என்னைப் பொறுத்தவரை படமும், இசையும் தனித்தனி. அது எப்போதாவதுதான் இணைய வேண்டும். என்னமோ படமும் இசையும் திருமணம் செய்து கொண்டது போலவும், விவாகரத்தே செய்யமுடியாது போலவும் எல்லாப் படங்களிலும் பாடல்கள் வருகின்றன.

இதனால் நாம் ரசிகர்களை ஏமாற்றுகிறோம். இசைக்காக தனியாக கசட்டுக்களும, விடியோக்களும் இருக்கின்றன. அதனால்தான் பாடல்கள் இல்லாமல் 'குருதிப்புனல்' எடுத்தோம்.

**கே:-** நீங்கள் ஏன் 'நாயகன்' படத்தின் இரண்டாவது பாகத்தை எடுக்கக்கூடாது?

**பதில்:-** எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்தியனின் இரண்டாவது பாகத்தை எடுக்க முடியும் இதுதான் அதற்கு சரியான நேரம். ஒரு நடிகனுக்கு ஒரு முறைதான் இதுமாதிரி சந்தர்ப்பம் கிடைக்கும்."

## அவசரம்-இரு கதாநாயகிகள்

'காதல் தேசம்', 'சக்தி' ஆகிய படங்களில் பெரும் எதிர்பார்ப்புடன் நடித்துக்கொண்டிருக்கிறார் வினீத். அந்த இரண்டு படங்களும் வெளியாகி ஹிட்டானால் வினீத் பெரியாளாகி விடுவார்.

அதனை நினைத்து தமது 'அவசரம்' படத்தில் வினீத்தை கதாநாயகனாக்கி, அவர் மனம் குளிர இரண்டு கதாநாயகிகளையும் நடிக்கவைத்துள்ளார் திலகவதி. பொலிஸ் உயர் அதிகாரியும் எழுத்தாளரமான திருமதி திலகவதி கதை எழுத, அவரது மகன் இயக்கும் படம் 'அவசரம்.'

வினீத் ஜோடியாக ஊர்வசியும், மலையாள படவுலக நடிகை ஒருவரும் நடிக்கவுள்ளனர்.

## சோதனை மர்மம்

நடிகை ரம்பா வீட்டில் நடந்த வருமானவரிச் சோதனையின் பின்னால் ஒரு இரகசியம் இருக்கிறது. பிரபலமான புள்ளி ஒருவர் ரம்பாவை தனியாகத் தரிசிக்க விரும்பினாராம். ரம்பா மறுப்புத் தெரிவித்துவிட்டாராம்.

அவரோடு இணங்கிப்போவதுதான் நல்லது என்று சிலர் தூது சென்றும் ரம்பா மசியவில்லை. பிரபல புள்ளிக்கு வந்ததே கோபம். தனது செல்வாக்கை பயன்படுத்தி ரம்பாவீட்டில் சோதனை நடத்த வைத்துவிட்டாராம்.

## அம்பிகாவின் மறுபிரவேசம்

நடிகைகள் அம்பிகா, ராதா சகோதரிகளை மறந்திருக்க மாட்டீர்கள்தானே. இருவருமே திருமணம் செய்துகொண்டு ஒதுங்கிவிட்டார்கள்.

அம்பிகாவுக்கு மீண்டும் ஒரு ஆசை. அமெரிக்காவில் இருந்து திரும்பி வந்து சான்ஸ் தேடினார். பாலசந்தரிடம் போய் ஒற்றைக்காலில் நின்றார். தனது 'கல்கி' படத்தில் நடிக்க வாய்ப்புக் கொடுத்தார் பாலசந்தர். பின்னர் என்ன நினைத்தாரோ தெரியாது அம்பிகாவை தூக்கிவிட்டார்.

மனம் உடைந்த அம்பிகா தன்னோடு நெருக்கமாக இருந்த ஹீரோக்களை நாடினார். சிலர் பழைய ஞாபகங்களையே மறந்துவிட்டனர். அம்பிகாவை கண்டுகொள்ளவேயில்லை. சத்யராஜ் மட்டும் அம்பிகாவை சந்தித்து நலம் விசாரித்தார்.

தனது 'வள்ளல்' படத்தில் ஒரு வாய்ப்புத்தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறாராம் சத்யராஜ். வள்ளல் படத்தில் சத்யராஜுக்கு ஜோடியாக அம்பிகா நடிக்கக்கூடும். முன்புபோல இளமையோடு துள்ளல்போட முடியாததால் அம்மா வேஷம்.



சுபாஸ்ரீ
படம்: மைனர் மாப்பிள்ளை

## அச்சா... கை வச்சா....

தற்போதைய பாடல்களே தினுசுதான். 'அந்தநாள்' படத்தில் ஒரு பாடல். ஜோதி மீனா ஆடுகிறார். சாராய வியாபாரி மயங்குகிறார். காட்சி அதுதான். அந்த காட்சிக்கு கவிஞர் பிறைசூடன் எழுதிய பாடல் இப்படித் தொடங்குகிறது. "அச்சா.. அச்சா.. நீ பச்சா பச்சா.. வச்சா வச்சா கை வச்சா வச்சா.." பாடலுக்கு இசை: சவுந்தர்யன்.

## துயாரிப்பாளர் பிடியில்

நடிகை ஜோதிமீனா கவுண்டமணியுடனும் வடிவேலுவுடனும் ராசியாக இருப்பது பிரபலமான கிசுகிசு. கவுண்டமணியோடு சின்னப் பூசல் என்பதும் தெரிந்த செய்தி.

இதேவேளை மற்றொரு செய்தி. ஜோதிமீனா தற்போது தங்கியிருப்பது படத்தயாரிப்பாளரும், அரசியல்வாதியுமான கோவைத்தம்பியின் பாதுகாப்பில்.

பல வெள்ளிவிழாப் படங்களை தயாரித்தவரான கோவைத்தம்பிக்கு வருடா வருடம் ஒரு நடிகையை கைக்குள் போட்டுக்கொள்வதுதான் பொழுது போக்கு. ஜோதிமீனாவின் குலுக்கல் நடனத்தால் மனம் உலுக்கப்பட்ட கோவைத்தம்பி தன் இதயத்தை தூக்கி ஜோதிமீனாவிடம் தற்காலிகமாகக் கொடுத்து விட்டாராம்.

## 'நல்லவனுக்கு வல்லவன்'

'இந்தியன்' படத்தில் பார்த்த ஊர்மிளாவை விரைவில் மற்றொரு படத்திலும் தமிழ்ப் பட ரசிகர்கள் கண்டு கண்களால் உண்டு மகிழலாம்.

சிரஞ்சீவி-ஊர்மிளா நடித்து தெலுங்கில் வெற்றிபெற்ற படம் 'மஞ்சவாடுக்கு மஞ்சவாடு.' அதனைத் தமிழில் 'நல்லவனுக்கு வல்லவன்' என்ற பெயரில் மாற்றுகிறார்கள்.

ஊர்மிளாவுடன், தபுவும் இருக்கிறார். வில்லனாக பொன்னம்பலம் நடித்துள்ளார்.

இயக்கம், ராம்கோபால் வர்மா. இசை: இளையராஜா.





கார்த்திக்-நக்மா
படம்: மேட்டுக்குடி

## யார் இயக்குநர்?

ரஜினிகாந்த் நடிக்கும் அடுத்த படம் யாருக்கு என்பதைவிட, அடுத்த படத்தை இயக்கப்போவது யார் என்பதுதான் சஸ்பென்ஸ்.

சுரேஸ் கிருஷ்ணா, சி.சுந்தர், ஷங்கர் ஆகியோரின் பெயர்கள் அடிபடுகின்றன.

'இந்தியன்' படத்தைப் பார்த்த ரஜினி அதன் இயக்குநர் ஷங்கரை அழைத்து பாராட்டியிருக்கிறார். அதனால் ஷங்கருக்கு அதிஷ்டம் அடித்தாலும் ஆச்சரியமில்லை.

சி.சுந்தர் இயக்கிய 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தையும் பார்த்திருக்கிறார் ரஜினி. யாருக்கு வாய்ப்போ?

## "பணமா முக்கியம்?"



'காதல் கோட்டை.' படத்தில் ஹீரா படுகவர்ச்சியாக உடை அணிந்து நடித்திருக்கிறார். அஜித் குமார் ஹீராவின் மார்பில் முகம் புதைத்து முத்தமிடுவார். வேறு ஒரு நடிகராக இருந்திருந்தால் அந்தளவுக்கு நெருக்கமாக நடித்திருக்க மாட்டாராம் ஹீரா.

'காதல் கோட்டை' படத்தைப் பாருங்கள். அஜித்குமார் ஒரு ஜென்டில்மேன் என்பதால் நான் எந்தளவுக்கு ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறேன் என்பது தெரியும்.

எனக்கு பணமோ, புகழோ முக்கியமில்லை. நல்ல நண்பர்கள் தான் முக்கியம். அவர்களுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்று கூறியிருக்கிறார் ஹீரா. சமீபகாலமாக அதிரடியாகவே பேசிக் கொண்டிருக்கிறார் அம்மணி.

## பெண்கள் செலவு

அரவிந்தசாமி, ஷாக்ஷி நடித்துவரும் படம் 'புதையல்' சமீபத்தில் ஒரு பாடல் காட்சி பிரமாண்டமாகப் படமாக்கப்பட்டது. "எனக்கும் உனக்கும் எக்கச்சக்கப் பொருத்தம், உனக்கு புரியல அதுதான் வருத்தம். காதல் என்பது காஸ்ட்லி உறவு. பெண்கள் எல்லாம், ஆண்களின் செலவு." பாடல் எழுதியவர் வைரமுத்து. பாடலைப் பாடியவர்கள் கோபால்ராவ், சொர்ணலதா.



விஜயகுமார்
படம்: அந்திமந்தாரை

## 'எட்டுப்பட்டி ராசா'

ஒரு பக்கம் குளு குளு குஷ்பு. மறுபுறம் நயமாக ஊர்வசி. நெப்போலியன் பாடு கொண்டாட்டம்தான்.

நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் 'எட்டுப்பட்டி ராசா' அவருக்கு ஜோடியாக நடிக்கின்றனர் குஷ்புவும், ஊர்வசியும்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் கஸ்தூரி ராஜா. 'நாட்டுப்புறப் பாடல்' வெற்றிப் படத்தை இயக்கியவர் இவர்தான்.

வேலைக்கு செல்ல காலையில் வீட்டைவிட்டுக் கிளம்பும் கணவன் மாலையில் வேலை முடித்து நண்பர்களுடன் அரட்டைக் கச்சேரி நடத்திவிட்டு இரவு வீடு திரும்புகிறான். வீட்டில் இருக்கும் மனைவிக்கும் ஆசாபாசம் இருக்கும் என்பதை அவன் உணருவதில்லை. வயதான பின்னரே மனைவியின் அன்பை உணருகிறான். அதுதான் படத்தின் கதைக்கான கரு.

## புது பங்களா

படவாய்ப்புக்கள் குறைவாக இருந்தாலும் சென்னையில் வேப்பேரி என்ற இடத்தில் பெரிய பங்களா ஒன்று வாங்கிவிட்டார் கௌதமி.

மலையாளத்தில் உள்ள பிரபல தயாரிப்பாளரின் உபயம் என்று பேசிக்கொள்கிறார்கள்.



படிப்பகம்

# பி.ஜே.பி – எம்.ஜே.பி

## அர்த்தம் தெரியுமா?

நட்புரிமையுடனும் நல்ல பண்புடனும் எவ்விதத் தங்குதடையின்றிப் பழகுவதே நமது பண்பாட்டுத் தத்துவமாகும். நமது பழக்கவழக்கங்களில் பழமை நெறி கடைப் பிடிக்கப்படுகின்றது. அதாவது, காலாசார ரீதியான முறை செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பலநாடுகளின் மரபுகளும் பழக்கவழக்கங்களும் அந்தந்த நாடுகளில் வாழ்க்கை முறையில் ஆழமாகப் பதிந்து விட்டதால் சமூகச் சூழ்நிலைகள் பலவற்றில் வேறுபட்ட போக்குகள் காணப்படுகின்றன.



பொதுவாக வெளிநாடுகளில்-சம்பிரதாயம் என்று கருதப்படும் சமூகப்போக்கின் எல்லாப்பாணிகளுக்கும் ஏற்ப வெளிநாடுகளிலிருந்து வருபவர்களும் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர் பார்ப்பது கிடையாது.

உதாரணமாக அமெரிக்கப்பழக்க வழக்கங்களின் மேற்போக்கான தன்மை நமக்கு வியப்பாகத் தோன்றலாம். அதாவது மேற்போக்கான நட்புக்காட்டுவது அமெரிக்கருடைய இயல்பு. இதை நெருங்கிய நட்பு என்று கருதிவிடக் கூடாது. ஏனெனில் நெருங்கிய நட்பு என்பது காலப்போக்கில் படிப்படியாக வளர்ச்சி பெற்று உருவாவதாகும்.

பிறநாட்டு மக்களை விடக் குறுகிய காலத்தில் அமெரிக்கர்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் கூப்பிட்டுப் பெயரைச் சொல்லி மனம் விட்டுப் பழகிக் கொள்வார்கள்.

அமெரிக்கர்களுடைய பழக்க வழக்கங்களின் நுட்பங்கள் சிலவல்ல. அறிகுறிகளின் பொருள்கள் மற்றும் குரலின் பாங்குகள் போன்றவற்றைப் புரிந்து கொள்ள நமக்குச் சற்றுக் காலம் பிடிக்கும்.

கல்லூரி மாணவர்கள் தங்களுக்கென்று சில சொற்களை அமைத்துக் கொள்வார்கள். அதாவது கல்லூரி மாணவிகள் தங்களுக்குள் 'ஏய்! அவர் ஒரு பி.ஜெ.பி,' 'இல்ல அவர் ஒரு எம்.ஜெ.பிடி,' என்று சுருக்கமாக அவர்களுக்கே புரியும்படி கேலியாகப் பேசி மகிழ்வார்கள். அதில் பி.ஜெ.பி. என்றால் பயங்கர ஜொள்ளு பார்ட்டியாம். எம்.ஜெ.பி. என்றால் மாஸ்டர் ஒவ் ஜொள்ளுப் பார்ட்டியாம்.

கை குலுக்குவது பற்றி அமெரிக்கர்களிடம் மரபு ஒன்றும் கிடையாது. இரண்டு ஆண்கள் சந்திக்கும்போது அவர்கள் கைகுலுக்கிக் கொள்வது வழக்கம். அம்முறை நமது நாட்டிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் அமெரிக்காவில் ஒரு பெண் வலிந்து கையை நீட்டினாலன்றி எந்த ஆணும் அவளுடன் கை குலுக்குவதில்லை.

பழக்க வழக்கங்களில் அறிமுக பழக்க வழக்கம் என்பது முதன்மையானதும் முக்கியமானதும் கூட. நீங்கள் யாரிடமாவது அறிமுகப் படுத்தி வைக்கப்பட்டால் அவரைப் பார்த்து, "நீங்கள் நலமாக இருக்கிறீர்களா?" என்றோ, அல்லது "உங்களைச் சந்தித்தது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றோ சொல்லுதல் நலம். சில சமயம் ஹலோ என்று மட்டும் சொன்னால் போதும்."

# முகத்தைக் காப்போம்!

ஆண்களுக்கும், பெண்களுக்கும் பருவ வயதில் முகப்பருக்கள் தோன்றுகின்றன. முக்கியமாகக் கடும் வெயில் காலத்தில் பருக்கள் அதிகமான அளவு வரும் வாய்ப்புள்ளது.

முகப்பரு என்பது கொழுப்புக்கட்டியே ஆகும். நமது உடம்பில் வியர்வையை வெளியேற்றும் நுண்துளைகள் ஏராளமாக உள்ளன. அவற்றுக்கு அருகே கொழுப்புச் சுரப்பிகள் வழியே பிசுபிசுவென்று கொழுப்புக் கலந்த திரவம் வெளிவரும். இது முகத் தோல் உலர்வதைத் தடுத்து, முகத்தைப் பளபளப்பாக வைக்கிறது.

16 வயது முதல் 25 வயது வரை உள்ள ஆண், பெண்களுக்கு முகத்தில் கொழுப்பு அதிகமாகச் சுரக்கிறது. இதில் வியர்வை கலந்து, பக்டீரியா போன்ற கிருமிகள் படிந்து, இறுகிக் கட்டியாகி விடுகிறது. ஒரு சில நாட்களில் கட்டியின் நிறம் மாறி, கறுத்து விடுகிறது.

இதைத் தான் நாம் பரு என்று சொல்லுகிறோம்.

**தடுக்கும் வழிகள்:**

முகத்தில் பருக்கள் வராமல் தடுப்பது மிகவும் எளிது. கொழுப்புச் சத்து மிகுந்த உணவு வகைகளான இறைச்சி, முட்டை, எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள், கிழங்கு வகைகள், காரம் ஆகியவற்றை நாம் சாப்பிடக்கூடாது.

மது, கோப்பி, தேநீர் ஆகியவற்றை அருந்தக் கூடாது. விட்டமின்கள் மிகுந்த பச்சைக் காய்கறிகள் மற்றும் கனிந்த பழங்கள், கீரை வகைகளை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அதிகாலை இளம் வெயில், தோலுக்கு மிகவும் நல்லது. எனவே காலை வெயில் முகத்தில் பட்டால் பக்ரீரியா போன்ற கிருமிகள் சூரிய ஒளி வெப்பத்தினால் அழிக்கப்படுகின்றன. முகத்தில் பருக்கள் தோன்றுவது குறையும்.

மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நம் உடம்பில் இருந்து அதிகமான வியர்வை வெளிவரும். அடிக்கடி முகத்தைக் குளிர்ந்த நீரினால் கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நமது உடம்பின்



மீதுள்ள வியர்வைத் துவாரங்கள் அடைக்கப் பட்டு பக்ரீரியா கிருமிகள் தோலின் மீது சேரும். ஒரு நாளைக்கு மூன்று தடவையாவது முகத்தைச் சோப்புப் போட்டுக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும்.

சிலருக்கு சோப்பு, முகப்பவுடர் ஆகியவை அலர்ஜியாக இருக்கலாம். அப்படிப் பட்டவர்கள் அவற்றைத் தவிர்ப்பது நல்லது.

மனிதனுக்கு மலச்சிக்கல் இருந்தால் பருக்கள் அதிகமாகத் தோன்ற வாய்ப்புண்டு. மலச்சிக்கலை நீக்க- கீரை, பழவகைகள் அதிகமாகச் சாப்பிடவேண்டும். மலச்சிக்கலுக்கு நல்ல மருந்து அதிகமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். மேற் கூறிய வழிமுறைகளைக் கடைப்பிடித்தால் முகப்பருக்கள் வராமல் பாதுகாக்க முடியும்.

# "பெண் ஒன்றும் ஆணின் அடிமையல்ல"

"பெண்ணை ஆணின் துணையாக நான் பார்க்கவில்லை. மாறாக பூமியில் வாழ்கிற மானிடர்களாகவே காண்கிறேன்.

அவர்கள் மானுடர்கள் என்பதனாலேயே சுயசிந்தனை, சுய செயற்பாடு கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு இருப்பது ஆண்கள் சிலருக்கு பாதகமாக இருக்குமே தவிர, மனித வாழ்வுக்குப் பாதகமில்லை. மேலும் அதுவே சாதகமானதும் கூட.

சிந்தனை தடைப்படுத்தப்பட்ட நிலையிலோ, கருத்து சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையிலோ பெண் வைக்கப்படுகையில் அவள் அடிமையாகிறாள். அடிமைகள் போஷிக்கப்படலாம். ஆனால் அவர்கள் வாழ்க்கை போஷாக்கு நிறைந்ததாக இல்லை.

இறக்கைகள் அறுக்கப்பட்ட பிறகு, பறவைகளுக்கு பறவை என்ற பெயர் தகுமா, என்ன? தகாது.

பெண் என்கிற பெயர் உறுப்பு வித்தியாசத்தால் வந்த பெயர்தான். பிறந்த குழந்தையை ஆணாகவோ, பெண்ணாகவோ, பிரிக்கிற ஒன்று உறுப்புத்தான்.

அது ஒன்று தவிர, இந்தச் சின்ன வெளித்தோற்ற மாறுபாடு ஒன்றைத்தவிர, ஆணுக்குப் பெண் இங்கே இளப்பில்லை என்று சொல்ல வேண்டி இருக்கிறது.

நம் சமூகம் மிகுந்த கோளாறுகள் கொண்ட சமூகம் என்பதை எவர்தான் மறுப்பர்? பெரியார் மிகுந்த பொருள்படச் சொன்னார். "பிறக்கையில் இரண்டு கைகளும் சம பலத்துடன்தான் பிறக்கின்றன. பயன்பாடு காரணமாக இடது பலவீனமாகவும், அல்லது பலம் குறைந்தும், வலது பலம் மிகுந்தும் ஆகின்றன" என்றார்.

மிகவும் சரியான, நியாயமான கருத்து இது.

உண்மையில் அடிமைகளே அடிமைகளை வேண்டுகிறார்கள்.

சுதந்திரர்கள் அடிமைகளை வைத்திருப்பதில்லை.

இங்கு ஆண்கள் பலர் அடிமைகள்.

ஆகவே, பெண்கள் அடிமைகளாக்கப் பட்டிருக்கிறார்கள்!

திருமணம் குறித்து நான் மிகவும் சிந்தித்து இருக்கிறேன்.



திருமணங்களே இங்கு சுவையற்றதாகியுள்ளன. அதைத் தொடர்ந்துவரும் 'முதலிரவு' இங்கு அரக்கத்தனமானது.

புரிதலும், சிநேகித்தலும், விரும்புவதும் ஒத்த அலைவரிசையில் இணைவதும் அல்லவோ கலவி? கலத்தல் அல்லவோ கலவி? நீரும், நீரும் இணைவது அன்றோ கலப்பு? இங்கு எண்ணையும் நீரும் அல்லவோ கலக்கிறது? கலந்துவிடமுடியாது தத்தளிக்கிறது.

திருமணம், அதைச் செய்து கொள்பவர்களால் தீர்மானிக்கப்படும் காலம் நோக்கி இவ்வையகம் விரைவாக நடப்பதாக நான் கருதுகிறேன். அது, இருமனம் சேர்தல் என்பதாக இருக்கவேண்டும். பெற்றோர்கள், அடிப்படைச் சம்பளம், சாதி, மதம், இனம், தேசம், சட்டம், நீதித்துறை, காவல்துறை என்ற மனிதகுலத் தடைகள் எதுவும் இன்றி நிகழ்வுறவேண்டும்."

**தமிழகத்தின் பிரபல எழுத்தாளரும், தனது நாவல்களுக்கு பல விருதுகள் பெற்றவருமான பிரபஞ்சன் 'தீயிலே வளர் சோதி' என்ற தனது கதைத்தொகுப்புக்கு எழுதிய முன்னுரை அது.**

# சுவைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது **சுகந்தினி**)

## மட்டன் உப்புமா

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| ஆட்டிறைச்சி - | 200 கிராம் |
| கரட் - | 50 கிராம் |
| பச்சைப் பட்டாணி- | 50 கிராம் |
| வெங்காயம் - | 50 கிராம் |
| வறுத்த ரவை - | 500 கிராம் |
| நெய் - | 50 கிராம் |
| பச்சை மிளகாய்- | 5 |
| இஞ்சி - | 1 துண்டு |
| கடுகு, உழுந்து- | 1/2 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை - | சிறிது |
| உப்பு - | அளவாக. |

செய்முறை:

முதலில் ஆட்டிறைச்சி, கரட், பச்சைப்பட்டாணி ஆகியவற்றைச் சிறிது சிறிதாக நறுக்கி தண்ணீரில் வேக வைக்கவும். பின் வாணலியில் நெய்யை விட்டு கடுகு, உழுந்து, நறுக்கிய வெங்காயம், இரண்டாக வெட்டிய பச்சை மிளகாய், நறுக்கிய இஞ்சி, உப்பு சேர்த்து வதக்கவும். ஓரளவு வதங்கியவுடன் 4கப் தண்ணீர் சேர்த்து நன்றாகக் கொதிக்க விடவும். நன்றாகக் கொதித்தவுடன் வறுத்த ரவை, வேக வைத்த ஆட்டிறைச்சி, கரட், பட்டாணி போன்றவற்றைச் சேர்த்துக் கிளறவும். ஓரளவு கிளறியவுடன் இறக்கவும். ஆறியவுடன் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

# பட்டுச்சேலை வென்றவர்கள்



முரசின் பட்டுச்சேலைப் பரிசுத் திட்டத்தில் வெற்றிபெற்ற அதிஷ்டசாலிகளில் மூவர்.

| | | |
|---|---|---|
| ஜெஸ்மின் சிரியு புஷ்பம் | செல்வி ந. விமலராணி | ஜி.பாலபவானி |
| மெதகலதுர, இரத்தினபுரி | தலவாக்கலைத் தோட்டம், தலவாக்கலை. | நெளுக்குளம், வவுனியா. |

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

## மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** Z

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:

அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:27-07-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# வயது நாற்பதா?

## தூக்கம் தொலைவிலா?

நாற்பது வயதைத் தாண்டியவர்களுக்குப் பொதுவாகத் தூங்குவதே களைப்பைத் தருகிறது. படுத்தாலும் தூக்கம் வருவதில்லை. அடிக்கடி தூக்கத்தில் இதயத் துடிப்பு சீராக இருப்பதில்லை. அடிக்கடி தூக்கத்தில் விழித்துக் கொள்வதும் உண்டு. இதனால் தூக்க மாத்திரைகளைப் பழக்கப் படுத்தி அதற்கே அடிமையும் ஆகிவிடுகிறார்கள்.

இதற்கு விடிவு என்ன? அமைதியற்ற தூக்கத்தை நிறுத்த அல்லது மாற்றி நல்ல சுகமான தூக்கத்தைப் பெற, நம்முடைய வேலை-ஓய்வு அட்டவணையைச் சிறப்பாகத் தயாரித்துக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் உணவை உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக மருந்துகளை எடுத்துக் கொள்வதை முழுமையாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தூக்கத்திற்கு அடிகோலும் மாலை நேரம் மிகவும் சிறப்பானது. அதை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதுதான் முதன்மையானது ஆகும். நீண்ட நாட்களாகப் பழகிய பழக்க வழக்கங்களைத் திடீரென்று மாற்றிக் கொள்ளக் கூடாது. சிலருக்கு மாலையில் உலாவி வந்தால் நல்ல தூக்கம் அமையும். சிலர் வெறும் வயிற்றுடன் தூங்கினால் தூக்கம் வருவதில்லை. இரவு உணவு உண்டபின் சிறிது நடந்து உலாவி விட்டு வந்து, அதன் பின் மித வெப்பநீரில் நீராடித் தூங்கச் செல்வதை நிறுத்துவது நலம் பயக்கும்.

சிலருக்குத் தூங்கும் முன் படித்தால்தான் தூக்கம் வருவதுண்டு. ஆனால் இப்பழக்கம் நமக்கு ஊறு விளைவிக்கின்றது என்று வல்லுநர்கள் கூறுகின்றார்கள். ஆனால் இதைப் பழக்கமாக்க் கொண்டவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.



சிலருக்குத் தொன்று தொட்டுத் தூக்கமின்மை இருந்து கொண்டே இருக்கும். இதை அவ்வளவு எளிதில் மாற்றிக் கொள்ள இயலாது. ஆனால் முயன்று மாற்றிக் கொள்ளலாம். இது நரம்பு மண்டலத்தில் ஏற்படும் சில குறைபாடுகளினால் நிகழ்வதாகும். இதை உளவியல் மருத்தவ முறைப்படியோ அல்லது வேறு மனோதத்துவ முறைப்படியோ குணப்படுத்திக் கொள்ளலாம். நமக்கு நாமே சுயகட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டும் நல்ல நிலையில் வாழலாம்.

# இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## மாவனெல்லை வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**ரம்ஜம்பி தாஹிர்.**

இல.31, ஆஸ்பத்திரி தெரு, மாவனெல்லை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## கட்டுப்பாடுகளை மீறிய தூயாரம்

உலகைப் பிரிந்து போகும்
அழகு நிலாவை
எனது பார்வையால் கட்டி
எப்படி நிறுத்துவது....?
***
அஸ்தமனத்திடம்,
ஆறாகப் பாயும் கண்ணீருடன்,
அழுது புரண்டு யாசித்தாலும்,
அந்தச் சூரியன்
தொடுவானத்தின்
மடியை விட்டிறங்கி
வந்துவிடவா போகிறது?
***
வாடிக்கொண்டிருந்த
காதல் புஷ்பத்தின்
இதழ்களுக்கிடையே
என் வேதனைகளை
நிரப்பிவைத்து
அதன் வாட்டத்தைத்
தடுத்து விடவா முடியும்?
***
அவன் இதயம்
பாலை வனமாகப்
பரந்து விரிந்திருந்ததை
அறியாமல் தான்
என் விழிகள்
ஒளியிழக்கும் வரை
கண்ணீர் இறைத்தேன்!
***
எனக்கென்று
ஒரேயொரு
வாழ்க்கை தான் இருந்தது;
எனக்கென்று
ஒரேயொரு
வசந்த காலம் தான்
வழிபார்த்திருந்தது;
வாழ்வை மறித்து- என்
வசந்தங்களை- அவன்
வாரிக்கொண்டு போய்விட்டான்!
***
சின்னப் பருவம் முதல்
தவமாகத் தவமிருந்து
பெற்ற காதலைப்
பறிகொடுத்த சோகம்- என்
சரித்திரப் பக்கங்களின்
முக்கால் வாசியையும்
மூடி மறைத்துள்ளது!
***
பனிப்பாளங்களைப்
பெயர்த்தெடுத்துப்
பேரழகுடன்
கட்டிவைத்திருந்த
காதல் உலகு-எனது
கண்ணீர்ச் சூட்டில்
கரைந்துருகி
வழிந்தோடிப்போனது!
***
வாழ்க்கையென்பது-நான்
வரைந்து வைத்திருந்த
கோடுகளைத் தாண்டி,
முட் புதர்களுக்குள்
இழுத்துச் செல்லப்பட்ட பின்னர்
எத்தனை முட்களின்
முனைவுகளிலிருந்து
என் வாழ்வை
மீட்டெடுப்பேன்?
***

செல்வி பஹீமா ஜஹான்-
தெமடகொல்ல, மெல்சிபுர.

## உறவுகளைத் தேடும் சுவடுகள்

பாளையில் கப்பல் செய்து
ஓலையில் பாய் அமைத்து
கடலோரம் ஓட விட்டு
பாலகன் கண்டு மகிழும்
அந்த உறவை இழந்த
கடற்கரைகள்....!

பாடசாலை செல்லாது
பாதி வழியில்
புத்தகத்தை பதுக்கிவைத்து
துள்ளித்தாவி ஏறி
இளநீர் குடித்து மகிழும்
அந்த உறவை இழந்த
தென்னந் தோப்புகள்....!

மணியோசையால்
ஊரையே...
தன்னகத்தே இழுத்து
இரு கைகள் கூப்பி
தமது குறைகளை இறக்கி வைத்து
நிம்மதிகாணும்
அந்த உறவை இழந்த
கோவில்கள்....!

குருவிற்கே
குரங்கு வால் வரைந்து
நையாண்டி செய்து
பட்டங்கள் சூட்டி மகிழும்
அந்த உறவை இழந்த
பாடசாலைகள்.....!

மிதி வண்டியில் சென்று
மிடியும் சல்வார்க்கமிசும்
அணிபவளுக்கு
துடுக்கான கதைகள் சொல்லி
சந்தியில் நின்று சரித்திரம் பேசும்
அந்த உறவை இழந்த
தெருக்கள்.....!

மாலை வேளையில்
விடுமுறை நாட்களில்
கிளித்தட்டு, கிட்டிப் பொல்லு
கால் பந்து, கைப்பந்து
விளையாடி மகிழும்
அந்த உறவை இழந்த
மைதானங்கள்.....!

மாரி காலத்தில்
பள்ளிச் சிறார்கள்
குதித்து நீந்தி மகிழும்
அந்த உறவை இழந்த
நிறைந்த குளங்கள்....!

புதிய அரசியலை
ஆராய்ச்சி செய்யும்
இளைஞர்களின்
அந்த உறவை இழந்த
புளியமரப் போக்கடி......!

குதுகலிக்கும் பெண்கள்
கூடிக் குலாவி
இரவுக் காதல் உறவுகளுக்கு
வியப்புக்கள் எழுப்பி
விடுகதைகள் கூறி மகிழும்
அந்த உறவை இழந்த
குழாயடி......!

பகலில் சூரியனிடமும்
இரவில் சந்திரனிடமும்
உறவுகளின் சுகத்தை
துயரக் கதைகளைக் கேட்டு
கடலலை ஓசையால்
ஏக்கப் பெருமூச்செறிந்த
அந்த உறவைத் தேடும்,
சவடுகள்.....!

காவலூர் மனோ.



## தேன் கிண்ணம்

## நுரைப்பூக்கள்

விழி எடு...
கடிதம் எழுது;
அவளின் முகவரி போட்டு
தபாலில் இடு!
0-0-0
புடவை கிழி...
திரி செய்!
அவளின் வாசலுக்கு
விளக்கோடு போ!
0-0-0
சன்னல் அருகே
குடிலடி;
காதலிக்க அழை!
0-0-0
அவளோடு
நேர் முகம் கொடு;
மௌன ஓத்திகை
எடுப்பாள்!
0-0-0
நீ....!
அவளின்
கைகளால் ஏறு;
தோளிலே குந்து;
காதோட்டை வழியாக
கதைத்துப்பார்!
0-0-0
சிரிப்பாள்;
உனக்கு இனிக்கும்;
அவள்வரை
நீரு-
பின்-
தொடு!
0-0-0
சுதி பிரளும்,
நரம்புகள் அசையும்.
சதை சுடும்.
0-0-0
காதலைக் கூறு...!
காற்றுக்கு காட்டாமல்
ரோசா கொடு!
0-0-0
அவள் விரலை...
உன் விரலோடு
பூட்டிக் கொண்டு நட;
தூரம் ஞாபகமிருக்காது.
0-0-0
கல்யாணம் பண்ணு;
நீயும் அவளுமாய்
அமளிப்படு-
விடிவது தெரியாமலிருக்கும்.

பௌர்ணமிநிலா- பொத்துவில்

## அந்த நாள் ஞாபகம்





↑ மறக்கமுடியாத ஜோடி. எம்.ஜி.ஆர்.- ஜெயலலிதா. தன்னுடன் நடித்த நாயகிகளில் ஜெயலலிதாவிடம் அதிக பரிவு காட்டினார் எம்.ஜி.ஆர். ரசிகர்களும் இருவரது ஜோடிப்பொருத்தத்தை பிரமாதமாக ஆதரித்தனர்.



↑ நடிப்புலக பல்கலைக்கழகத்தின் குடும்ப புகைப்படம். சிவாஜியுடன் பிரபு, சாந்தி, தேன்மொழி, கமலா அம்மாள், ராம்குமார். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்.



← கமலஹாசன் - சரிதா. 'மரோ சரித்திரா' தெலுங்குப் படத்தில். இது தான் சரிதா வின் முதல் படம். எந்த பாத்திரத்திலும் வெளுத்து வாங்கும் நடிகை. சதைக்கவர்ச்சிக்கு முதலிடம் கிடைத்து விட்டதால் இவர் போன்ற நடிகைகளுக்கு போதிய வாய்ப்பில்லை. இப்போது பின்னணி குரல் கொடுக்கிறார் இந்த முன்னாள் முன்னணி நடிகை.



← தமிழ் படவுலக சரித்திரத்தில் மறக்க முடியாதவர்கள் பட்டியலில் இந்த மூவருக்கும் என்றென்றும் இடம் உண்டு. மனோரமா, நாகேஷ், சௌகார் ஜானகி. 'எதிர்நீச்சல்' படத்தில் ஒரு காட்சி. 'அடுத்தாத்து அம்புஜத்தை பார்த்தேனா...... தினை விருக்கிறதா. பாடல்.'

## இந்த வாரம் உங்கள் பலன்

( 21.07.96 முதல் 27.07.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன், புதன். |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| இடபம் | - வெள்ளி. |
| மிதுனம் | - செவ்வாய். |

★ சந்திரன்- கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், வீண் பகை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| புதன்- உறவினர் பகை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| வியாழன்- பொருள் வரவு, இல்லச் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் விருத்தி, மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- இனசன நன்மை, தேககசும் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்சி, பணச்செலவு. | பி.ப. 3 மணி |
| வியாழன்-துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| சனி- பயனுள்ள செயல், மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- வீண் தொல்லை, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப்பயணம், மனக்கலக்கம். | காலை 6 மணி |
| புதன்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பண வரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, மனக்கலக்கம். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் பிரச்சனை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம், தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், இனசன நன்மை. | பகல் 12 மணி |
| புதன்- பயனற்ற செயல், மனக் கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- உறவினர் பகை, தூர இடப்பயணம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வீண் குறை கேட்டல், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் சிக்கல். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| புதன்- தூரஇடப் பயணம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் பகை, பண இழப்பு. | காலை 6 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- அந்நியரால் தொல்லை, மனக் கவலை. | காலை 8 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- காரியானுகூலம், பண வரவு. | மு.ப. 9 மணி |
| வியாழன்- பொருள் விரயம், மறைமுக எதிர்ப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- செய்தொழில் விருத்தி, பணக் கஷ்டம். | மு.ப. 9 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- காரியானுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| புதன் - துயர் அதிகம், மனக் கலக்கம். | காலை 6 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, இனசன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் விரயம், பணக் கஷ்டம். | கால்ல 7 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், தெய்வானுகூலம். | பி.ப. 3 மணி |
| புதன்- உறவினர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பொருள் வரவு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், தேக சுகம் பாதிப்பு. | பகல் 11 மணி |
| சனி- அந்நியரால் கஷ்டம், கடன் பயம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- காரியசித்தி, பணக் கஷ்டம். | காலை 6 மணி |
| செவ்வாய்- தூரஇடப் பயணம், மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| புதன்- இனசன நன்மை, வெளியிட வாழ்க்கை. | மு.ப. 9 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | காலை 8 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்தொல்லை நீங்கும், அந்நியர் சகவாசம். | காலை 7 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், மனக்கலக்கம். | பி.ப. 1 மணி |
| சனி- பெரியோர் உதவி, கடன்படல். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பணவரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் தொல்லை, மனப் பயம். | காலை 7 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- அந்நியர் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் பேறு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண்தொல்லை நீங்கும், செலவுமிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- காரியானுகூலம், மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |
| வியாழன்- இனசன நன்மை, கௌரவக்கேடு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பண வரவு. | மு.ப. 9 மணி |
| சனி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5


படிப்பகம்





## மண்ணில் உழைத்த மகிபன்

உண்ணும் உணவும் உடுக்கத் துணியும்
படுக்கப் பாயும் தந்தவர் யார்?
கண்ணின் மணியே போலும் நெல் மணி
கழனி நிறையச் செய்தவர் யார்-?

மன்னும் உயிர்க்கெலாம் மகிழ்விளைத் தந்து
தன்னை ஓடாய்த் தேய்த்தவர் யார்?
மன்னவன் மற்றும் மக்கள்தம் மனையும்
மாண்புற வைத்தே மகிழ்ந்தவர் யார்?

பொன்னும் மணியும் மேனியில் புரள
போர்க்களம் சென்று வென்றவரோ?
பொன்னென வியர்வை மணித்துளி சிந்தி
மண்ணில் உழைத்த மகிபன் யாரோ?

ஏரைக் கையால் நேராய்ப் பிடித்து
ஏற்றம் கண்ட உழவன் அன்றோ!
பாரைக் காக்க மோரைக் குடித்த
பாமர மன்னன் இவனே யன்றோ!

கண. மகேஸ்வரன்– மட்டக்களப்பு.

பாதகஞ் செய்பவரைக் கண்டால்-நாம்
பயங் கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!-அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!
–சுப்பிரமணிய பாரதியார்.

**பாப்பா முரசு சிறுகதை**

# பேராசையின் விளைவு

**ரா**முவும், சோமுவும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் கூலி வேலை செய்பவர்கள். கூலி வேலை செய்வதால் கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டு இருவராலும் குடும்பத்தைச் சரிவர நடத்த முடியவில்லை.

எனவே இருவரும் வெளியூர் சென்று பொருள் சம்பாதிக்க முடிவு செய்தனர். ஒரு நாள் இருவரும் வெளியூருக்குப் புறப்பட்டனர். நீண்ட தூரம் நடந்து சென்ற இருவரும் மிகவும் களைத்துப் போயினர்.

இவர்கள் பிழைப்புத் தேடி வந்த ஊர், இன்னும் சிறிது தூரம் நடந்தால் வந்து விடும். ஆனால் இருவரும் சற்று ஓய்வெடுத்த பின்னர் தமது பயணத்தைத் தொடர முடிவு செய்தனர்.

இருவரும் ஒரு மரத்திற்குக் கீழே ஓய்வாக இருந்த பொழுது, பக்கத்தில் இருந்த பாழுங்கிணற்றைப் பார்த்த ராமு,

"சோமு! அதோ பார், அந்தப் பாழுங் கிணற்றின் உள்ளே சருகுகளுக்கடியில் ஏதோ மின்னுகிறதே," என்றான்.

"ஆமாம். வா இறங்கிப் பார்த்து விடலாம்" என்றான் சோமு.

இருவரும் கிணற்றுக்குள் இறங்கினர்.

சோமு சருகுகளை அகற்றி விட்டுப் பானை போன்று இருந்ததைத் தோண்டிப் பார்த்தான். உள்ளே தங்க நாணயங்கள் நிரம்பியிருந்தன.

அந்தத் தங்க நாணயங்கள் முழுவதையும் தாங்களே அனுபவிக்க வேண்டும் என்று பேராசை அவர்கள் இருவரது மனத்திலும் எழுந்தது. இருவருக்கும் இடையே தகராறு உருவானது.

கடைசியில் ராமு, சோமுவிடம்,

"சோமு நமக்குள் ஏன் அநாவசிய சண்டை? இதை நாம் ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொள்வோம். நீ அருகில் இருக்கும் ஊரில் இரண்டு பைகள் வாங்கி வா. நான் இங்கே காவல் இருக்கிறேன். அது எப்படி இருந்ததோ அப்படியே இருக்கட்டும். அப்படியே சாப்பிடவும் ஏதாவது வாங்கிவா," என்று அதை முதல் இருந்தது போன்று நிலத்தில் புதைத்துச் சருகுகளால் மேலே மூடினான்.

சோமுவுக்கோ தயக்கம். தன்னை ஊருக்கு அனுப்பி விட்டு, ராமு முழுவதையும் தானே எடுத்துக்கொண்டு தலைமறைவாகி விட்டால் என்ன செய்வது என்று யோசித்தான்.

கடைசியில் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான் சோமு.

சிறிது நேரத்தின் பின்னர் சோமு அடுத்த ஊரிலிருந்து இரண்டு பைகளுடனும், சாப்பாட்டுப் பொட்டலத்துடனும் வந்தான்.

வந்து ராமுவைத் தேடினான். "ராமு, ராமு" என்று கூப்பிட்டுப் பார்த்தான்.

திடீரென்று ஒரு மரத்தின் பின்னால் இருந்து வெளிப்பட்ட ராமு, சோமுவைக் கத்தியால் குத்திக் கொன்றான்.

'சோமு ஒழிந்தான். இனி தங்க நாணயங்கள் முழுவதையும் நான் மட்டும் சந்தோஷமாக அனுபவிக்கலாம். நான் இனி பெரிய செல்வந்தன்', என்று தனக்குள் வெறியுடன் சொல்லிக் கொண்டான்.

தங்க நாணயங்களைப் பைகளில் நிரப்பிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்த பொழுது, சோமு வாங்கி வந்த சாப்பாட்டுப் பொட்டலத்தைக் கண்டதும் பொட்டலத்தைப் பிரித்துச் சாப்பிட்டான்.

சாப்பிட்ட சிறிது நேரத்தில் வயிறு எரிந்தது. அடுத்த சில நிமிடங்களில் ராமுவும் இறந்து போனான்.

சோமு அடுத்த ஊருக்குச் செல்லும் வழியில் அந்த விபரீத எண்ணம் உருவானது. ராமுவுக்கு வாங்கி வரும் உணவில் விஷத்தைக் கலந்து கொடுத்து அவனைக் கொன்று தங்க நாணயங்கள் முழுவதையும் தானே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டிருந்தான். அதன்படியே விஷத்தை உணவில் கலந்தான்.

பேராசையின் காரணமாக, தங்களுக்குக் கிடைத்த தங்கநாணயங்களை இருவரும் அனுபவிக்காமல் இறந்து விட்டனர்.



சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.07.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 150
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 148

பரிசுக்குரியவர்:
எஸ்.சிந்துஜா
ஹோல் ஃபெண்டல் பாலிகா மகாவித்தியாலயம், கொழும்பு-13

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| A.S.M. சறூஜ்.<br>மட்/ அறபா வித்தியாலயம், ஏறாவூர்-3. | செல்வி.சு.அர்ச்சனா.<br>புனித சிசிலியா மகாவித்தியாலயம், மட்டக்களப்பு. |
| எஸ்.யூட் றஜீத்<br>இராமநாதன் தொடர்மாடி, கொழும்பு-13. | S.சந்திரமோகன்.<br>வோகன்மேல் பிரிவு, மத்துகம. |
| ந.நவதர்சினி.<br>கிறீன்லண்ட்பாம் தமிழ்வித்தியாலம், கொட்டக்கலை. | என்.எம்.ஜிப்றிகான்.<br>மதுரங்குளி. |
| எம்.எப்.எப்.பர்ஹானா.<br>மன்னார் வீதி, புத்தளம். | செல்வன்.ப.ருசான்.<br>விஷ்ணு ஆலய வீதி, கல்குடா. |
| S. முரளிதாஸ்.<br>இராமகிருஷ்ண மிஷன், அக்கரைப்பற்று. | அஹ்மட் அல் ஷாதிக்.<br>முதலாம் பள்ளித்தெரு, கொழும்பு-12. |

## வாரம் ஒரு நாடு
### நேபாளம்



**தலைநகர்:**– கட்மண்டு
**பரப்பு:**– 147,181 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை:**– 2.11 கோடி
**மொழி:**– நேபாளி, மைதிலி, போஜ்புரி.
**எழுத்தறிவு:**– 29%
**சமயம்:**– இந்து, பௌத்தம், இஸ்லாம்.
**நாணயம்:**– நேபாள ரூபாய்
**தனிநபர் வருமானம்:**– 180 டொலர்.

* உலகிலுள்ள ஒரேயொரு இந்து இராச்சியம் இதுதான்.


**அமைவிடம்:**–
இமயமலைப் பகுதியில் நான்கு பக்கமும் நிலப்பகுதிகளால் சூழப்பட்ட ஆசியநாடு. வடக்கில் திபெத்தும், கிழக்கில், மேற்கில் தெற்கில் இந்தியாவும் இதன் எல்லைகள்.

**வரலாறு:**–
1846 முதல் 1951 வரை ராணா வம்சத்தவரே தொடர்ச்சியாக பிரதமர் பதவி வகித்து வந்தனர். 1951 இல் மன்னர் நேரடியாக ஆட்சிப் பொறுப்பேற்றார். தொடர்ந்து 1975இல் மன்னர் பிரேந்திரா ஆட்சியேற்றார்.


அமைச்சர்களை மன்னரே நேரடியாக நியமிக்கும் பழக்கம் இருந்து வந்தது. 1990 ல் ஜனநாயக உரிமை வேண்டி ஏற்பட்ட போராட்டத்தைத் தொடர்ந்து 1991ல் தேர்தல் நடைபெற்றது. 1994 இல் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் கொய்ராலா தோல்வியுற்றார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1994 நவம்பரில் தேர்தலுக்கு மன்னர் உத்தர விட்டார். 112 உறுப்பினர் கொண்ட 'தேசிய பஞ்சாயத்து' ஆட்சி செய்து வருகிறது.

**பொருளாதாரம்:**–
சணல், நெல், சுற்றுலா போன்றவை முக்கிய வருமான மூலங்கள். மூலிகைச் செடிகள் முக்கிய ஏற்றுமதிப் பொருளாகும். பெட்ரோலியம் இறக்குமதி செய்யப்படுகிறது. மைக்கா மிக அதிகமாகக் கிடைக்கிறது.

## டொல்ஃபின்கள்



**சி**றிய சுறாமீன் வகையைச் சேர்ந்தது டொல்ஃபின். இதற்குப் பறவை அலகு போன்ற சிறிய மூக்கு உள்ளது. அது சிறியதாக இருப்பதால் எப்போதும் புன்னகைத்துக் கொண்டிருப்பது போலவே தோன்றும். டொல்ஃபின் நன்றாக நீச்சலடிக்கும். உயரே தாண்டிக் குதிக்கும். நல்ல புத்திசாலி. நீருக்கு அடியில் பாதுகாக்கவும், மற்றைய இரகசியப் பணிகளுக்கும் இவற்றை அமெரிக்கக் கடற்படை பழக்குகிறது.



டொல்ஃபின்கள் சந்தித்துக் கொள்ளும் போது விசில் சத்தம் கேட்கும். மீன் கூட்டத்தைப் பார்க்கும் போதும் அவை இவ்வாறு சப்தம் எழுப்பும். இதன் மூலம் மற்ற டொல்ஃபின்களும் அங்குவரும். ஒரு டொல்ஃபின் தனது உடல் எடையைப் போல பத்தில் ஒரு பங்கு மீனைத் தினமும் உணவாகக் கொள்ளும்.

டொல்ஃபின்கள் இரக்க குணம் கொண்டவை. தங்கள் கூட்டாளிக்குக் காயம் ஏற்பட்டால் உடனே அங்கு விரையும். மயக்கமடைந்த டொல்ஃபினை மற்ற டொல்ஃபின்கள் தண்ணீருக்கு மேல் தூக்கிச் சுவாசத்திற்கு வழி செய்வதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மற்ற டொல்ஃபின்கள் அதனைப் பாதுகாக்க விரைவதையும் உணர்ந்துள்ளனர். டொல்ஃபின்கள் ஒரு கண்ணைத் திறந்து கொண்டு தூங்கும். சிறிது நேரம் கழித்து இன்னொரு கண்ணை மூடித் தூங்கும். இரண்டு கண்களையும் மூடியபடி எப்போதுமே தூங்காது.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஈரடுக்கு மாளிகையில் இதமான நீருக்குள் இருக்கிறான் வெள்ளையப்பன். அவன் யார்?
2. உச்சாணி மரத்து உயர்ந்த கிளையிலே பட்டாணி இருந்து பாக்கு வெட்டுது. அது என்ன?
3. ஆள் இறங்காத கிணற்றில் மயிலிறங்கி ஆடுது. அது என்ன?
4. தொப்பையனுக்கு ஒரு வாசல் தோழனுக்கு இரு வாசல் அது என்ன?
5. அரக்கனின் தலையொன்று அந்தரத்தில் தொங்குது பார். அது என்ன?
6. உயரமாய் வளரும், பனை அல்ல, கிளை இல்லை, தென்னையும் அல்ல, கணுக்கள் இருக்கும், மூங்கிலும் அல்ல, கடித்தால் இனிக்கும். அது என்ன?
7. ஆழ்கடலில் பிறந்து அங்கொருவர் கண்டெடுத்து அங்காடிக்கு வந்து சேர்ந்து அங்கமதில் அரங்கேறும். அது என்ன?

### விடைகள்

1. தேங்காய் 2. அணில்
3. அகப்பை 4. சட்டை
5. திருஷ்டிப் பூசணி 6. கரும்பு
7. முத்து

தொகுப்பு: செல்வி டி. கீதாஞ்சலி, வெள்ளவத்தை.

## பரசூட்

✪ 'பரசூட்'களினால் என்ன பயன்கள்?
மனிதன் அல்லது பொருட்களைப் பத்திரமாக மேலேயிருந்து கீழே கொண்டு வந்து சேர்க்க உதவுகின்றது. அத்துடன் அதிவேகமான ரேஸ் கார்களின் வேகத்தைத் தணிக்கவும், விமானங்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

✪ விமானமா, 'பரசூட்'டா முதலில் கண்டு பிடிக்கப்பட்டது?
அன்ட்ரி ஜாக்ஸ் கார்னரின் என்பவர் 1797ல் பலூனின் உதவியுடன் மேலிருந்து கீழே இறங்கினார். ஆனால் இதன் உபயோகம் விமானம் கண்டு பிடித்த பின்னர்தான் வெளியே தெரியவந்தது.

✪ 'பரசூட்'டை வடிவமைத்தவர் யார்?
இத்தாலிய ஓவியரான லியானர்டோ டாவின்ஸி, 1514ல் இதனை வடிவமைத்தார். பிறகு, பாஸ்டோ வெரன்சியோ என்பவர் 1595ல் அதற்கு முழுவடிவம் அளித்தார்.

✪ எதற்காக இவை விரிந்த குடைபோல் வடிவமைக்கப்படுகின்றன?
இந்த வடிவம் தான் சுற்றியுள்ள காற்றின் வேகத்தைத் தடை செய்து, பூமியின் புவி ஈர்ப்பு விசைக்கேற்ப காற்றின் வேகத்தைத் தாங்கிய வண்ணம் மெதுவாக கீழே இறங்க உதவுகிறது.



✪ போர்களில் 'பரசூட்' எப்போது அறிமுகமானது?
இரண்டாம் உலகப்போரின்போது 'பரசூட்' அணிந்த வீரர்கள் எதிரி முகாம்களுக்குள் இறங்கிச் சண்டையிட்டனர். அத்துடன் யுத்த தளவாடங்கள் எடுத்துச் செல்லவும் 'பரசூட்' பயன்படுத்தப்பட்டது.

www.padippakam.com

# அசத்தல் 2

## கடந்த வாரம் நடந்த கதை

தனது காதலி கீதாவுடன் கடற்கரைக்கு செல்கிறான் மதன். இருவரும் ஜாலியாக இருந்துவிட்டு விடைபெறுகின்றனர். கீதா ஓட்டோவில் செல்கிறாள். தனது பர்ஸ் கடற்கரையில் தொலைந்துவிட்டதால் அதை தேடிவிட்டுத் தனது அறைக்கு ஸ்கூட்டரில் திரும்புகிறான் மதன். இனி......




தமிழக கிரைம் கதை மன்னன்
**பட்டுக்கோட்டை பிரபாகர்**

"கதவைத் திறக்க இவ்வளவு நேரமா? என்ன பண்ணிக்கிட்டிருந்தே ரவி?"

"படிச்சிட்டிருந்தேன். அப்படியே தூங்கிட்டேன். எங்கே போய்ட்டு வர்றே மதன்?"

"அஷ்டலெஷ்மி கோவில்- கீதாவோட"

"இல்லை. தெரியாமத்தான் கேக்கறேன். தினமும் சந்திக்கிறீங்க. அப்படி என்னதாண்டா பேசுவீங்க?"

"வாய்ச் சொற்கள் பயனில. பாதிநேரம் பேசறதே இல்லை. இமைக்காம பார்த்துக்கிட்டே இருப்போம்."

"காதல்னா உடனே ஏண்டா கோமாளித்தனமெல்லாம் வந்துடுது?"

"ஏய்...உனக்கு காதலைப் பத்தி தெரியாது. நீ பேசாதே.".

"உன்னோட வாதம் பண்ற மூட்ல இல்லை நான். சாப்பிட்டியா?"

"மெஸ்சுக்குப் போய்ட்டுதான் வர்றேன். நீ?"

"ஆச்சு. சிகரெட் வச்சிருக்கியா?"

"தீர்ந்துச்சி."

"வாங்கிட்டு வந்துடேன். ப்ளீஸ்."

"எங்கேயோ பர்சை தொலைச்சுட்டேன் ரவி."

"அடப்பாவி. இருடா இருடா. சட்டையைக் கழட்டாதே காசு தர்றேன். போயி ஒரே ஒரு பில்ட்டர் வில்ஸ் வாங்கிட்டு வந்துடு."

"ஒண்ணு போதுமில்லே?"

"போதும்."

"தலைகாணிக்கடியிலே ஒண்ணு இருக்கு. எடுத்துக்க. என் கைலி சாயங்காலம்தான் துவைச்சிப் போட்டேன். ஈரம் காயலை. உன்னதைக் கட்டிக்கிறேன்."

"ஸ்கூட்டர் ஓசி. ரூம் ஓசி. கைலி ஓசி. நாளைக்கு நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு வையி....."

"சீச்சி, எனக்கு கீத் இருக்காடா."

"நீயும் ஆறு மாசமா சொல்றே. கண்ல காட்ட மாட்டேங்கறே."

"ரூமுக்கு அழைச்சிட்டு வரச் சொல்றியா?"

"வேணாம். ஒரு போட்டோ?"

"தரமாட்டேங்கறாடா. ரொம்ப ஜாக்கிரதையான பொண்ணுடா. கைப்பட லெட்டர் எழுதறதில்லை. போட்டோ தர்றதில்லை."

"இதுக்கு ஜாக்கிரதையின்னு அர்த்தமில்லை."

"பின்னே?"

"உன்னை முழுசா நம்பலைன்னு அர்த்தம்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. என்ன புஸ்தகம்?"

"இங்கிலீஷ்ல செக்ஸ் புத்தகம்."

"பாவி, இது கூடவா வாங்கறே?"

"வாங்கலை, இதை யார் கொடுத்ததுன்னு சொன்னா நீ நம்பமாட்டே."

"நம்பறேன் சொல்லு."

"என்னோட வொர்க் பண்ற ஒரு லேடி."

"வயசு அம்பத்தி ரெண்டா?"

"திருப்பிப்போடு. காலம் அவ்வளவு முன்னேறிடுச்சி. ஸ்டாண்ட்ல தீப்பெட்டி இருக்கு. எடுத்துக் கொடேன்."

"என்ன சத்தம் இந்த நேரம்?"

"பாடறியா? படிக்கிறியா? ஏய்...மதன்! நில்லு. என்னாச்சு? உன்னோட பின் தொடையிலே எதாச்சும் கட்டியா? உடைஞ்சிருக்கா?"

"கட்டியா? என்ன சொல்றே?"

"பாண்ட்ல பார்டா. ரத்தம் மாதிரி இருக்கு. ரத்தம்தானே?"

"ரத்தமா? ரத்தம் எப்படி வரும்? இரு கழட்டிப் பார்த்துடலாம். அட சிகப்பாதான் இருக்கு. சாயங்காலம் ஹோட்டல் போனேன். சீட்ல தக்காளி சாஸ் எதுவும் கொட்டியிருக்கும். தெரியாம உக்காந்திருப்பேன். போச்சி, சலவை பேண்ட் போச்சி."

"சலவைக்குப் போட்டா கறை போயிடும். இங்கே வந்து உக்காரேன்."

"என்ன?"

"உன் ஆள்கிட்டே எவ்ளோ தூரம் வந்திருக்கே?"

"ஒரே ஒரு தடவை கிஸ்."

"அவ்வளவுதானா?"

"வேறென்ன எதிர்பார்க்கறே ஆறு மாசத்திலே? இதுவே அதிகம், உனக்கு காதலைப் பத்தி தெரியாது."

"சும்மா அதையே சொல்லாதே. ஸ்கூல்ல படிச்சப்போ அந்தப் பொண்ணு மீனா தண்ணி எடுக்கப்போகும். அப்ப நான்....."

"போதுண்டா. உன் வீர சாகசத்தை ஒரு நூறு தடவையாவது சொல்லி இருப்பே. நீ படி. என்னைத் தூங்க விடு. அவசரமா தூங்கணும் நான்."

"தூங்கறதிலே என்னடா அவசரம்?"

"சீக்கிரம் கனவு வந்து....அதிலே நாங்க டுயட் பாட வேணாமா?"

"நீ சட்டையைக் கிழிச்சுக்காதது ஒண்ணு தான் பாக்கி. விஷ் யு எ வெரி பெட் நைட்."

"ஹலோ, அவசர போலீஸ்?"

"யெஸ்."

"சார், நான் பெஸண்ட் நகர்லேர்ந்து பேசறேன்."

"பேசுங்க."

"சார், நைட்ல நான் அரைமணி நேரம் வாக்கிங் போய்ட்டு வந்து படுக்கிறது பழக்கம்."

"சரி. அதுக்கு?"

"கேளுங்க. கடற்கரையோரமா ஒரு பாடி கிடக்குது."

"இருங்க. உங்க பெரென்ன?"

"மகாத்மா காந்தி."

"மிஸ்டர்! விளையாடறிங்களா?"

"பேர் கேட்டீங்க. விலாசம் கேப்பீங்க. நாளைக்கு கோர்ட்டுக்கு வரச் சொல்வீங்க. நம்மால முடியாது சார். பார்த்தேன். சொல்லிட்டேன். வச்சிரட்டுமா?"

"ஹலோ... ஹலோ... குறிப்பா எந்த இடம்னாவது சொல்லுங்க."

"அஷ்டலஷ்மி கோயில் தாண்டி கொஞ்ச தூரத்திலே."

"ஆம்பிளையா, பொம்பிளையா?"

"பொம்பிளை."

"ஹலோ மிஸ்டர், நீங்க ஸ்பாட்ல இருந்தா எங்களுக்கு சௌகரியம்."

"ஆனா எனக்கு சௌகரியமில்லைங்க. வச்சிடறேன்."

"ஹலோ, நான் சொல்றதைக் கே.. ஹலோ!"

"வேல்சாமி, வேன் மேல ஏறிக்கிட்டு போகஸ்லைட்டைப் பிடிய்யா. எங்கேய்யா டிரைவரு? எஞ்சினை நிறுத்து. கடல் சத்தம் போதாதுன்னு இது வேற..."

"வண்டில ஸ்டார்ட்டிங்க் ட்ரபிள் ஸார். அதான்."

"கொடுத்துட்டு பேரீச்சம் பழம் வாங்கிட்டு வந்துடு. தின்னலாம். போய் என்ஜினை அணைய்யா முதல்ல. சரிதான். இப்படி வாங்க."

"எஸ் சார்."

"இப்படி குப்புற கிடந்தா முகம் எப்படித் தெரியும்? புரட்டச் சொல்லுங்க."

"சார். கட்டியிருக்கிற சேலை ரொம்ப காஸ்ட்லி. மைசூர் சில்க்னு பேரு. எழுநூறு ரூபா. போன மாசம் கூட நம்ம வீட்ல எடுத்துச்சி."

"அதை வச்சி பணக்கார வீட்டுப் பொண்ணுன்னு சொல்லிட முடியாது சசிதரன். கைல வளையல் பார்த்தீங்களா? கில்ட்டு. வாட்ச் கட்டலை. காதுல பிளாஸ்டிக். கழுத்துல செயின் கிடக்கா பாருங்களேன். தாலி,... கீலி..."

"இல்லை சார். செயின்தான். ரோல்டு கோல்டு தான்."

"புரட்டியாச்சா? பார்த்திங்களா? நான் சொன்னனே..."

"கரெக்ட் சார். நீங்க சொன்ன மாதிரி கத்திக்குத்துத்தான்!"

"இல்லைன்னா இவ்வளவு ரத்தம் சான்சே இல்லை சசிதரன். சரியா நெஞ்சு பார்த்து குத்தியிருக்கான். கண்டிஷன் பார்க்கிறப்போ சாயங்காலம்தான் நடந்திருக்கணும்."

"ஆமாம் சார். பிகர் மார்ட்டிஸ் இன்னும் செட் ஆகலை."

"இப்படி பொது இடத்திலே குத்திடறானுங்க. நாம ஐடென்டிஃபிகேஷனுக்கே மனத்தைப் பிச்சிக்க வேண்டியிருக்கு."

"இருபது, இருபத்திரெண்டு வயது- இருக்குமா சார்?"

"அவ்வளவுதான் இருக்கும். பல்லு பார்த்து கரெக்டா சொல்லிடு வாங்க லேபுல. என்ன ஆச்சு? தகவல் சொல்லி அரை மணியாச்சு. பொடி நடையா வர்றாங்களா?"

"யூனிட் வேன் வெளியில போயிருக்குன்னாங்க. இப்ப வந்துடுவாங்க."

"நரசிம்மன்!"

"அய்யா."

"பக்கத்திலே போன் விசாரிச்சி லேபுக்கு ஒரு ரிமைண்டர் அடிச்சிடு."

"சரிங்கய்யா."

"ஜீப்புல பிளாஸ்க் இருக்கா?"

"இருக்குங்கய்யா."

"சூடா ஒரு டீ-சசிதரன் நீங்க சாப்பிடுவீங்க தானே?- ரெண்டு டீ வாங்கிட்டு வந்துடு. நாய் வருதா சசிதரன்?"

"வந்துடும் சார் இப்போ."

"வெளிச்சம் தான் பிரச்சனை. வேல்சாமி, லைட்டை கரெக்டா பொணத்து மேல பிடி. பாருங்க சசிதரன். சுத்தமா லிப்ஸ்டிக் எல்லாம் போட்டுட்டு வந்து செத்துப் போய்ட்டா. கைப்பை எதுவும் இல்லே?"

"இல்லை சார். இடுப்புல கர்சீப் இருக்கு. அதிலே 'எம்'ன்னு எம்பிராய்டரி இருக்கு."

"ஜாக்கெட்டுக்குள்ளாற பார்த்தாச்சா? மணி பர்ஸ் வச்சிருக்கப் போறா."

"இல்லை சார். பார்த்துட்டேன்."

"என்ன உங்க அசம்சன் சசிதரன்?"

"சீன் ரொம்ப தெளிவா இருக்கு சார். பக்கத்திலே கண்ணாடி வளையல்கள் உடைஞ்சி கிடக்குது. மல்லிகைப் பூ சிதறிக் கிடக்குது."

"ரேப் அண்ட் மர்டர்ன்றிங்களா?"

"சான்ஸ் இஸ் தேர், இல்லை உயிர் பொழைக்க அந்தப் பொண்ணு டோாரா டினப்போ கூட இது நிகழ்ந்திருக்கலாம்."

"போஸ்ட் மார்ட்டம் பதில் சொல்லிடும். நான் அப்படி ஜீப்ல உக்காந்திருக்கேன். பனி நமக்கு ஆகறதில்லைங்க சசிதரன். பதினெட்டு பர்செண்ட் ஈஸ்னோஃபில்ஸ். வேன் ஹெட் லைட்சைப் போட்டுக்கங்க. பேட்டரியை கைல எடுத்துக்குங்க. வட்டாரம் பூரா அலசிடுங்க. நல்லவேளை கடலை விட்டுக் கொஞ்சம் தள்ளி மணல்ல நடந்திருக்கு. எதாச்சும் தடயம் கிடைச்சுடும்னு நம்புறேன். குறிப்பா வெப்பன் வேணும். அது ரொம்ப முக்கியம்."

"சரி சார்."

"சார், அம்புலன்ஸ் வந்திருக்கு."

"நிக்கட்டும். நாய் வந்துடட்டும். பாடியை அப்புறம் அனுப்பலாம்."

"அய்யா, போன் பேசிட்டேங்க. புறப்பட்டாச்சாம். டீ."

"கப்புல ஊத்து. சப்-இன்ஸ்பெக்டருக்கு ஒரு கப் கொண்டு போய் கொடு. எங்கய்யா வாங்கின? ஏலக்கா எல்லாம் போட்டு ஜம்முனு இருக்கு."

"இன்ஸ்பெக்டர் அய்யாவுக்குன்னு சொன்னேன். ஸ்பெஷலா போட்டுத் தந்தான். காசு கூட வாங்கிக்க மாட்டேன்னுட்டான்."

"அது தப்பு. இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. போறப்போ காசு கொடுத்துடு."

"சரிங்கய்யா."

"சார், சார், வெப்பன் கிடைச்சிடுச்சி."

"வெரிகுட். என்ன அது?"

"கத்தி தான். நிச்சயமா ரேகை கிடைக்கும்."

"நல்லவேளை, கடல்ல வீசி எறியாமல் போய்த் தொலைஞ்சான். ஸோ, இது ஒரு திட்டமிட்ட கொலை இல்லை. உணர்ச்சிப்பூர்வமா திடீர்னு செயல்பட்டிருக்கணும். தடயத்தை மறைக்கணும்னு குற்றவாளி நினைக்கலை."

"ஆமாம், வேற ஏதாச்சும்?"

"சார், இதோ பாருங்க ஒரு லேடீஸ் ஹேண்ட் பாக்."

"நரசிம்மனுக்கு உடம்பெல்லாம் கண்ணு. கொண்டாய்யா இங்கே. இப்படி வெளிச்சம் அடிங்க சசிதரன். உள்ளாறப் பார்த்துடலாம். என்னய்யா இது திறக்க வரமாட்டேங்குது."

"அப்படி இல்லை சார். குமிழை ரைட்ல திருப்பணும்."

"இதுக்குத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்ங்கிறது. குமிழ், பித்தான், ஸிப்புன்னு சசிதரன் நல்லா ட்ரெய்ன் ஆய்ட்டீங்க. நீங்களே திறங்க. டார்ச்சை என்கிட்டே கொடுங்க."

"ரெண்டு இருபது ரூபா நோட்டு. கொஞ்சம் சில்லறை. பஸ் டிக்கெட்டு. சீப்பு, ஹேர்ப்பின்னு. சார், ஒரு விசிட்டிங் கார்ட்டு இருக்கு."

"படிங்க."

"டைரக்டர் பாக்யராஜ் கார்டு சார். நுங்கம்பாக்கம் வீட்டு அட்ரஸ் இருக்கு."

"என்னய்யா இது கொலை கேஸ்ல பாக்யராஜ் வர்றாரு?"

"அவர் எங்கே சார் வந்தாரு? விலாசம் வந்திருக்கு."

"சரி, விசாரிச்சுடலாம். இப்ப என்ன எடுத்துட்டிருக்காரு? எப்பவாச்சும் ஜெமினி சினிமா படிக்கிறதோட சரி. சினி நியூஸ் அதிகம் தெரியாது நமக்கு. வேற என்ன கிடைக்குதுன்னு பார்க்கலாம். டீ சாப்பிட்டுடுங்க. ஆறிடும்."

"லேப் வேன் வந்துடுச்சி சார்."

"வரட்டும். நரசிம்மன், இன்னும் பாருய்யா. உன் கண்ணுக்குத்தான் தட்டுப்படும். வாங்க ஸ்ரீதர் மணி பத்து கூட ஆகலையே... தூங்கி எந்திரிச்சி வர்ற மாதிரி இருக்கு?"

"அதெல்லாம் இல்லை. யாரு, லேடியா?"

"கேர்ள்ன்னே சொல்லலாம். ஸ்மார்ட்டா இருக்கு முகம்."

"பொணத்தை கூட சைட் அடிக்கிறிங்களே சசிதரன்."

"யாரு? காலேஜ் கேர்ளா? கற்பழிப்பா?"

"இன்னும் அடையாளம் தெரியலை. பேரு எம்ல ஆரம்பிக்கும்னு நினைக்கிறேன். மனோ, மங்கையற்கரசி, மாதவி, மல்லிகா, மதுபாலா, மாலா, யாரோ!"

"ஸ்ரீதர் யு ஃரொஸீட் வித் யுவர் வொர்க்ஸ்."

"வெளிச்சம் பத்தாது சார். நாலு கான்ஸ்டபிளைப் போட்டுடுங்களேன். காலைல வந்து பார்த்துடறோம்."

"அப்ப ஒண்ணு செய்ங்க. பாடியை ஸ்ட்ரெட்சர்ல போட்டு அம்புலன்ஸ்ல ஏத்திடலாம். உள்லைட் போட்டு விட்டுடலாம். பாடியை மட்டும் பார்த்துடுங்க இப்போ. நீங்க பார்த்ததும் ஜி.ஹெச்சுக்கு அனுப்பிடலாம். இடத்துக்கு காவல் போட்டுடறேன். காலைல வந்து பார்த்துடுங்க."

"ரைட் சார். குட் ஐடியா."

"சசிதரன், இந்த ஏற்பாட்டை பண்ணுங்க கிட்டே இருந்து. பனி ரொம்ப கடுமையா இருக்கு."

"நீங்க ஜீப்ல இருங்க சார்."

"இது யார் சசிதரன், தூரத்திலே லைட்டை வச்சிக்கிட்டு?"

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எஸ்.ஜஹாஸ்கான்
வயது: 18
முகவரி: 218/ஏ, அல் ஹம்ரா வீதி, மருதமுனை-05, கல்முனை.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எஸ்.புவனேஸ்வரன்
வயது: 20
முகவரி: டெகலெஸ்ஸ நடுப்பிரிவு, எட்டியாந்தோட்டை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம்.அன்வர்
வயது: 19
முகவரி: 80, மனன்வத்தை, அளுத்கம.
பொழுது போக்கு: வானொலி கேட்டல்.

பெயர்: எஸ்.லட்சுமணன்.
வயது: 19
முகவரி: 2/193. LIVERPOOL RD, ENFIELD, NSW 2136, AUSTRALIA.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம், ரீ.வி.

பெயர்: ரி.துஷ்யந்தி
வயது: 16
முகவரி: 14/20, பாரதி லேன், தாண்டவன் வெளி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எம்.இபாம்
வயது: 27
முகவரி: 28, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, பேனா நட்பு.

பெயர்: ஜே.மஹ்றூப்.
வயது: 25
முகவரி: P.O.BOX-5489, JEDDAH - 21422, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட், ரீ.வி.

பெயர்: எஸ்.நவாஸ்.
வயது: 20
முகவரி: மாங்குளம், நேரிய குளம், வவுனியா.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை, வானொலி.

பெயர்: மேர்வின் ஜோசப்
வயது: 28
முகவரி: 77/3, ரஜமல்வத்தை வீதி, முகத்துவாரம், கொழும்பு-15
பொழுது போக்கு: புத்தகம், பத்திரிகை.

பெயர்: எஸ்.கனகராஜா.
வயது: 20
முகவரி: உனுகல எஸ்டேட் மேற்பிரிவு, எல்கடுவ.
பொழுது போக்கு: கிரிக்கெட், கரப்பந்து, வானொலி.

பெயர்: எஸ்.குனேஷ்.
வயது: 22
முகவரி: ENGELBERG STR.48, 6370- STANS, SWITZERLAND.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். றில்வான்.
வயது: 15
முகவரி: 24/ஏ, கண்டக்காவத்தை, இகல/கொட்டாரமுல்லை.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## 85

### மக்சீம் கார்க்கி



**தா**ய்க்குப் பின்னால் அந்தத் தோட்டம்; முன்புறத்தில் இடுகாடு. அவள் நின்ற இடத்திலிருந்து வலது புறமாக சுமார் எழுபது அடி தூரத்தில் சிறைச்சாலை. இடுகாட்டுக்கு அருகே ஒரு சிப்பாய் ஒரு குதிரையை நடத்திக் கூட்டிக்கொண்டு போனான். அவனுக்கு அருகே இன்னொரு சிப்பாய் தரையைக் காலால் மிதித்துக் கொண்டும், சத்தமிட்டுக் கொண்டும், சிரித்துக்கொண்டும் சீட்டி அடித்துக்கொண்டும் நின்றான். சிறைச்சாலையின் அருகே ஆள் நடமாட்டமே இல்லை.

அவர்களைக் கடந்து இடுகாட்டை வளைந்து சூழ்ந்த வேலிப்புறமாக, தாய் மெதுவாக நடந்து சென்றாள். போகும் போது முன்னும் பின்னும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டே சென்றாள். திடீரென அவளது கால்கள் பலமிழந்து ஊசலாடின. தரையோடு தரையாய் உறைந்து போன மாதிரி கனத்து விறைத்தன. ஒரு மூலையிலிருந்து விளக்கேற்றுபவர்கள் வருவதுபோலவே தன் தோள்மீது ஓர் ஏணியைச் சுமந்துகொண்டே, அவசர அவசரமாகக் குனிந்து நடந்து வந்தான் ஒருவன். பயத்தினால் கண்கள் படபடக்க, தாய் அந்தச் சிப்பாய்களைப் பார்த்தாள். அவர்கள் ஓர் இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள்; குதிரை அவர்களைச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தது. ஏணியோடு வந்து கொண்டிருந்த அந்த மனிதனை அவள் பார்த்தாள். அவன் அதற்குள் ஏணியைச் சுவர்மீது சாய்த்து அதன்மீது நிதானமாக ஏறிக்கொண்டிருந்தான். அவன் சிறைச்சாலை முகப்பைப் பார்த்துக் கையை ஆட்டிவிட்டு, விறுவிறென்று கீழிறங்கி, சிறைச்சாலையின் மூலையைக் கடந்து சென்று மறைந்து போனான். தாயின் உள்ளம் படபடத்துத் துடித்தது. ஒவ்வொரு விநாடியும் நிலையாய் நிற்பது போல் தோன்றியது. சிறைச்சாலையின் சுவர் கறை படிந்து, ஆங்காங்கே காரை விழுந்து, உள்ளுக்குள் உள்ள செங்கல்லை வெளிக்காட்டிக் கொண்டிருந்தது. அதன் நிறம் மாறிப்போன கறுத்த பின்னணியில் அந்த ஏணி அவ்வளவாகக் கண்ணுக்குத் தெரியவில்லை. திடீரென்று ஒரு கரிய தலை சிறைச் சுவருக்கு மேலே தெரிந்தது. அப்புறம் அந்த உருவம் சுவரின்மீது தத்தி தவழ்ந்து, மறுபுறம் இறங்கத் தொடங்கியது. அடுத்தாற்போல் ஒரு கோணல்மாணலான தொப்பி தலையை நீட்டியது. ஒரு கரிய கோணல் பூமியிலே உருண்டு விழுந்தது; மறு கணம் அது எழுந்து நின்று மூலையை நோக்கி ஓடி மறைந்தது. மிகயில் நிமிர்ந்து நின்று சுற்றும் முற்றும் பார்த்தான்; தலையை ஆட்டிக் கொண்டான்.

"ஓடு! ஓடு!" என்று காலைத் தரையில் உதைத்துக்கொண்டே மெதுவாகக் கத்தினாள் தாய்.

அவளது காதுகளில் கிண்ணென்று இரைந்தது; பலத்த கூச்சல்களை அவள் கேட்டாள். சுவரின்மீது மூன்றாவது தலையும் தோன்றியது. தாய் தனது நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டு, திக்குமுக்காடும் மூச்சோடு கவனித்துப் பார்த்தாள். தாடியில்லாத ஓர் இளைஞனின் வெளிர் முடித்தலை ஒரு குலுக்குக் குலுக்கியவாறே மேலெழுந்தது; ஆனால் மறுகணமே அது மீண்டும் உள் வாங்கிக் கொண்டது. கூச்சல்கள் உரத்தும் உத்வேகத்துடனும் ஓங்கி ஒலித்தன. விசில்களின் கீச்சுச் சப்தங்களைக் காற்று ஆகாயத்தில் பரப்பி ஒலிக்கச் செய்தது. மிகயில் சுவரை ஒட்டி நடந்தான். அவன் அதனைக் கடந்து சிறைச்சாலைக்கும், ஊரின் வீடுகளுக்கும், இடையேயுள்ள வெட்ட வெளி மைதானத்தைக் கடந்து சென்றான். அவன் மிகவும் மெதுவாகவும் தலையை அதிகமாக நிமிர்ந்தும் நடப்பதாக அவளுக்குத் தோன்றியது. அவனது முகத்தை அந்தச் சமயத்தில் ஒருமுறை பார்க்க நேர்ந்தவர்கள் அதை என்றென்றும் மறக்க மாட்டார்கள். அப்படி இருந்தது அந்த முகத் தோற்றம்.

"சீக்கிரம், சீக்கிரம்!" என்று முணுமுணுத்தாள் தாய். சிறைச்சாலைச் சுவருக்கு அப்பால் ஏதோ மோதியறையும் சப்தம் கேட்டது; அதைத் தொடர்ந்து கண்ணாடிச் சில்லுகள் நொறுங்கி விழும் சப்தத்தை அவள் கேட்டாள். அந்தச் சிப்பாய்களில் ஒருவன் தனது காலைப் பூமியில் அழுத்தி ஊன்றியவாறே குதிரைக் கயிற்றைப்பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். அடுத்தவன் தன் முஷ்டியை வாயருகே கொண்டு போய்ச் சிறைச்சாலையை நோக்கிச் சத்தமிட்டான். அவன் சத்தமிட்டு முடிந்த பிறகு, அதற்குப் பதில் எதிர்பார்த்துக் காதைத் திருப்பிச் சாய்த்துக் கேட்டான்.

**மூன்று சிறைக்காவலாளிகள் சிறைச்சாலை மூலையிலிருந்து தாவி ஓடிவந்தார்கள். தாயைக் கேட்டார்கள்: "தாடிக்கார மனுஷன் ஒருவனை நீ பார்த்தாயா?" விசில் சப்தங்கள் இடைவிடாது அழுத்தமாக ஒலித்தன. அவள் நடுங்கினாள்.**

தாய் மிகுந்த சிரமத்தோடு நாலாதிசைகளிலும் தலையைத் திருப்பிப் பார்த்தவாறே நின்றாள். அவளது கண்கள் எல்லாவற்றையும் பார்த்தன; ஆனால் எதையும் நம்பமறுத்தன. எந்த ஒரு காரியம் மிகுந்த சிக்கலும் அபாயம் தகரக்கூடிய பயபீதியும் நிறைந்த எண்ணத்தை அவள் மனத்தில் ஏற்படுத்தியிருந்ததோ, அதே காரியம் மிகவும் சுளுவாக எளிதாக சீக்கிரமே நடந்து முடிந்துவிட்டது. அதனது துரித சக்தி தாயை ஆட்கொண்டு அவளது புலன்களை மரத்துப் போகச் செய்தது. ரீபின் ஏற்கனவே மறைந்து சென்று விட்டான். ஒரு நெட்டையான மனிதன் நீண்ட கோட்டை அணிந்துகொண்டு தெருவழியாக நடந்து சென்றான்; அவனுக்கு முன்னால் ஓர் இளம் யுவதி ஓடிக்கொண்டிருந்தாள். மூன்று சிறைக் காவலாளிகள் சிறைச்சாலை மூலையிலிருந்து தாவி ஓடி வந்தார்கள். மூன்று பேரும் தங்கள் வலது கைகளை நீட்டியவாறு ஒருவர் அருகில் ஒருவராக ஓடி வந்தார்கள். அந்தச் சிப்பாய்களில் ஒருவன் அவர்களைச் சந்திப்பதற்காக ஓடினான்; அடுத்தவன் குதிரையைச் சுற்றிச் சுற்றி ஓடியவாறே அதன் முதுகில் ஏறுவதற்கு முயன்று கொண்டிருந்தான். ஆனால் அந்தக் குதிரையோ முரட்டுத்தனமாக, மேல் நோக்கித் தாவிக் குதித்தது! அந்தக் குதிரை தாவிக் குதிக்கும் போது எல்லாமே தாவிக்குதிப்பது மாதிரி இருந்தது. விசில் சப்தங்கள் இடைவிடாது அழுத்தமாக ஒலித்தன. அவற்றின் கீச்சுக் குரல்கள் தாயின் உள்ளத்திலே அபாய உணர்ச்சியைக் கிளப்பி விட்டன. அவள் நடுங்கினாள். இடுகாட்டின் வேலிப்புறமாக, அந்தக் காவலாளிகளின் மீது ஒரு கண் வைத்தவாறே நடந்தாள். ஆனால், அந்தக் காவலாளிகளும் சிப்பாய்களும் சிறைச்சாலையின் வேறொரு மூலையைக் கடந்து மறைந்து சென்றார்கள். கொஞ்ச நேரத்தில் பித்தானிடப்படாத கோட்டோடு ஒரு மனிதன் அவர்களைத் தொடர்ந்து சென்றான். அவன்தான் சிறைச்சாலை உபதலைவன் என்று அடையாளம் கண்டுகொண்டாள். எங்கிருந்தோ போலிஸ்காரர்களும், பரபரக்கும் ஜனக்கூட்டமும் கூடிவந்தார்கள்.

குதூகலத்தோடு சுற்றியாடுவதுபோல் காற்று சுழன்று வீசியது. காற்றுவாக்கில் தாயின் காதுகளில் உடைந்து கலகலக்கும் கூச்சல்களும், விசில் சப்தங்களும் ஒலித்தன... இந்தக் குழப்பத்தைக்கண்டு தாய் குதூகலமடைந்தாள். தனது நடையை எட்டிப் போட்டு நடந்தவாறே சிந்தித்தாள்.

'அவனும்கூட இப்படிச் சுலபமாய்த் தப்பி வந்திருக்கக் கூடும்!' திடீரென்று ஒரு மூலையிலிருந்து இரண்டு போலிஸ்காரர்கள் ஓடி வந்தார்கள்.

"நில்" என்று அவளை நோக்கி ஒருவன் மூச்சு வாங்கியவாறே கத்தினான்; "தாடிக்கார மனுஷன் ஒருவனை நீ பார்த்தாயா?"

அவள் தோட்டமிருக்கும் திசையைச் சுட்டிக்காட்டினாள்.

"அவன் அந்தப் பக்கமாகத்தான் ஓடினான்" என்று அமைதியாகச் சொன்னாள் அவள். 'ஏன்?"

"இகோரவ்! விசிலை ஊது!"

தாய் வீட்டை நோக்கி நடந்தாள். அவள் எதற்காகவோ வருத்தப்பட்டாள். அவளது மனதில் கசப்பும் வருத்தமும் கலந்த உணர்ச்சி தென்பட்டது. வெட்ட வெளியைக் கடந்து தெருவுக்குள் வந்தபோது அவளைக் கடந்து ஒரு வண்டி சென்றது. அந்த வண்டிக்குள் அவள் பார்த்தாள். அதற்குள் வெளிர்மீசையும், வெளுத்துச் சோர்ந்த முகமும் கொண்ட ஓர் இளைஞனைக் கண்டாள். அவனும் அவளைப் பார்த்துவிட்டான். அவன் பக்கவாட்டில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். எனவே அவனது இடது தோளைவிட வலதுதோள் உயர்ந்து காணப்பட்டது.

நிகலாய் அவளைக் குதூகலத்தோடு வரவேற்றான்.

"சரி, என்ன நடந்தது?"

"எல்லாம் சரிவர நடந்துவிட்டதாகவே தோன்றுகிறது."

அவள் தப்பி வந்ததைப்பற்றி சாங்கோபாங்கமாக விரிவாகச்சொல்லத் தொடங்கினாள் எனினும் அவள் வேறுயாரோ சொன்ன விசயத்தை திருப்பிச் சொல்வது மாதிரி பேசினாள். தான் கண்ணால் கண்டதையே அவள் நம்பமறுத்துச் சந்தேகிப்பது போலிருந்தது.

"அதிருஷ்டம் நம் பக்கம் இருக்கிறது." என்று கூறிக்கொண்டே கைகளைத் தேய்த்துக் கொண்டான் நிகலாய்.

"உங்களுக்கு ஏதாவது நேர்ந்து விடக்கூடுமே என்று நான் பயந்த பயம் சைத்தானுக்குத்தான் தெரியும். நீலவ்னா, நான் சொல்வதைக் கேளுங்கள். விசாரணையை எண்ணிப் பயந்து கொண்டிருக்காதீர்கள். எவ்வளவு சீக்கிரம் விசாரணை முடிகிறதோ அவ்வளவு சீக்கிரம் பாவெல் சுதந்திரம் அடைவான். நாடு கடத்துவதற்காகக் கொண்டு செல்லும் போதே, அவன் தப்பி வந்து விடக்கூடும். விசாரணையைப் பொறுத்தவரையில் இப்படித்தான் நடக்கப்போகிறது......"

அவன் கோர்ட்டு நடவடிக்கைகளை விவரித்துக் கூறினான். அவன் அவளை எவ்வளவுதான் தேற்றினாலும் கூட, தான் எதையோ கண்டு தனக்குள் தானே அஞ்சிக் கொண்டிருப்பதாக அவனது பேச்சிலிருந்து உணர்ந்து கொண்டாள் தாய்.

"கோர்ட்டில் நான் ஏதாவது தப்புத் தண்டாவாகப் பேசி விடுவேன் என்றோ, அல்லது நீதிபதிகளிடம் எதையாவது கேட்டு விடுவேன் என்றோ, பயப்படுகிறீர்களா?" என்று திடீரெனக் கேட்டாள் அவள்.

அவன் துள்ளியெழுந்து கைகளை எரிச்சலோடு ஆட்டிக்கொண்டான்.

"இல்லவே இல்லை!" என்று புண்பட்ட குரலில் சொன்னான் அவன்.

"நான் பயந்துவிட்டேன். அதுதான் உண்மை. ஆனால் நான் எதைக் கண்டு பயப்படுகிறேன் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை." அவள் பேசுவதை நிறுத்தினாள். அவளது கண்கள் அறையைச் சுற்றி வட்டமிட்டன.

"சமயங்களில், அவர்கள் பாஷாவிடம் முரட்டுத்தனமாகப்பேசத் தொடங்குவார்களோ என்று எனக்குத் தோன்றுகிறது. "ஏ, முஜீக்! உன்னைத்தான். முஜீக்குக்குப் பிறந்தவனே! உனக்கென்னடா துர்ப்புத்தி?" என்று கேட்பார்களோ என்று பயம். பாவெல் கர்வம் நிறைந்தவன். அப்படித்தான் பதிலும் சொல்லுவான். அல்லது அந்திரேய் அவர்களைக் கிண்டல் செய்து எதையாவது சொல்வான். எல்லோருமே சூடானவர்கள். எனவே, அந்த மாதிரி விசாரித்து இனி நாம் அவர்களைக் காண முடியாதபடி செய்து விடுவார்கள்!"

நிகலாய் பதில் பேசாமலே முகத்தைச் சுழித்தான்; தாடியை இழுத்துவிட்டுக் கொண்டான்.

"இந்த மாதிரி எண்ணங்களை என்னால் ஒதுக்கித் தள்ளவே முடியவில்லை." என்று அமைதியாகச் சொன்னாள் தாய்; "எனவேதான் இந்த விசாரணை எனக்கு அத்தனை பயங்கரமாய்த் தோன்றுகிறது! அவர்கள் ஒவ்வொன்றாகப் பார்த்து அலசி ஆராய்ந்து பார்க்கத் தொடங்கி விட்டால்! அதுதான் பயங்கரமாயிருக்கிறது! எனக்குத் தண்டனை பயங்கரமாய்த் தோன்றவில்லை. விசாரணைதான் பயங்கரமாய்த் தோன்றுகிறது. அதை எப்படிச் சொல்வது என்பதும் தெரியவில்லை....."

தான் சொல்வதை நிகலாய் புரிந்து கொள்ளவில்லை என்பதை அவள் உணர்ந்தாள்; அந்த உணர்ச்சியால் தனது எண்ணங்களை வெளியிட்டுச் சொல்வது கூட அவளுக்குச் சிரமமாயிருந்தது.

●—●—●

**அ**வளது பயம் ஒரு துர்நாற்றம் போல அவளது தொண்டையில் கமறியெழுந்து அவளைத் திணறச்செய்தது. விசாரணை தினத்தன்று, தனது இதயத்தை அழுத்திக் கொண்டிருக்கும் அந்தப் பெரும் மனப்பாரத்தைச் சுமந்துகொண்டுதான் தாய் நீதி மன்றத்துக்குச் சென்றாள்.

தெருவெல்லாம் சுற்று வட்டாரத் தொழிலாளர் குடியிருப்பிலிருந்து வந்த, அவளுக்கு அறிமுகமான பல தொழிலாளர்கள் அவளை வரவேற்றார்கள்; அவள் வாய்திறந்து எதுவும் பேசாமல் அவர்களுக்குத் தலை வணங்கிக்கொண்டே அந்த ஜனக்கூட்டத்தைக் கடந்து சென்றாள். நீதி மன்றத்திலும் அதற்கு வெளியேயுள்ள நடை வழிகளிலும், விசாரணைக் கைதிகளின் உறவினர்கள் கூடிக்குழுமி, தணிந்த குரலில் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிக்கொள்ளும் பேச்சு தாய்க்கு அமிதமாகப்பட்டது. அவளுக்கு அது புரியவில்லை. எல்லோரும் ஒரே மாதிரியான சோகத்துக்கு ஆளாகி நின்றார்கள். தாயும் இதை அறிந்திருந்தாள்; அதனால் அவளுக்கு மனப்பாரம்தான் அதிகமாயிற்று.

**(தொடர்ந்து வரும்)**

# மீண்டும் ஒரு குண்டு வெடிப்பு

**அகதிமுகாம் வாழ்க்கை துயரமானது. அந்த துயரம் மத்தியிலும் சில சுகங்களும் இல்லாமலில்லை...**

**திவாகரன்**

"நிகேத்" தாய் வரதினியின் அதட்டலான குரல். யன்னலூடாக எதிர் வீட்டை முற்றுகையிட்டிருந்த சிறுவனை திடுக்கிட வைத்தது. மிரள... மிரள... விழித்தவன்,

"அம்மா எதிர் வீட்டுக்கு யாரோ புதுசா குடி வந்திருக்காங்க. அவங்களுக்கு அழகான சின்னப் பாப்பா ஒன்னிருக்கு; அதத்தான் பார்த்திட்டு இருந்தேன். அம்மா, அந்த பாப்பா கூட விளையாடட்டா?" தாயிடம் கெஞ்சினான் அவன்.

"இங்கேதான் விளையாட்டுச் சாமான் நிறைஞ்சிருக்கே. உனக்கு விளையாட பாப்பா தேவப்படுதா? அவங்க என்ன குலமோ? கோத்திரமோ? அக்கம் பக்கத்து வீடுகளை சும்மாவும் பார்க்கக் கூடாதென்று', அப்பா சொல்வதை மறந்தா பொயித்தாய்?."

அவளின் ஒவ்வொரு வார்த்தையும் சிறுவனைப் பெட்டிப் பாம்பாக்கியது. ஆனாலும் அந்த எதிர் வீட்டுப் பாப்பாவை தொட்டுக் கதைத்து விளையாட வேண்டுமென்ற ஒரு பாசம் அவன் மனதில் ஆழப் பதிந்து விட்டது. சுருண்ட கேசமும் தக்காளிக் கன்னங்களையும் உடைய அந்தப் பத்துமாதக் குழந்தையே அவனுக்கு வேண்டும் போலிருந்தது.

ஜெயந்தும் வரதினியும் தனிக் குடித்தனம் வந்தன்று....

"வரதினி, நாமளும் நம்மட பாடும் மாதிரியும் இருக்கணும். அக்கம் பக்கத்தாக்களின் நட்போ, சகவாசமோ நமக்குத் தேவல என்று நினைக்கிறேன்." புரியாதவாறு அவனைப் பார்த்தாள் . அவள். அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவன்,

"அக்கம் பக்கத்தாருடன் நல்லாயிருந்தா நமக்குத்தான் நட்டம். அஞ்சு பத்து கை மாத்து வாங்குவாங்க. 'மிளகாய்த்தூள் முடிஞ்சிடிச்சி, ஒரு மூடித் தூள் தாங்க' என்று வாங்குவாங்க. ஓசிப் பேப்பர் படிக்க வருவாங்க. அப்புறம் 'மீன் கொஞ்சம் அதிகமா வாங்கிட்டம், இதக் கொஞ்சம் உங்க ஃப்ரிட்ஜில வைங்க' என்பாங்க. அதவிட நம்ம வீட்டுக் கதைகள அடுத்த தெருவில கதைப்பாங்க. இதனால தேவையில்லாத பிரச்சினைகளும், தொல்லைகளும் வரும்." அவன் கூறிவிட்டு அவளது விழிகளை நோட்டமிட்டான். அதில், அவனது வாதங்களுக்கான சம்மத ரேகை தாராளமாகப் படர்ந்திருந்தது.

இவ்விதமாக ஆறு வருடங்கள் உருண்டோடியதும். அவர்களின் புதல்வன் நிகேத் ஐந்து வயதை எட்டியிருந்தான். சிறுவனான நிகேத்திற்கு தனது பெற்றோரைப் புரிந்து கொள்வது சிரமமாயிருந்தது. அயலவருடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளாத வாழ்க்கையில் தனிமைப் படுத்தப்பட்ட உணர்வு அவனை வாட்டியது. அயல் வீட்டிற்கு பின் வீட்டார் செல்வதும், அயல் வீட்டுப் பிள்ளைகள் பின் வீட்டிற்குச் சென்று விளையாடுவதும், அவனுக்கு வேதனையைக் கிளப்பியது.

'ஏன் நம் வீட்டிற்கு யாரும் வருவதில்லை? ஏன் என்னய யாருடனும் விளையாட விடுவதில்லை?' என நினைக்கும் அவனது பிஞ்சு மனம் காரணத்தையறியாது தவிக்கும். அம்மா, அப்பா, விளையாட்டுப் பொருட்கள் எல்லாமிருந்தும்



அவனுக்கு ஏதோ ஒன்று தேவைப்பட்டது, அது என்ன? அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"வரதினி, எதிர் வீட்டுக்கு யாரோ வந்திருக்காங்க போலிருக்கே?" மோட்டார் பைக்கை முற்றத்து மாவில் சாத்தியபடி கேட்ட ஜெயந்தின் முகத்தில் அலுவலகக் களை அப்பியிருந்தது.

"ஆமாம் அப்பா, அவங்களுக்கு அழகான சிவப்பு பாப்பாயிருக்கு" ஆவலுடன் கூறிய சிறுவனை,

"அங்க போனியா?" என்ற தந்தையின் குரல் தடுமாற வைத்தது.

வீதியில் விளையாடும் சிறுவர்களைப் பார்த்து ஏங்குவதும், மாதத்தில் ஒரு தடவை பெற்றோருடன் கடற்கரைக்குச் செல்வதும் அவனுக்கு இப்போது வெறுத்து விட்டது. எதிர் வீட்டுக் குழந்தையுடன் பின் வீட்டுப் பிரதீப் விளையாடுவது, தாலாட்டுவது, தங்கையென்று உரிமை கொண்டாடுவதெல்லாம் அவனது வேதனையை இரட்டிப்பாக்கியது.

தின ஏடு முப்பத்தியொரு நாட்களை முழுதாய் விழுங்கியதும், அவர்கள் குடியிருக்கும் வீதியில் மிகப் பெரிய குண்டு வெடிப்பு சம்பவமொன்று நடந்து, அந்தப் பிராந்தியத்தை சின்னாபின்னமாக்கிச் சிரித்தது.

எல்லோரும் அயலூர் முருகன் ஆலயத்தை அகதி முகாமாக்கியிருந்தனர்.

நிகேத்தை தவிர, அகதி முகாம் வாழ்க்கை ஏனையவருக்கு சிறைக் கூடமாக இருந்தது. அவனோ, வீட் டில் கிடைக்காத ஏதோவொன்று இங்கு கிடைப்பதாக உணர்ந்தான். தாயும் தந்தையும் அயலவர்களுடன் உறவாடுவதைப் பார்க்கும் போது, அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவனும் சிறுவர்களுடன் விளையாடினான். எதிர் வீட்டுக் குழந்தையை தூக்கித் தாலாட்டினான். இனம் புரியாத இன்பத்தை அனுபவிப்பதாகத் தோன்றியது அவனுக்கு.

ஓரிரு மாதங்களில் நிலைமை சீரடைந்தது. வீட்டிற்கு வந்த நிகேத் சொர்க்கத்திலிருந்து நரகத்துக்கு வந்ததாக உணர்ந்தான். மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய வேதாளமாய்ச் செயற்பட்டனர் பெற்றோர். உறவுகளை வளர்ப்பதிலும் இலாப நட்டம் பார்த்து, வெறுப்பையும் கசப்பையும் விலை கொடுத்துச் சம்பாதித்தனர். ஜெயந்தும்–வரதினியும்.

மீண்டும் ஒரு குண்டுவெடிப்பு நடக்காதா என்று ஏங்கத்தொடங்கினான் நிகேத்.



படிப்பகம்

www.padippakam.com

# சுடலை ஞானம்

வெள்ளைத்துணியினால் மூடப்பட்டு மல்லாக்காகப் படுக்க வைக்கப் பட்டிருக்கிறது.

"அம்மா... என்ரை அம்மா... அம்மா உன்ரை மகன் வந்திருக்கிறேனம்மா.. தயவு செய்து கண்ணைத் திறந்து பாரம்மா..." அம்மா... ஒரே ஒரு முறை பாரம்மா...." பத்தாம் நம்பர் வாட்டே குலுங்கிக் குலுங்கி அழுதது. இவ்வளவு பாசமான மகனை விட்டு விட்டு தனிவழியே போய்விட்ட அந்தத் தாயின் இழப்புக்காக வானமும் கண்ணீர் சிந்தியது; காற்றும் அமைதிகாத்தது.

★★

வர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த பாடசாலைக் கேட்போர் கூடம் மாணவர்களாலும் பெற்றோர்- ஆசிரியர்களாலும் நிறைந்து காணப்பட்டது. சங்கரின் உபயத்தில் அழகான நீளக்காற்சட்டையொன்று நிவேதனை அழகுபடுத்தியது. வகுப்பில் சின்னச் சின்னப் பாடல் வரிகளை முணு முணுக்கும் நிவேதனா இது? அலங்கார மேடையின் நடுவே நிவேதன். சுற்றிலும் கருநீல ஒளிப்பிளம்பு. நட்டநடுவில் வெள்ளொளியில் நிவேதன்.. அலங்கார சொரூபனாய்... எந்தப்பிரம்மன் இந்தப் புதிய நிவேதனைப் படைத்தது? அந்த நீளமான பாடலை வரிபிசகாது ஒப்புவித்துக் கொண்டிருந்தான். வாத்தியக் கருவிகளோடு எப்படி இவன் இணைந்து போனான்; ஒன்றிக் கொண்டான்?.

**"சாந்தியின் அன்பை இழக்கமுடியாமல் தவித்தான். அம்மாவின் தொடர்புக்கு முற்றுப்புள்ளியிட்டான்"**



*"நீகொண்ட பெயரை நான் உரைத்துக் கண்டேன்- சாந்தி*
*நீ காட்டும் அன்பில் நான் கண்டு கொண்டேன்- சாந்தி"*
*......சாந்தி...... என் சாந்தி......*

பாடல் முடிந்தது.

கரகோஷம் மண்டபக் கால்களையும் அதிரவைத்தது. எல்லோரும் மகிழ்ந்தனர். நண்பர்கள் ஓடிவந்து வாழ்த்துக்கூறினர். நிவேதன் எப்போது பாடகனானான் என்பது தான் எல்லோருக்கும் அதிர்ச்சி. ஆனால் புரொஃபெஸர் சண்முகநாதனின் ஒரேமகள் அவள். நிவேதனோடு மெடிக்கல் பாஸ் பண்ணியிருக்கிறாள். சாந்தி மட்டும் இன்னும் கதிரையைவிட்டு எழும்பவில்லை. கண்கள் பொலு பொலென்று கண்ணீரைச் சொரிந்து கொண்டிருந்தன. யாருக்காக இந்தக் கண்ணீர்? முன்பின் தெரியாத நிவேதனின் பாடல் மட்டும் அவளுள்ளத்தில் ஏனிந்தத் தாக்கத்தை ஏற்படுத்தி அதிர வைத்தது? எதுவுமே புரியவில்லை. ஆனால் நிவேதன் மட்டும் மனதின் சுவர்களில் மோதி மோதி "அமைதிக்குப் பெயர் தான் சாந்தி..." பாடிக் கொண்டேயிருந்தான்; அழகாக, ஆனால் அதே சோகமாக...

நிவேதன் தனியேநின்று கொண்டிருந்தான். சந்தர்ப்பம் கண்ட சாந்தி அவனருகில் வந்தாள். கண்கள் சிவந்திருந்தன. அழுதிருக்கிறாள் என்பதை ஊகித்துக் கொண்டான். "நிவேதன் உங்கடை பாட்டு என்ரை உள்ளத்தை அப்பிடியே.." வார்த்தைகள் தணிந்தன. உதடுகள் துடித்துக் கொண்டன. "இந்தாங்கோ என்ரை பரிசு ஒண்டு" அவளின் ரோஜாநிற கைக்குட்டை ஒன்று நிவேதனின் கைக்கு மாறிக் கொண்டது. அதில் ஏற்கனவே இதயம் ஒன்று பொறிக்கப்பட்டிருந்தது.

புரொஃபெஸர் சண்முகநாதன் நிவேதனின் திறமையெல்லாவற்றையும் கேட்டு அறிந்து கொண்டார். வலிய வலியச் சென்று நிவேதனைப்பற்றி சாந்தி அப்பாவிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள். அவருக்கும்

**மானுட புத்ரன்**

நிவேதன் மீது மதிப்பு ஏற்பட ஆரம்பித்தது. மெடிக்கல் ஃபக்காலிட்டியில் நான்காம் ஆண்டில் மிகத் திறமையான மாணவனாக நிவேதன் இருந்தான்.

ஆரம்பத்தில் கம்பஸுக்கு வருவதற்கே தயங்கினான் அவன். செலவுக்குப் பணமில்லை. கஷ்டம். சாந்தி அவனை விட்டபாடில்லை. அவன் மறுத்தும் வலிய வந்து சாந்தி அவனுடைய எல்லாத் தேவைகளையும் செய்து கொடுத்தாள். உடுப்புகள் பணமென்று எல்லாமே சாந்தி மூலமாகத்தான் இந்த அதீத வளர்ச்சி. நிவேதனை சாந்தி உயிருக்குயிராகக் காதலித்தாள். நிவேதனும் தான். படிப்பு முடிய அப்பாவின் உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் வேலையும் முடிவடைந்து விட்டது. ஆனால் புரொஃபெஸரின் அந்த நிபந்தனை......!

எத்தனையோ முறை அவரைச் சந்தித்திருக்கிறான். பேசியிருக்கிறான். ஆனால் இன்று சந்தித்த புரொஃபெஸர் தன் சுயரூபத்தைக்காட்டிய விதம் அவனை நெரித்தது. "ஏதோ என்ரை சாந்தி கண்கலங்கக் கூடாது. அவளின் விருப்பம் உன்னோடை இருக்கு நிவேதன், அதுக்காக உன்னை ஒரு டொக்டரானதாலை என்ரை சாந்திக்கு திருமணம் முடிக்க சம்மதிக்கிறன், ஆனால் உன்ரை அம்மாவோடை- அந்தக் கிழவியோடை- அதுவும் என்வீட்டிலேயே உடுப்புக் கழுவி, சட்டிபானை தேச்சவளோடை நான் எப்பிடி நிவேதன் சம்பந்தம் வைக்கிறது? எப்பிடி நிவேதன் என்ரை கௌரவத்தை இழக்கிறது?"

ஆடிப் போனான் நிவேதன்.

★★★

சாந்தியின் அன்பை இழக்க முடியாமல் தவித்த அவனை நிபந்தனையில் திணித்தெடுத்தார் புரொஃபெஸர். அம்மாவோடிருந்த அனைத்துத் தொடர்புகளுக்கும் முற்றுப் புள்ளி. கொஞ்சக்காலத்தில் பணச் சுகம் அம்மாவை நினைவூட்ட மறுத்தது.

செல்லாச்சி தேய்ந்து தேய்ந்து ஓடாகிப் போனாள். மருந்தெடுக்கக்கூட பணமில்லை. நிவேதன் அன்னியப்பட்டுப்போனது பெற்ற அந்தத் தாயுள்ளத்தில் நீங்காத பெரும் வடுவாகவே பதிந்து போனது. ஆரம்பத்தில் லேசான இருமல்: பின்னர் சளியாகி இழுப்பாகி இப்போது மாற்ற முடியாத பெரு வருத்தமாகிவிட்டது, யாரிடம் சொல்வாள் யாரிடம் முறையிடுவாள்? அவளுக்கிருந்த ஒரே ஒரு சொத்தும் பறிபோய் விட்டதே. அழுதாள்- துவண்டாள்.

அன்று நிவேதனுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. உறையின் இடது பக்க கீழ் மூலையில் "உன் அம்மா" என எழுதப் பட்டிருந்ததைக் கண்டும் காணாதவனாய் அதனை எடுத்து குப்பைக் கூடையில் போட்டான். நிவேதன் எவ்வளவோ மாறிப் போனான். மாற்றியவர் புரொஃபெஸர் குடும்பத்தினர்.

மத்தியானம் அந்த மஞ்சள் கோட்டைக் கடந்து செல்லும் போது, அம்மாவை அந்த வாடகைக் காரினுள் கண்டு விட்டு என்னவாய் துடித்துப்போனான், தானாடவில்லையானாலும் தசையாடுமல்லவா...? பழைய நினைவுகள் வந்து மனதைத் துளைத்தன. அம்மாவின் கோலம் அவனை அவதிப்படுத்தியது. "அம்மா.. அம்மா..." என்று அவனையுமறியாமல் உச்சரித்துக் கொண்டான். வீட்டுக்கு வந்தவனுக்கு மனது அந்தரமாகிவிட்டது. என்ன செய்வது? அம்மாவுக்கு வருத்தம். சரியான சுகவீனம். பக்கத்து வீட்டு ஞானப்பிரகாசம் அண்ணர் அம்மாவைக் கொண்டு போகிறார். ஆஸ்பத்திரிக்காகத்தான் இருக்கும். எண்ணியவன் ஓடிப் போய் குப்பைக் கூடையினுள் கிடந்த கடிதத்தை எடுத்தான். அவனைப் படிப்பிப்பதற்காக, ஒரு கிழிந்த ஷேட்டுக்காக.. ஒரு கவளம் உணவுக்காக... அவனுக்காக... அம்மா சட்டிபானை கழுவிக் கொடுத்துக் கொண்டிருப்பது அவனுக்கு நிதர்சனமாய்த் தெரிந்தது.

அழுதான்; கலங்கிய விழிகளினூடே கடிதத்தைப் பிரித்தான்

***என் உயிரிலும் மேலான மகனுக்கு!***

***என்ரை உயிர் போகமுதல் உன்னை ஒருக்காப் பாக்க வேணும் போல கிடக்கு. ஒரே ஒருக்கால் வந்திட்டுப் போ. ஒரே ஒரு முறை மட்டும் மகனே!***

***உன் அம்மா,***

விம்மி வெடித்த உணர்வுகளை அடக்க முடியாமல் யாருக்கும் சொல்லாமல் தனது காரை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினான்.

நேர்ஸ் சொன்னாள்: "டொக்டர்! ஐந்தே ஐந்து நிமிஷம் முன்னமே வந்திருந்தால் அந்த அம்மாவின் ஆசை நிறைவேறியிருந்திருக்கும்.!"

★★

வெள்ளைத்துணியினால் மூடப்பட்டிருந்த உடல் மல்லாக்கப் படுக்க வைக்கப்பட்டிருந்தது. "அம்மா.. அம்மா... நான் உன்ரை மகன் வந்திருக்கிறேனம்மா.. தயவுசெய்து கண்ணைத்திறந்து.."

# என்றுமே காதலி

**"நீ எனக்கு எப்போதும் புதிய மலர்போலத் தோன்றுகிறாய். சமயங்களில் நான் உன்னை மறந்துகொண்டிருக்கிறேனா என்று சந்தேகம் வருகிறது."**

பிரியா! சன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருக்கிறாய். வாட்ச் வளையத்திற்குப் பொலிஷ் போடுகிறாய். பேப்பர் படித்துக்கொண்டே உன்னைப் பார்க்கிறேன். உன் கழுத்தையும், சதைப் பிடிப்பான தோளையும் பார்க்கிறேன். ஒற்றைச் சங்கிலியும், கரும் பச்சைச் சோளியும் உன்மேனியை எவ்வளவு செழிப்பாக எடுத்துக் காட்டுகின்றன! பிரியா! நீ எப்போதுமே எனக்குப் புதியவளாக இருக்கிறாய்.

பர்ர்ர்ர்......குழந்தை ஃபீடிங் பாட்டிலைத் தள்ளி விட்டது. அதன் கண்செருகி விட்டது. நீ மெதுவாக எழுந்து பாட்டிலை எடுக்கிறாய். தள்ளி வைக்கிறாய். என்னைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் இருந்தும் குனிந்தவாறு உன் வேலைக்குப் போகிறாய். உன் மேனியின் வாளிப்பு என் கண்களில் விழுகிறது. சோளிக்குக் கீழ் உன் சிவந்த இடுப்பும் அதன் நடுக் குழிவும் என்னை எவ்வளவு கவர்கிறது!

நிமிடங்கள் சென்ற பிறகு நிமிர்ந்து பார்க்கிறாய்.

நான் உன்னைப் பார்ப்பதை அறிந்தும் மெதுவாகக் கீழே குனிகிறாய். நீ என்னைப் பார்த்த நேரத்தில் உன்னிடம் என் கண் கெஞ்சியதை அறிந்திருப்பாய். அறிந்து கூட என் மீது இரக்கமில்லாது ஏன் இப்படி இருக்கிறாய்?

பச்சை நைலான் சாரி உன் தோளிலிருந்து குழல் மடிப்புக்களாக இறங்கி, உன் நெஞ்சங்களை இலை மறைவு காய் மறைவாகக் காட்டுகிறது. உள்ளே உன் பச்சைச் சோளியின் விம்மலும், அதனுள் வெண்மையின் மழுங்கிய மின்னலும் என்னை எவ்வளவு கவர்கின்றன? கீழே இளமை தளதளக்க உன் வயிறும், அதன் தாழ்வின் சன்னமான சுழிவுடன் தெரியும் நாபியும் என்னை ஏன் அன்று போலவே கவர்கின்றன?

ஏழு வருடங்களுக்கு முன் உன்னை கண்டிக்கு அழைத்துப் போனேன்; நினைவிருக்கிறதா? கல்யாணமான புதிதில் நீ இன்னும் அதிக வெட்கத்துடன் இருந்தாய்! என் பார்வை உன் நெஞ்சங்களில் விழுந்தாலே உடனே தலைப்பை எடுத்துப் போர்த்திக் கொள்வாய். இடையில் விழுந்தால் உடம்பைத் திரும்பி மறைத்துக்கொள்வாய். நான் என் விருப்பங்களை, அலை அலையாக எழும் ஆவல்களை உன்னிடம் கொட்டுவதற்குப் பயந்து லேசு லேசாக ஒன்று இரண்டு வார்த்தைகளில் காட்டிக் கொள்வேன். அன்று இருந்த நிலைக்கும் இன்றைக்கும் வித்தியாசம் சிறிதும் இல்லை.

ஏழு வருடங்களில் எத்தனையோ இரவுகளில் நாம் இரகசியங்களற்று, வெட்கங்களற்று, மனங்களில் மறைவுகளற்ற வெளிச்சமாயிருந்த போதிலும், இன்னும் என்னிடம் அதே ஏக்கம், தாபம், ஆவல் எல்லாம் இருக்கக் காண்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நீ இன்னும் புதியவளாகவே இருக்கிறாய்! உறவில்லாத யாரோ வேற்று மனுஷியாக இருக்கிறாய்!

இன்று விடுமுறை. நீண்ட மணி நேரங்கள் நம்மிடம் இருக்கின்றன என்ற நினைவில் நானே உன்னிடம் பேச்சை ஆரம்பிக்கிறேன்.

"கண்டிக்குப் போனது நினைவிருக்கிறதா?"

"ம்"

"ஓட்டல் அறை எவ்வளவு குளிர்ந்தது! நீ வெடவெடத்துப்போய் பெட்ஷீட்டை எடுத்து மூடிக்கொண்டு....."

"குளிரா? எந்த ஊரிலே அப்பா" ஐந்து வயது பெண். ஜெயா கேட்கிறாள். அருகில் அவளது இரண்டு வயதுத் தம்பி சதீஷும் நிமிர்ந்து பார்க்கிறான்.

"அப்பாவும் நானும் வெளியூருக்குப் போயிருந்தோம். அந்த ஊரிலே....." என்று சட்டென்று நீ மழுப்புகிறாய்.

"என்னை ஏன் அழைத்துக்கொண்டு போகவில்லை?" என்கிறாள் ஜெயா.

"அசட்டுக் கேள்வியெல்லாம் கேட்காதே, ஜெயா!"

★★★★★

கண்டிக்குப் போனதையும் அங்கே குளிரின் அடக்கத்தில் நாம் கழித்த இன்ப நாட்களையும் கூட நீ ஒரு அசட்டுக் காரியம் என்றுதான் கருதுகிறாய்! நீ பேசும் பேச்சில் அப்படி ஒரு அர்த்தம் எனக்குத் தோன்றுகிறது..?

இடையில் மீண்டும் ஒரு தரம் என்னைப் பார்த்துவிட்டுச் சட்டென்று குனிகிறாய். இதென்ன நாடகம் பிரியா!

இரவுச் சாப்பாட்டை நான் ஓட்டலிலிருந்து வரவழைத்த போதே நீ என்னைப் புரிந்து கொண்டிருப்பாய். இன்று உன் இரவு வேலையை குறைத்து அதன் மூலம் உன்னை ஒரு மனோ நிலைக்கு அழைத்துப் போக விரும்புகிறேன் என்பது தெரியும். அது உனக்கு என்பது எனக்கும் தெரியும். எனினும், இங்கே நடக்கும் நாடகத்தைப் பார்க்கும் போது ஒரு புதுப் பெண்ணை விட மனைவியை வசியப்படுத்துவதுதான் அதிகக் கஷ்டம் என்பதை நான் உணர்ந்து விடுகிறேன்.

"மூன்றாகி விட்டது. இனிமேல் பாபம்!" என்றாய் ஒரு நாள்.பிரியா! இதில் அந்த நினைப்பே தேவையில்லை!"

"ஊஹூம்! இதுக்கு மேல் வேண்டாம். ஆபீசில் என்னைக் கேலி செய்வார்கள்!"

"உன் ஆபிசின் அனுசரணைக்காக என்னை நீ புறக்கணிப்பதை நான் விரும்பவில்லை. பிரியா! வாழ்க்கையில் வேண்டத்தகாத குறிக்கோள்களுக்காக நிஜ இன்பங்களை நீ உதறித் தள்ளுகிறாய்."

"தூக்கம் வருது, அம்மா" என்கிறாள் ஜெயா.

எனக்கு அந்த வார்த்தை அமுதமாய் படுகிறது. நீ எழுகிறாய். அவளுக்குப் படுக்கை போடுகிறாய். சதீஷ் ஏற்கனவே தூங்கிவிட்டான். கடைசியில் கைக்குழந்தையை நீ தூக்கிப் படுக்க வைக்கும் போது-

மீண்டும் உன் மேனியின் வாளிப்பு என் கண்ணில் விழுந்து குமைகிறது! உடம்பின் சரிவுகள், உன் மழுமழுத்த கைகளில் சோளியின் பிடிப்பு, உன் முதுகின் மிருதுவான பரப்பில் குறுகுறுக்கும் இளமை, உன் சாரியில் மறைந்திருக்கும் உன் கால் மேற்பகுதிகளின் உருளையான திண்மை- யாவும் என் நெஞ்சில் உன்னை ஒரு புதியவளாகவே காண்பிக்கின்றன. மூன்று முறை தாய்மை பெற்றும், மீண்டும் மீண்டும் நீ இளமையாக மாறியதைக் கண்டு நான் வியக்கிறேன். தளர்ச்சியே உன்னிடம் இல்லை.

"விளக்கை அணைக்கவா?"

நீ கட்டிலில் வந்து உட்காருகிறாய். என் அருகில் வருவதை விட உனக்கு இப்போது வேறு வழியில்லை என்று எனக்குத் தெரிகிறது.

"விளக்கை அணைக்கவா?" மீண்டும் கேட்கிறேன்.

"ஊஹும்!"

"ஏன்?"

"தூக்கம் வரவில்லை!"

"என்ன செய்யப்போகிறாய்?"

"படிக்கப் போகிறேன்"

அந்தச் சரித்திர நாவலின் இரண்டாவது பாகத்தை எடுத்துக்கொண்டு வருகிறாய். அறை விளக்கை அணைக்கிறாய். ஆனால் மேஜை விளக்கைப் போடுகிறாய். கட்டிலில் படுத்தவாறே படிக்க ஆரம்பிக்கிறாய்.

நான் படுக்கிறேன். நினைவுகளில் என் நிலையை எண்ணியே புகைகிறேன். என் நண்பர்கள் வாசு, ஜோசப், குமாரசாமி மூவரும் வாழ்வதை நினைத்துப் பார்க்கிறேன். மூவரும் வெவ்வேறு இடங்களைத் தேடி இன்று போயிருப்பார்கள். ஞாயிற்றுக் கிழமையானால் அவர்களிடம் அப்படி ஒரு தாபம்! 'உங்கள் மனைவி வீட்டில் இருக்கும்போது, இது மாதிரி செய்வது....' என்று இழுப்பேன். அவர்கள் சிரிப்பார்கள். 'அதுங்களை விடு' என்று மனைவிகளை நியூட்டர் ஜெண்டரில் பேசுவார்கள். 'அதுங்களை' என்று சொல்லும் போது அவர்கள் மனங்களில் பொங்கி எழும் வெறுப்பு தெரிகிறது; கசப்பு தெரிகிறது! மனைவிகள் அவ்வளவு தூரம் அவர்களுக்குக் கவர்ச்சியில்லாது போய் விட்டார்கள்.

ஆனால் இங்கே...நீ எனக்கு எப்போதும் புதிய மலர் போலவே தோன்றுகிறாய்! சமயங்களில் நான் உன்னை மறந்து கொண்டிருக்கிறேனா என்று கூட சந்தேகம் எழுகிறது. உன் முழுமையும் எனக்கு கிடைக்கவில்லை என்பதை நன்றாக உணர்கிறேன்.

"பிரியா!"

"ஊம்?"

"படிச்சது போதும்!"

பதில் இல்லை. அவளைப் பார்க்கிறேன். அவள் முதுகு தான் எனக்குத் தெரிகிறது. பளபளக்கும் இடைவயிறு ஸில்க் போல் மடிந்து குழைந்திருக்கிறது. இடுப்புக்குக் கீழ் ஒரு மெர்மெய்ட் போல் மேனி சரிந்து வளைந்திருக்கிறது. கண் கொட்டாது பார்க்கிறேன்.

இன்னும் எவ்வளவு நாழிகை தான் படிப்பாய்? படித்துக் கொண்டே தான் இருப்பாய்! அது உன் தந்திரம்! என்னை விலக்கும் தந்திரம். திடீரென்று ஒரு சந்தேகம் எழுகிறது. புத்தகத்தின் பக்கம் திரும்பவே யில்லை. லேசாக உன்னைத் தொடுகிறேன்.

புத்தகம் கைகளிலிருந்து தானாக விழுகிறது. நீ தூங்கிவிட்டாய்.

பன்னிரண்டு மணி. மேலே ஒரு கை விழுகிறது. சிலிர்க்கிறேன். என் முகத்தை மெதுவாக அந்தக் கை தடவுகிறது. கண்ணீரின் ஈரத்தை உணர்ந்ததும், "அழுகிறீர்களா?" என் பிரியா கேட்கிறாள்.

நான் பதில் பேசவில்லை.

மெள்ளப் புரண்டு என் நெஞ்சின் மீது சாய்கிறாள்.


"நீங்க ஒரு பைத்தியம்!" என்கிறாள். என் கைகளை இழுத்து அவளது முதுகின் பின்னால் கோர்க்கிறாள். முகத்தில் முகத்தைப் புதைத்துப் புரட்டுகிறாள்.

நான் உயிர் பெறுகிறேன். என் கைகள் அவள் கழுத்தைத் தடவிக் கொடுக்கின்றன.

"மனம் மாறி விட்டாயா?" என்கிறேன்.

"எதிர்பாராமல் கிடைக்கும் பரிசுக்குத் தான் மதிப்பு அதிகம். எதிர்பார்த்துக் கிடைப்பது ருசி கிடையாது!"

பரிசின் மதிப்பை உணர்கிறேன்.



**ரேணுகா செல்வராஜ்**


படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சுக்கு ஒரு விண்ணப்பம்

தடாகத்தில் தாமரை பூத்திருந்தது.
அவனுக்கு ஒரு சந்தேகம்.
அந்தத் தாமரையை நகலெடுத்துத்தான்
இந்தச் சிலைக்கு முகம் வடித்தார்களோ?

சிலை அவன் எதிரே இருந்தது.
கலை அதன் அழகில் இருந்தது.
சிலையென்றும், கலையென்றும்
அவன் உவமைக்கு உயிராக இருந்தவள்
அவன் எதிரேயிருந்தாள்.
பெயர்-செங்கமலம்.
அவள் பெயரிலேயே தாமரையை
பதியம் போட்டுவிட்டார்களே!

தடாகத் தாமரையைப் பார்ப்பதும்
தன் முகத்தைப் பார்ப்பதுமாக
கண் மேயவிட்டுக்கொண்டிருந்தவனை
பெண் அழகி குறும்பாய் நோக்கினாள்.

"வந்ததில் இருந்து பார்க்கிறேன்
உங்கள் சிந்தனை இங்கில்லை!"
செவ்வாயால் நெய்தாள் வார்த்தைகளை!
கொய்வாயோ என்று கேட்டு
மேயும் விழிகளுக்கு சவால் விட்டன இதழ்கள்.

"சிந்தனைக்கு கொம்பு சீவுகிறேன்."
என்றான் அவன்.
"வந்தனம்! நான் போய் வரவா?"
என்றாள் அவள்.
"நந்தவனம் நகர்ந்து போனால்
என் சிந்தனைக்கு எப்படி வாசமிருக்கும்?"
என்றான் உதட்டில் பூத்த புன்னகையுடன்.

விழிகளை மூடித் திறந்தாள்,
வெட்டியது மின்னல்!
இதழ்களை புன்னகையால் நிரப்பினாள்,
இதயத்தில் அடித்தது குளிர்!
'பனி பொழியும் நிலாச்சுளையோ
கனிமொழியாள் இதழ்கள்?'
நெஞ்சுக்குள் விழுந்தது வினாவிதை!

"நெஞ்சுக்குள் எத்தனை நினைவுகளோ,
நேரில் நீ நிறைந்து இருக்கையிலே!"
வார்த்தைகளை செதுக்கி உதிர்த்தான்.
நிலவின் இதழ்களில் புன்னகை முத்திரை!
களவின் பாங்கில் எழில்களை பருகினான்!

பருகிய எழில்கள் போதை தந்தன.
உருகினான், மெல்ல நெருங்கினான்.
நடுவிரல் நீட்டி சுளையிதழ் தொட்டான்.
மேலும், கீழுமாய் வருடிப் பதமறிந்தான்!
மாலை நேரத்து வானமாய் சிவந்தாள்.
கோல விழிகளில் குடம் குடமாய் மது!

இதழ்களை அளவெடுத்தவன்
விரல்களால் நேர் கோடு கிழித்து
கழுத்து நரம்பில் பட்டு நகர்ந்து
எழுந்து நிமிர்ந்த மலைகளின் விளிம்பில்
தயங்கி நிறுத்தி முகத்தை நோக்கினான்.

விரல்பட்டதுமே விழிகள் மூடிக்கொண்டன.
விழிபட்டபோதே வெட்கப்பட்டவள்
விரல் பட்டபின் விழித்தா இருப்பாள்?



வெட்கத்தில் தாள் போட்டது புறக்கண்.
விரகத்தில் தாள் திறந்தது அகக் கண்!

மூடிக்கிடந்த விழிகள் இரண்டும்
தேடிக் கொண்டிரு என்று சொல்லினவா!
விரல்களுக்கு வீரம் வந்து விட்டது.
களத்தில் இறங்கி காரியக்கூத்தாடின!
நிலவுக்கு நெற்றி வியர்த்தது.
நெஞ்சுக்குள் முட்டிய மூச்சு
நெடு மூச்சாக தீ கலந்து தெறித்தது!

ஓங்கி வளர்ந்திருந்த வெட்க மரத்தில்
ஏங்கிய தாபம் கோடாரியானது.
மரம் சாய்ந்தது! மனம் பாய்ந்தது!

இப்போது அவனே மரமானான்.
அவள் கொடியானாள். மலர்க்கொடி.
மலர்க்கொடி மரத்தில் படர்ந்தது!

வேள்வித் தீ விடியும்வரை வேள்வித் தீ!
இரண்டு சந்தன விறகுகள்
இரவைப் பகலாய் ஆக்கி முடித்தன!
கூவிய சேவலை பகையாய் நினைத்தன!
எட்டிப்பார்த்த சூரியனையும்
எதிரியாய் நினைத்து முறைத்தன!
"அதற்குள்ளாகவா விடிந்து தொலைத்தது?"
வினாவில் வேதனை வழிந்து விழுந்தது!

முகத்தில் காற்று அறைந்து போக
விழிகளைத் திறந்தாள் செங்கமலம்.
யாவுமே கற்பனை. கனவுகளின் விற்பனை!
யாவுமே கனவு, ஆனால் நினைவுகளின் பதிவு!

இன்று நடந்தது போலிருக்கும்
நேற்று நேரில் நடந்ததெல்லாம்!
நெஞ்சுக்குள் மூடிக்கிடப்பதை
கனவு களவெடுத்து காட்சியாக்கியதே!

களவு கொடுத்தாயோ இரகசியத்தை,
கனவுக்கு இரவல் கொடுத்தாயோ?
நெஞ்சுக்கு மட்டும் நிம்மதி
நேரில் இருந்தாலும்
தொலைவில் இருந்தாலும்
அவர் பின்னால் செல்கிறது.

விழிகள்தான் பாவம்.
கண்டால்தானே விருந்து.
அதனால்தான் கலங்கி நிற்கின்றன.
காண்பது எப்போது அவரை?
என்று அடிக்கடி துடிக்கின்றன!
கதவம் திறந்தபடி தவிக்கின்றன.

இலக்கிய நயம்

## திருவது ரசிகன்

"நெஞ்சே நில்!
எங்கே போகிறாய்?"

"நினைவெங்கேயோ
அங்கே போகிறேன்!"

"கண்டுகொள்வாயோ
உன்னைக் கவர்ந்தவரை?"

"கண்டுமட்டுமல்ல
கலந்தும் வருவேன்!"

"நில் கொஞ்சம் இப்படி!
பாவம் இவ் விழிகள்.
பாடாய்ப் படுத்துகின்றன.
பள்ளிகொள்ள மறுத்து
என் உயிரையும்
உண்டுகொண்டிருக்கின்றன!"

"பாவம்தான் நீ
நான் என்ன செய்யலாம்?"

"அவர் உருவத்தை
உண்ணாவிட்டால்-என்
உயிரை பிடுங்கித் தின்றுவிடும்
இந்த பொல்லாத விழிகள்.
மறுக்காதே நெஞ்சே!
விழிகளையும் கூட்டிச்செல்!
அந்த வீரர் திருவுருவம்
காணச் செய்!"

நெஞ்சுக்கு காதலி போட்ட அந்த விண்ணப்பம்தான் இந்தக் குறள்.

**"கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்**
**தின்னும் அவர்காண லுற்று"**

-குறள்-1244. அதிகாரம்-125

# "என் திறமையை நிரூபித்தேன் மேலும் சிறப்பாக ஆடுவேன்"

சவுரவ் கங்குலி-இந்திய அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டபோது பலத்த எதிர்ப்புக் குரல் எழுந்தது. எதிர்ப்புக் குரல் கொடுத்தவர்களில் முன்னணியில் இருந்தவர் திலிப் வெங்சர்க்கர்.

கிரிக்கெட்டின் மெக்கா என்றழைக்கப்படும் இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் மூன்று சதம் போட்டவர் வெங்சர்க்கர்.

ஆனால் அதே லோர்ட்ஸ் மைதானத்தில் அறிமுகமான டெஸ்ட் போட்டியில் செஞ்சுரி போட்ட முதலாவது இந்திய வீரர் என்ற பெருமையை தட்டிக்கொண்டார் கங்குலி.

சஞ்சய் மஞ்ரேக்கர் காயமடைந்து விளையாட முடியாத நிலையில்தான் கங்குலி களத்தில்



இறக்கப்பட்டார். சதம் போட்டது மூலமும், தனது திறமையான ஆட்டம் மூலமும் அணியின் நட்சத்திர அந்தஸ்து பெற்றுவிட்டார்.

'ஸ்போர்ட்ஸ்' சஞ்சிகை ஒன்றுக்கு கங்குலி அளித்த பேட்டியில் இருந்து.....

**கேள்வி:- உங்களிடம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கிரிக்கெட் வீரர்கள் யார்?**

கங்:- அசாருதீன் என்மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்தினார். அவருடைய முதல் மூன்று டெஸ்ட் ஆட்டங்களும் எனக்குப் பெரும் ஊக்கம் தந்தன. 1984 முதல் அவருடைய விசிறி நான். அவர் மிகவும் சிறந்தவர். இளைஞர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் தருபவர்.

ரவி சாஸ்திரியின் திறமையையும் நான் பெரிதும் கவனித்திருக்கிறேன். நெருக்கடியான கட்டங்களில் மன உறுதியுடன் ஆடும் வீரர் அவர்.

**கே:- இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் உங்களை தெரிவு செய்ததைத் தொடர்ந்து சரமாரியான விமர்சனங்கள் எழுந்தன. உங்கள் மனோநிலை எப்படியிருந்தது?**

கங்:- என்னைப் பற்றி எதுவுமே புரிந்து கொள்ளாமல் கடுமையாக விமர்சித்தவர்கள் பற்றி உண்மையாகவே வருத்தமாகத்தான் இருந்தது. நான் திடீரென்று அணிக்குள் நுழைந்தவனல்ல. எனது திறமைகளை வைத்தே என்னைத் தேர்ந்தெடுத்தனர். எனக்குரிய இடம் கிடைக்குமென்று எதிர்பார்த்தேன். இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் நான் இணைவதற்கு தகுதியானவன் என்று எனது அணியினரும் கருதினார்கள். குறிப்பாக சச்சின் டெண்டுல்கரைக் குறிப்பிடலாம். இந்திய அணியில் விளையாடும் தகுதி எனக்கு இருப்பதாக அவர் கருதினார்.

**கே:- நீங்கள் அகந்தையுடன் நடப்பதாக கூறப்படுகிறது. சக வீரர்களுக்கு மைதானத்தில் பானங்கள் கொண்டு சென்று கொடுப்பதற்கு விரும்புவதில்லையாமே?**

கங்:- அது தவறான கருத்து. 1991ம் ஆண்டில் இருந்தே என்னைத் தற்பெருமை பிடித்தவன் என்று கூறுகிறார்கள். ஒரு கிரிக்கெட் ஆட்டக்காரன் தனது சகாக்களுக்கு மைதானத்தில் பானங்கள் கொண்டுபோய்க் கொடுக்க ஏன் தயங்க வேண்டும்? இந்திய அணியில் 12 வது இடத்தில் இருப்பதில் பெருமைப்படுகிறேன். 16வது இடத்தில் இருப்பதும் பெருமைக்குரியதே.

**கே:- கண்டன விமர்சனங்களில் இருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?**

கங்:- பலவற்றைக் கற்றுக்கொண்டேன். முதலாவதாக நான் உறுதிமிக்கவனாக மாறினேன். உண்மையில் என்னைத் திருத்திக் கொள்ள நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது.

**கே:- லோர்ட்ஸில் பெற்ற சதங்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

கங்:- உண்மையை மறைக்காமல் கூறுகிறேன். ஒரு மதிப்பான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்தேன். அது ஈடேறியது. என்னைப் பற்றி குறைகூறியவர்களின் கருத்து தவறானது என்று நிரூபித்தேன்.

**கே:- மேலும் எவ்வாறு உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளப் போகிறீர்கள்?**

கங்:- சாதனைபடைத்த வீரர்களின் ஆட்டங்களை வீடியோவில் பார்ப்பேன். அசார் மற்றும் டெண்டுல்கர் கூறும் கருத்துக்களை செவிமடுத்து எவ்வளவோ அறிந்து கொள்ள முடியும். ஒரு பயிற்சியாளரிடம் பெறுவதைக் காட்டிலும், நாங்களாகவே கற்று, முடிவெடுத்துத் திருந்துவது மேலானது என்று கருதுகிறேன். கிரிக்கெட்டில் இது பிரதானமானது.

**கே:- உங்கள் குறிக்கோள் என்ன?**

கங்:- எப்போதும் எனது குறிக்கோள் ஒன்றுதான். விளையாட்டரங்கில் நுழையும் போது சிறப்பாக ஆடவேண்டும் என்பதே எனது சிந்தனை. மேலும் சிறப்பாக ஆட முயலுவேன் என்பதை உறுதியாகக் கூறுகிறேன் என் நன்மை கருதும் எவருக்கும் அதிருப்தி ஏற்பட இடம் தரமாட்டேன்.

# சிந்தியா பதில்கள்

*** சிந்தியா! ஒரு காலத்தில் உலகை ஆளாமல் ஆண்டுகொண்டிருந்த கார்லோஸ் இன்று என்ன செய்து கொண்டிருக்கிறான்?**

ஸலீம். எம். கடாபி,
ஹொறவபொத்தானை.

ஃபிரான்ஸ் சிறைக்கூடத்தில் மலரும் நினைவுகளை மனதில் ஓடவிட்டுப்பார்த்தபடி, தன் கடைசிநாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறான். அநேகமாக உயிரோடு வெளியே விடமாட்டார்கள் போலத்தான் தெரிகிறது.

※●✣

*** டியர் சிந்தியா! இராமன் நல்லவரா, இராவணன் நல்லவரா?**

ஆர். பாலச்சந்திரன்,
அல்மா சீட்டன் டிவி.

விரும்பாத பெண்ணை சேதமில்லாமல் திருப்பியனுப்பியவன் இராவணன். தன்னையே நினைத்து வாடிவந்த சீதையை சந்தேகத்தீயை அணைக்க தீயில் இறங்கச் சொன்னவன் இராமன். இதில் யார் உயர்ந்து நிற்கிறார் என்று நீங்களே தீர்மானியுங்கள் பாலச்சந்திரன்!

※●✣

*** டியர் சிந்தியா! கமல் அடுத்து நடிக்கும் படத்திற்காக என்ன புதுமை செய்துள்ளார்?**

நா. ஜெயகணேஷ், பொகவந்தலாவ.

பெண் வேடத்தில் அசத்துவதற்காக சமீபத்தில் அமெரிக்கா சென்று கடந்தவாரம் திரும்பியிருக்கிறார். எப்படி மேக்கப்போடலாம் என்று கம்யூட்டர் முறையில் கற்றுக் கொண்டு திரும்பியிருக்கிறார். எனவே புதுமையை எதிர்பார்க்கலாம்.

※●✣

*** சூப்பர் ஸ்டார் ரஜினி எப்போது மீண்டும் நடிக்கத் தொடங்குவார்?**

எம். முஸ்தபா, கண்டி.

தலைமுடி வளரும்வரை படப்பிடிப்பில் தலைகாட்ட மாட்டார். "ஆகஸ்ட்" மாதம் கமாராமுன் ஆஜராகிவிடுவேன் என்று அறிவித்திருக்கிறார். அப்போதுதான் தாடிக்கு 'குட்பை' சொல்வாராம். தலைமுடி வளர முக முடி போகும்.

※●✣

*** சிந்தியா! தொலைபேசியில் வளவளவென்று பலமணித்தியாலங்கள் அலட்டுபவர்கள் பற்றி?**

சி. ஸ்ரீரவி, இரத்தினபுரி.

தொல்லைபேசியர்கள்.

※●✣

*** டியர் சிந்தியா! உண்மையைக் கூறினால்**

சிலருக்கு கசப்பது ஏன்?

க. மலர்விழி, நாரஹேன்பிட்டி.

பொய் என்ற இனிப்புக்கு பழக்கப்பட்டு விட்டதால். இரத்தத்தில் சர்க்கரை அதிகமானால் நீரிழிவு. வாழ்க்கையில் பொய் அதிகமானால் தன்னழிவு. சிலருக்கு உடனே புரியாது மலர்விழி.

※●✣

*** இந்திய கிரிக்கெட் அணியின் எதிர்காலம் எப்படி இருக்கும்?**

எஸ். சுதாகரன், பெரிய நீலாவணை.

புதியவர்கள் நம்பிக்கை தருகிறார்கள். பொறுத்திருந்து பார்க்கலாமே!

※●✣

*** டியர் சிந்தியா! காதலிப்பவர்களுக்கு மட்டுமா கவிதை வரும்?**

நா.ரோ. கிளேரன்ஸ், தலவாக்கலை.

மனிதராகப் பிறந்தால் ஏதாவதொன்றை காதலித்தேயாக வேண்டும். பெண்ணையில்லாவிட்டால் மண்ணை, மண்ணையில்லாவிட்டால் பொன்னை, இவை எதையும் இல்லாவிட்டால் தன்னை என்று காதல் பல வகை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு காதலன், ஒரு கவிஞன் இருந்து கொண்டே இருக்கிறான். சிலரிடமிருந்து சடக்கென்று வெளியே வந்துவிடுகிறான்.

※●✣

*** தன்னம்பிக்கைக்கு ஒரு உதாரணம் சொல்லுங்கள் பார்க்கலாம்?**

சி. திவாகரன், மட்டக்களப்பு.

உலகின் தலைச்சிறந்த மேதையான பெர்னாட்ஷா ஒரு முறை நிருபர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். இன்றைய தினம் உலகத்தில் மூன்றே மூன்று பேர்கள்தான் பெரிய மனிதர்கள் என்றார் பெர்னாட்ஷா. "யார் யார்?" என்று கேட்டார்கள் நிருபர்கள். "ஒருவர் மகாத்மா காந்தி, மற்றவர் ஜோசப் ஸ்டாலின், மூன்றாமவர்...." என்று நிறுத்தினார் பெர்னாட்ஷா.

நிருபர்களுக்கு தாங்கவில்லை. "யார் அந்த மூன்றாமவர்?" என்று ஆவலோடு கேட்டனர்.

"தன்னடக்கம் காரணமாக அவர் தம் பெயரைச் சொல்ல இயலாதிருக்கிறார்." என்று பெர்னாட்ஷா போட்டாராம் ஒரு போடு.

※●✣

*** டியர் சிந்தியா! ஏப்ரல் ஃபூல் அன்று திருமணம் முடிக்கலாமா?**

ஹப்புத்தளையூர் மனோ.

அதைவிடப் பொருத்தமான நாள் ஏது?

※●✣

*** கறுப்பு ரோஜா படம் எப்படி?**

எம்.எப்.எம். அஜ்மல்,
கொழும்பு-10.

மலர்ந்தவுடன் வாடிவிட்டது.

※●✣

*** டியர் சிந்தியா! மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி என்கிறார்களே, உண்மை?**

என். எம். ரஜாப்தீன்,
ஹபுகஸ்தலாவ.

சில நேரங்களில் உண்மை. சில நேரங்களில் பொய்!

※●✣

*** 'பண்டிட் குயின்' திரைப் படத்தில் நீங்கள் ரசித்த காட்சி?**

ஜே.எம். நியாஸ், கிண்ணியா-04.

தன்னை நிர்வாணமாக நிறுத்தி மிதித்தவர்களை பூலான் புரட்டி எடுக்கும் காட்சி.

※●✣

*** டியர் சிந்தியா! நிலமை வழமைக்கு திரும்பியுள்ள யாழ்ப்பாணத்தில் குண்டுகள் வெடிப்பது பற்றி....?**

அன்சீர்.ஏ.மஜீட், கல்கமுவ.

யாழ்ப்பாணத்தில் வழமை என்பது அதுதானே!

※●✣

*** இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் நன்றாக விளையாடிய இந்திய வீரர் யார்?**

கி. ரங்கன், மஸ்கெலியா.

டெண்டுல்கர்தான் கூடுதலான புள்ளி பெற்று 50 ஆயிரம் ரூபா பரிசையும் பெற்றுள்ளார். இரண்டாவது இடம் கங்குலிக்கு.

※●✣

*** சிறிய விஷயத்தை பெரிதாக எடுத்துக்கொள்வோருக்கு என்ன கூறுகிறீர்கள்?**

வி.கலா, தெமோதரை.

சிறு பொறியை ஊதி ஊதி காட்டுத்தீயாக்கினால் நஷ்டம் எல்லோருக்கும்தான்.

※●✣

*** முதற் கோணல் முற்றும் கோணல் என்று சொல்வது உண்மையா சிந்தியா?**

கே. பார்த்தீபன், கொழும்பு-11.

அதெல்லாம் முயற்சிகளை முடமாக்கும் கருத்துக்கள். நம்பவேண்டாம். ஒரு உதாரணம் சொல்லவா பார்த்தீபன்? எம்.ஜி.ஆர். முதன் முதலாக கதாநாயகனாக ஒப்பந்தம் செய்யப்பட்ட படம் 'சாயா'. கதாநாயகி டி.வி.குமுதினி. எம்.ஜி.ஆருக்கு சம்பளம் மூன்னூறு ரூபா. படம் அரைகுறையாக நின்றுவிட்டது. வெளியாகவேயில்லை. 1941 இல் நடந்தது அது. அதே எம்.ஜி.ஆர்தான் தமிழ் பட உலகில் வெற்றிகரமான கதாநாயகனாக பின்னாளில் வலம்வந்தார். வரலாறும் படைத்தார். இப்போது சொல்லுங்கள், முதற் கோணல் முற்றும் கோணலா?

※●✣

*** பாலும் தேனும் பாகும் பருப்புமிவை நான்கும் கலந்து உமக்கு தந்தால் என்ன தருவீர்?**

வி. ரவிக்குமார், மஸ்கெலியா.

அவற்றுக்குரிய கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக ஒரு வெள்ளிக்காசுகூட தர மாட்டேன். யாழ்ப்பாணம் சென்றீரானால் கறுப்புச் சந்தையில் விற்கலாமே.

※●✣

*** இலங்கை மக்களிடம் காணப்படும் மிகச் சிறந்த பழக்கம் எது?**

ஷகிலா வேலுப்பிள்ளை, நானுஓயா.

நம்மைத்தவிர நம்மைச் சுற்றயுள்ள உலகம் முன்னேறிக்கொண்டிருப்பது தெரிந்தாலும், போட்டியோ, பொறாமையோ இல்லாமல் என்ன ஒரு அழகாக தூங்கிக் கொண்டிருக்கிறோம் பாருங்கள். அதுதான்!



※●✣

*** டியர் சிந்தியா! பூப்போன்ற வாலிபம் வாடாமல் இருக்க என்ன செய்யலாம்?**

ஜி. ஜெயசீலன், மட்டக்களப்பு.

சோர்வான சிந்தனை என்னும் கொடும்கரம் நீண்டு பூவைப்பறிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். முதுமையிலும் அத்தனை இளமையாக இருக்க வேண்டும். தமிழக முதல்வரைப் பாருங்கள். வயது 73. செயல்களிலும், சிந்தனையிலும் வாலிப வாசனை.

※●✣

*** அசாருதீன் விவகாரம் எப்படி இருக்கிறது?**

என். எம். மன்சூர், புத்தளம்.

விவாகரத்துக்கு மறுத்துள்ளார் நஸ்ரின். இங்கிலாந்துக்கும் சங்கீதாவோடுதான் பறந்திருக்கிறார் அசாருதீன்.

※●✣


படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 40

இராமபிரானுடைய அபயக்குரலைக் கேட்ட மாத்திரத்தில் தன் நிலையிழந்து தவித்த சீதை, கபட வேடதாரியான இராவணன் முன்வந்து நின்றபோது தன் மனப் போராட்டங்களை வெளிக்காட்ட விரும்பவில்லை. இருப்பினும் "யாருடைய துணையுடன் இக் கானகத்தில் வாழ்கிறாய் பெண்ணே?" என்ற இலங்கைவேந்தனின் வினாவினால் சற்றுத் தடுமாறிவிட்டாள். தன் கணவனுக்கு என்ன நேர்ந்தது விட்டதோ? என்று மனம் மீண்டும் பதறத் தொடங்கிவிட்டது.

## வேடதாரியின் கபட நாடகம்

பிறருடைய எண்ண ஓட்டங்களை அறியும் ஆற்றல் இல்லாமல் இலங்காபுரியின் அரியணையில் இத்தனை காலம் இராவணனால் வீற்றிருந்து ஆட்சி புரிந்திருக்க முடியாது. சகல சாஸ்திரங்களும் கற்றுணர்ந்தவன் தான். ஆனால், காமவெறி தலக்கேறி அவன் கண்களையும் காதுகளையும் மட்டுமல்லாமல் அவனுடைய கருத்தையும் சிதைத்து விட்டிருந்தது. தான் சீதையை நினைத்து ஏங்குவது போலவே சீதையும் தனக்கேற்ற துணையின்றி வருந்துகிறாள் என்று கருதிவிட்டான்.

முற்றும் துறந்த மெஞ்ஞானியின் முன்னே தான் நிற்பதாகவே சீதை கருதியதால், வஞ்சகமின்றி தன் கண்களில் தேங்கி நின்ற கண்ணீரை வடிய விட்டுவிட்டாள்.

### தப்புக்கணக்கு


தான் விடுத்த வினாவுக்கு விழி வடித்த கண்ணீர்தான் விடை என்று கண்டதனால், விரகதாப வேதனையால் சீதை துடிக்கிறாள் என்று இராவணன் தப்புக்கணக்கு போட்டு விட்டான். ஆகவே சுலபமாக சீதையைத் தன்வசமாக்கி விடலாம் என்று மனப்பால் குடித்தான். 'ஜனக மாமன்னனுக்கு மகளாகப் பிறந்து அரசபோகத்தில் சகல சிறப்புக்களுடனும் வாழ்ந்த இப்பெண், எந்தவிதமான வசதிகளுமற்ற கொடிய வனத்திலே, கொடிய வனவிலங்குகளுக்கு மத்தியிலே வெறும் காய்கனிகளை உண்டு வாழ்கிறாளே. நிச்சயமாக இராமனோடு இவள் மகிழ்ச்சியாக வாழ முடியாது.' என்று முடிவு கட்டினான். இருப்பினும் தான்தான் இலங்காதிபதி இராவணன் என்பதை உடனடியாக வெளிக்காட்டிக் கொள்ளவிரும்பவில்லை. வாழ்க்கையில் சுவையற்று வாடி வதங்கும் இவளிடம் தன் பெருமையை, புகழை, வசதிவாய்ப்புகளை யெல்லாம் தானே எடுத்துக்கூறி, தன் மீது சீதை மையல் கொள்ளத்தக்கதான வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம் என்று தீர்மானித்தான்.

"பெண்ணே! இங்கு எந்த முனிவரின் துணையுடன் தங்கியிருக்கிறாய், என்று கேட்டேன்! பதிலையே காணோம்?" என்று மீண்டும் தனது வினாவினை இராவணன் புதுப்பித்தான். "கொடிய வன விலங்குகளும் அசுரர்களும் நிறைந்த இக்கானகத்தில் தனியாகவா வாழ்கிறாய்?" என்றும் தொடர்ந்தான்.

தன் துயரத்தை மறைக்க முயற்சித்தவளாக, "பெரியவரே! அரசர்க்கரசரான தசரத மாமன்னரின் மூத்த குமாரன் மனைவி நான்; மிதிலை மாமன்னன் ஜனகனின் மகள்–சீதை என் பெயர். தன் தந்தை சொல்லைக் காப்பாற்றும் பொருட்டு என் கணவர் வன வாசம் ஏற்றார். அவருடன் இக்கானகம் வந்தேன்" இவ்வாறு தழுதழுத்த குரலில் கூறினாள். பர்ணசாலைக்குள் புகுந்து ஓர் இருக்கையைக் கொண்டு வந்து போட்டு அதில் அமரும்படி கேட்டுக்கொண்டாள். பர்ணசாலையினைச் சுற்றித் தரையில் போடப்பட்டிருந்த கோட்டில் ஏதோ இருக்கிறது என்பதனை அறிந்து கொண்ட இராவணன் அதனைக் கடப்பதன் மூலம் புதிய பிரச்சனையைத் தோற்றுவித்து தான் எடுத்த காரியத்தை இடையில் கெடுத்து விடவிரும்பவில்லை. ஆகவே கோட்டின் வெளியே நின்று கொண்டான்.

"தயவு செய்து ஆசனத்தில் அமருங்கள் சுவாமி! பழங்கள் கொண்டுவருகிறேன் புசிப்பதற்கு.." என்றாள் சீதை.

"வேண்டாம்! ஆசனம் வேண்டாம்... ஆண்துணையற்ற வேளையில் நான் வந்து அமர்ந்து கொள்வது அழகல்லவே..." என்றான். இவ்வார்த்தையால் சீதையின் மனத்திலிருந்த ஓரளவு பயமும் நீங்கிவிட்டது. அவளுடைய முகத்தில் ஓரளவு தெளிவினைக் கண்ட இராவணன், இதுதான் தக்க தருணம் என்று கருதி, பெண்ணே சீதா! தெற்கே பொன்மயமான ஒரு தீவு இருக்கிறது. இவ்வுலகில் மட்டுமல்ல, இந்திரலோகம், பாதாளலோகம் ஆகிய எல்லா உலகங்களிலும் இல்லாத அற்புதங்களெல்லாம்



அத்தீவில் குவிந்துள்ளன. செல்வச் செழிப் போடும் பல்வளங்களோடும் திகழும் அந்நாட்டை சொர்க்க புரிக்கும் மேலாக நிர்மாணித்து ஆட்சி புரிகிறான் வீரத்திலும் விவேகத்திலும் தன்னிகரில்லாத் தலைவன் இராவணேசன். தேவர்க்கரசன் இந்திரனே இராவணனுடைய குற்றேவல்களுக்காகக் காத்துக்கிடக்கிறான். தேவகன்னியர்கள் இராவணனின் பார்வை தங்கள் மீது ஒரு தடவையாவது பட்டுவிடாதா என்று ஏங்குகின்றனர்.

அழகில் மன்மதனுக்கீடானவன் எவனுமில்லை என்பார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரை இராவணனைவிட அழகில் சிறந்தவன் எங்கணுமே...."

### சீதையின் சீற்றம்

இவ்வாறு தற்புகழ்ச்சியில் இராவணன் வரம்பு மீறிப்போய்க் கொண்டிருக்கும் போதே சீதை இடை மறித்து, "பெரியவரே! எதற்காக வேறொருவருடைய பெருமையையும் அழகுகளையும் என்னிடம் வர்ணிக்கிறீர்கள்? அதுவும் நீங்கள் குறிப்பிடும் இராவணன் ஓர் அசுரன்–அசுரர்களுக்கெல்லாம் அரசன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அசுரர்கள் கொடுமையே உருவானவர்கள். கொலை, காமம், கபடம் போன்ற பாபகாரியங்களில் கூசாமல் ஈடுபடுகிறவர்கள் என்பதை நான் அறிவேன். பிற ஆடவரைப்பற்றி என்னிடம் புகழ்வதை விடுத்துத் தாங்கள் வந்த காரியத்தைக் கூறுங்கள்" என்று சற்று உறைப்பாகவே சொன்னாள்.

சீதையின் வார்த்தைகள் இராவணனைத் துணுக்குற வைத்தது. உடனடியாகவே தன்னுடைய சுயரூபத்தைக் காட்டி அவளை அள்ளி அரவணைத்து விடலாமா என்று அவனுடைய ஓர் எண்ணம் துடித்தது. ஆனால் அடுத்த எண்ண அலை எழுந்து முதலில் தோன்றிய எண்ணத்துக்குத் தடை விதித்தது. இப்பேர்ப்பட்ட ஒரு பேரழகு மலரினைக் கசக்கி முகர்வதானால் அதன் உண்மையான அழகினை இரசிக்க முடியாது. எப்படியாவது–எக்காலம் சென்றாலும், தட்டிக் கனியவைக்காமல் தானாகக் கனிய வைப்பதில் தான் சுவை அதிகம் இருக்கும் என்று முடிவுக்கு வந்தான்.

"பெண்ணே! ஒரு பேரரசனின் மகள்–அரண்மனையில் உல்லாச வாழ்க்கை வாழ வேண்டிய நீ இவ்வாறு வெங்கானகமடைந்து வேதனையின் விளிம்பில் வாடுவது கண்டு என்மனம் புண்ணாகியது. உன் அழகுக்கும் அந்தஸ்துக்கும் ஏற்ற ஒரு நல்ல துணைவனை நீ பெற வேண்டுமே என்ற அவாவினால்தான் சில ஆலோசனைகளைக் கூற முற்பட்டேன். இராவணனுடைய இதயத்திலும் அவனுடைய சிம்மாசனத்திலும் நீ வாழ்வாயானால் உண்மையில் நீ பிறந்த பயனை அடைவாய் என்ற அவாதான் என்னை அவ்வாறு கூறத்தூண்டியது. இன்னும் ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை. நீ இப்பொழுதாவது சம்மதம் தெரிவிப்பாயானால் இக்கணமே இராவணேசனிடம் உன்னை அழைத்துச் செல்கிறேன்..."

"நிறுத்தடா உன் பேச்சை.. முற்றும் துறந்த முழு ஞானியைப் போல் வந்தாயே என்று உன்னை உபசரிக்க முற்பட்டேன். நீயோ தகாதவார்த்தைகளைக் கூறி என்னை எங்கோ இழுத்துச் செல்லப்பார்க்கிறாய். போ.. போய்விடு! இங்கு ஒரு கண நேரம் கூடத்தாமதிக்காதே! என் சுவாமி தற்போது இங்கில்லை, இருப்பினும் என் கணவரின் தம்பி இன்னும் சற்று நேரத்தில் இங்கு

இராஜகுமாரன்

வந்து விடுவார். அவன் உன்னைக் கண்டால், கண்டதுண்டமாக வெட்டி காக்கை கழுகுகளுக்கிரையாக்கி விடுவான். ஓடிவிடு இங்கிருந்து...! உயிர் மேல் ஆசை இருந்தால் ஓடித்தப்பி விடு...!" என்று ஆத்திரமும் அவேசமும் கொண்டவளாக சீதை பலத்த குரலில் சப்தமிட்டாள்.

### வேடம் வெளிப்பட்டது

இராவணன் சிரித்தான்– பலமாகச் சிரித்தான். அந்தக் கானகமே அதிரும்படி மிகப்பலமாகச் சிரித்தான். வனத்திலுள்ள விலங்குகளெல்லாம் இராவணனின் இடியோசை போன்ற சிரிப்பொலி கேட்டுப் பதறின. பறவையினங்களெல்லாம் பரிதவித்து விண்தாவி வேறிடங்களை நாடிப் பறந்து சென்றன.

இராவணன் மெல்ல மெல்ல தனது கபட சன்னியாசி வேடம் கலைந்து சுயரூபம் பெறலானான். சீதை, தன் முன்னே நின்ற கிழத்தோற்றம் கொண்ட முனிவரைக்காண முடியவில்லை. அங்கே பத்துத் தலைகளையும் இருபது கரங்களையும் கொண்ட இராவணன் நின்றிருந்தான். இதனைக் கண்டதும், இலக்குவன்தான் சீதையின் மனக்கண்முன் தோன்றினான். இலக்குவன் கூற்று உண்மையாகிவிட்டதை உடன் உணர்ந்து கொண்டாள். பொன்மான் வேடம் புனைந்து வந்து தன்னையும் தன் கணவனையும் ஏமாற்றியது இராவணனின் சூழ்ச்சியே என்பதனையும் அறிந்து கொண்டாள். பயத்தால் நடு நடுங்கிப் போனாள். செய்வதென்னவென்று தெரியாமல் தவித்தாள்.

"பெண்ணே! இப்போது என்ன சொல்கிறாய்? நானேதான் இலங்கை வேந்தன் இராவணேசன், வா... வந்து விடு என்னுடன்.. உல்லாசபுரியாம் இலங்கா நகருக்கு இப்போதே போய்விடுவோம்!" என்று சீதையின் பால் தனது வலக்கரத்தை நீட்டினான், சீதை பர்ணசாலையுள் புகுந்து கொண்டாள், தரையில் வரையப்பட்டிருந்த கோட்டைத் தாண்டி உள்ளே செல்ல இராவணனால் முடியவில்லை. அக்கோட்டின் வெளிப்புறமாகவே தரையில் தன் கையைப் புதைத்து பர்ணசாலையுடன் சீதையை மேலே தூக்கி எடுத்தான். அப்படியே தனது வானரதத்தின் மீது அமர்த்தி மேலே கிளம்பினான்.

சீதை ஓலமிட்டு அழுதாள். அவள் அழுதகுரல் அக்கானகம் எங்கும் எதிரொலித்தது. அடுத்த காட்டில் ஒரு மலைக் குன்றின் மீது அமர்ந்திருந்த கழுகரசன் ஜடாயுவுக்கும் சீதையின் அவலக்குரல் கேட்டது, சற்றும் தாமதியாமல் வானில் பறந்தார், இராவணன் சீதையை அபகரித்துச் செல்வதைக்கண்டு நேராக வந்து அந்த இரதத்தைச் செலுத்திய சாரதியை தனது அலகினால் கொத்திக் கீழே தள்ளினார்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 38**

**சரியானவிடை:– சீதையிடம் வரும்போது இராவணன் எந்த உருவில் வந்தான்?**

1. A.L. முஹம்மது. 495 ஏ, மௌலானா லேன், சாய்ந்தமருது-14.
2. அ. ரேணுகா. 96, வட்ட வீதி, கழுதாவளை,மாத்தளை.
3. ம. பிரியரஜனி. 128, மெயின் வீதி, திருகோணமலை.
4. தெ. பராளசிங்கம். கட்டிடப்பகுதி, புகையிரத நிலையம், மட்டக்களப்பு.
5. மு. அன்புமணி. , 1B சந்தை சுற்று வட்ட வீதி, வவுனியா.

**போட்டி இல. 40** கேள்வி:- பரதனுக்கு.

ஜூலை.27 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.40, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

---

பூவா-தலையா போட்டுப்பார்த்ததில் எதிரணிக்கே வெற்றிகிடைத்தது. தாம் முதலில் துடுப்பெடுத்தாடப் போவதாகக் கூறினார் எதிரணிக் கப்டன் ரணில்.

சொக்ஸி, ரொனிடிமெல் ஆகியோர் ஆரம்ப துடுப்பாட்டக்காரர்களாக களத்தில் இறங்கினார்கள்.

ஆளும் அணித்தரப்பில் கப்டன் பீரிஸ் முதலில் பந்துவீசினார்.

முதல் ஓவரில் வீசப்பட்ட ஆறு பந்துகளும் மிக அபாரம் என்றும், உலகில் எங்கும் காணாத அதிசயம் என்றும் இலங்கை வானொலி, இலங்கை ரூபவாகினி கிரிக்கெட் விமர்சகர்கள் ஐஸ்மழை பொழிந்து கொண்டிருந்தனர்.

முதல் ஓவரில் ஆறு பந்துகளுக்குமே மட்டைபோட்டு சலிப்பேற்றினார் சொக்ஸி.

ஒன்றில் அடித்தாடுங்கள் அல்லது அவுட்டாகுங்கள். இரண்டும் இல்லையென்றால் ஆடுகளத்தை விட்டு வெளியேறுங்கள் என்று ஆளும் அணி வீரர் ஒருவர் கூச்சலிட்டார்.

"எப்போது அடித்தாடுவது, எப்போது அவுட்டாவது என்பது எங்களுக்குத் தெரியும். பந்தை வீசுவது உங்கள் கடமை. அதனை எப்படித் தடுத்தாடுவது என்பது எங்கள் திறமை. பார்வையாளர்களுக்குத் தேவையானது பொறுமை." என்று பதிலடி கொடுத்தார் சொக்ஸி.

இதற்கிடையே ஆளும் அணி மத்தியில் ஒரு சலசலப்பைக் காணக்கூடியதாக இருந்தது. கள். நான் தடுத்தாடத் தயாராக இல்லை." என்றார் மெல்.

துடுப்பைத்தூக்கி கக்கத்தில் வைத்துக் கொண்டு நடக்கத்தொடங்கினார் மெல்.

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஆனால் இது என் யோசனையுமல்ல, என் அணியின் யோசனையுமல்ல. யார் வேண்டுமானாலும் தத்தெடுத்து பரிசீலிக்கலாம்" என்றார் சொக்ஸி.

தலையை ஒரு உதறு உதறிக்கொண்ட பீரிஸ், "சரி சொல்லுங்கள் பார்ப்போம்" என்றார்.

"பந்தை விக்கெட்டுக்குத்தான் வீச வேண்டும் என்றில்லை. ஒரு வேளை பந்து 'பேட்'டில் பிடித்து எழுந்து வந்தாலும் நீங்கள் 'கேச்' பிடிக்கவேண்டும் என்றில்லை. தப்பித்தவறி 'கேச்' பிடித்தாலும் துடுப்பெடுத்தாடுபவர் அதாவது பேட்டிங் செய்பவர் அவுட்டாகவேண்டியதில்லை. அவர் அவுட்டாகவேண்டும் என்று சொல்லும் அதிகாரம் உங்களுக்கும் இல்லை. தான் அவுட்டில்லை என்று சொல்லும் அதிகாரம் அவருக்குமில்லை. இதுதான் சம அதிகாரமான விளையாட்டு. ஒரு முடிவேயில்லாமல் விளையாடிக்கொண்டேயிருக்கலாம்." என்று சொல்லிவிட்டு தன் சட்டைப்பையில் இருந்த கிரிக்கெட் விளையாட்டு சட்ட திட்டங்களை புரட்டிக் கொண்டே நடையைக் கட்டினார் சொக்ஸி.

கப்டன் பீரிசுக்கு ஒன்றுமே புரியவில்லை. தனது கையில் இருந்த பந்தை உருட்டி உருட்டி

## அரசியல் தீர்வுக் கோப்பைக்கான அதிரடியான கிரிக்கெட் போட்டி

சிறிமணியும், அவருக்கு சார்பான வீரர்களும் தாமும் பந்துவீச வேண்டும். தமது கைக்கும் ஒரு வாய்ப்புத் தரவேண்டும் என்று அடம் பிடித்தார்கள்.

கப்டன் பீரிஸ் கடுமையாக யோசித்துவிட்டு பந்தை சிறிமணியிடம் கொடுத்தார்.

சிறிமணி வீசிய முதல் பந்தை ரொனிடிமெல் மெல்லத்தான் தனது துடுப்பால் தொட்டார். பந்து பவுண்டரியைத் தொட்டது.

சிறிமணி வீசிய இரண்டாவது பந்தும் மிக மிக சுலபமாக விளாசக்கூடியதாகவே இருந்தது. அதனால் இம்முறை ஒரு சிக்ஸர் அடித்துவிட்டு நாசூக்காகச் சிரித்தார் ரொனிடிமெல்.

பார்வையாளர் பகுதியில் இருந்த ஆளும் அணி ரசிகர்கள் வெண் தாமரைகளை வீசியெறிந்து வன்முறையில் ஈடுபடக்கூடிய அறிகுறி தெரிந்தது. எனினும் பெய்யலாம் என்று எதிர்பார்க்க வைத்து பொய்த்த மழைபோல அந்த அறிகுறி பின்னர் மறைந்துவிட்டது.

"நீங்கள் பந்துவீசும் முறையில் ஒரு குறை இருக்கிறது" என்றார் பீரிஸ்.

"என்ன குறை, கூறுங்கள் பார்க்கலாம்" என்றார் சிறிமணி.

கப்டன் பீரிசுக்கு ஆதரவாக தலையை நீட்டினார் மங்களா. "எத்தனையோ குறைகள். ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல?" என்று சீறினார் அவர்.

அப்போது பவுண்டரியில் நின்று பீல்டிங் செய்து கொண்டிருந்த கதிர்காமர் ஓடிவந்து குறுக்கே புகுந்தார். "வெளிநாட்டவர்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்." என்று அவர் சொல்ல, "பார்க்கட்டுமேன் எமக்கென்ன?" என்றார் சிறிமணி.

கதிர்காமருக்கு லேசாகக் கோபம் வந்தாலும், கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார். உங்களுக்கு ஒன்றுமில்லை. நான்தானே விளக்கம் சொல்லி மாயவேண்டும். கேள்விகேட்டு துளைத்தெடுத்துவிடுவார்கள். 'பிளீஸ் டோண்ட் பைட். டோண்ட் பிளே சேம் சைட் கோல்' என்று வேண்டுகோள் விடுத்தார் கதிர்காமர்.

அந்த நேரம் பார்த்து தொண்டா ஒரு குண்டைத்தூக்கிப்போட்டார். "நான் நம்பிக்கையில்லா பந்தொன்றை வீசவேண்டியிருக்கும். எனக்கும் எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன." என்றார் தொண்டா.

"மிஸ்டர் தொண்டா, ஒரு நிமிஷம் பிளீஸ்" என்று அவரைத் தனியாக அழைத்துச் சென்று குசுகுசுத்தார் கப்டன் பீரிஸ்.

பின்னர் இருவரும் திரும்பிவந்தார்கள். அப்போது அவரைப் பார்த்து சிறிமணி "என்ன மிஸ்டர் தொண்டா. உங்களுக்கும் இந்த அணியில் நம்பிக்கையில்லையல்லவா?" என்று கேட்டார்.

"நம்பிக்கையில்லை என்று சொன்னதை நான் வாபஸ்பெறப்போவதும் இல்லை, அதே நேரம் அதனை வலியுறுத்தப்போவதும் இல்லை. அணியின் நிர்வாகியுடன் பேசிவிட்டுத்தான் இறுதி முடிவை அறிவிப்பேன். அதுவரை நான் சொன்னதை உங்கள் மனதில் ஒரு ஓரத்தில் தள்ளி ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றார் தொண்டா. சிறிமணி தனது தலைமுடியை பிய்த்துக் கொள்ள, கப்டன் பீரிஸ் கைகளைப் பிசைந்து கொண்டார்.

மீண்டும் பந்துவீச்சை ஆரம்பிக்க கப்டன் பீரிஸ் தயாரானபோது, ரொனிடிமெல் 'பிட்ச்'சை விட்டு வெளியே போய் நின்றார்.

"வாருங்கள் மிஸ்டர் மெல், பந்தை எதிர்கொள்ளுங்கள். இது நல்ல பந்து. நீங்கள் துடுப்பெடுத்து ஆடும்போது நாங்கள் வீசுவோம். நாங்கள் துடுப்பெடுத்து ஆடும்போது நீங்கள் வீசலாம். வாருங்கள் மிஸ்டர் மெல்" என்று அழைத்தார் பீரிஸ்.

"நோ மிஸ்டர் பீரிஸ். உங்கள் அணிக்குள் ஒற்றுமையில்லை. ஒரு டிசிப்பிளின் இல்லை. ஒவ்வொருத்தரும் ஒரு விதமாக வந்து வீசுகிறீர் பார்த்துக்கொண்டே இருந்தார். சட்டென்று எதிரணிக் குழு இருந்த பக்கமாக ஓடினார்.

"மிஸ்டர் ரணில், உங்கள் வீரர் சொக்ஸி சொன்னதுபோல ஆடிப்பார்க்கலாம். பிளீஸ் கம்" என்றார்.

உடனே ரணில் ஒரு புன்னகை செய்து கொண்டே, சொக்ஸியைப் பார்த்து கண்ணடித்தார்.

"மிஸ்டர் பீரிஸ், உங்கள் முகத்துக்காக சொக்ஸி ஏதாவது சொல்லியிருப்பார். அது எங்கள் கருத்தல்ல. எங்கள் நடை, உடை பாவனை பற்றி உங்கள் அணியினர் நல்லவிதமாக பேசினால்தான் நாங்கள் இந்த விளையாட்டில் கலந்துகொள்வோம்." என்றார் ரணில்.

"மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுகிறீர்கள்" என்றார் பீரிஸ். அவரது உடல் கோபத்தில் துடித்தது.

பதிலுக்கு ரணிலின் உடலும் துடித்தது.

"அபாண்டமாக எம்மீது பழி சுமத்தியதால் நாங்கள் விளையாட வரமாட்டோம். வெளிநடப்பு செய்கிறோம்" என்றுவிட்டு தனது அணியினரைப் பார்த்தார் ரணில்.

எல்லோரும் எழுந்து வெளியே செல்லத் தொடங்கினார்கள்.

போட்டியில் கலந்துகொள்ள வந்திருந்த தமிழ் கட்சி அணியினரிடம் ஓடினார் பீரிஸ்.

"அவர்கள் போகிறார்கள். பிடியுங்கள். பிடியுங்கள்." என்று சத்தம் போட்டார்.

விழுந்தடித்துக் கொண்டு ஓடிய தமிழ் கட்சி அணியினர், "அண்ணே என்ன பிரச்சனை?" என்றார்கள் ரணிலிடம்.

"தம்பிமார்களே! எங்கள் பந்துவீச்சுக்களை ஆளும் அணி முன் ஒரு காலத்தில் குறை சொன்னதல்லவா. அதற்கெல்லாம் விளக்கம் சொல்லி, மன்னிப்பு கேட்கட்டும். இனி எமது அணிமீது குறையே சொல்லமாட்டோம் என்று எழுதித்தரட்டும். அதன்பின்னர்தான் இந்த விளையாட்டுக்கு வருவோம். நீங்கள் எங்கள் கையைத் திருக முயலாதீர்கள். வாருங்கள் ரீ சாப்பிடுவோம்." என்றார் ரணில்.

தமிழ் கட்சி அணியினர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பின்னர் ரணிலைப் பார்த்து அசட்டு சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு திரும்பினார்கள்.

"என்ன நடந்தது?" என்று கேட்டார் பீரிஸ்.

"எதுவுமே நடக்கவில்லை." என்றது தமிழ் கட்சி அணி.

பீரிஸ் யோசித்தார். தன் கையில் இருந்த பந்தை மெல்ல நழுவவிட்டார்.

"என்ன இது பந்தைப் போட்டுவிட்டீர்களே?" என்று கேட்டார்கள் தமிழ் கட்சி அணியினர்.

பீரிஸ் மர்மப் புன்னகை ஒன்றை வீசினார். பின்னர் மின்வெட்டுப்போல தனது புன்னகையை நிறுத்திக் கொண்டு, முகத்தை சீரியஸாக வைத்துக்கொண்டார்.

"வேறொரு பந்தை வீசிப்பார்க்கப்போகிறேன். தட் இஸ் டென்னிஸ் போல். அதற்கு ஒரு பெயரும் வைத்துவிட்டேன்" என்றார்.

"என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள்?"

"சொக்ஸி போல்!

"சொக்ஸி போல் நொட் எ செக்ஸி போல்!" என்றார் நீலன்.

"டோண்ட் வொரி மிஸ்டர் நீலன். நாம் இருவரும் இணைந்து தயாரித்த பந்தை ஒரு பொந்துக்குள் போடுவது கவலையாகத்தான் இருக்கும். யூ. நோ அண்ணாத்துரை. எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று அவர் சொன்னதை மறந்துவிடவேண்டாம்." என்றார் பீரிஸ்.

"வெரி குட் ஆர்க்கியுமென்ட். நான் பாராட்டியதை வெளியே சொல்லவேண்டாம். திஸ் இஸ் பொலிடிக்ஸ்" என்றார் நீலன்.

"பொலிடிக்ஸ் அல்ல பொலிரிக்ஸ்" என்றுவிட்டு சிரித்தார் பீரிஸ். அசடு வழிந்தாலும் துடைத்துக் கொண்டார் நீலன்.

கற்பனை வர்ணனை தந்தவர் காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

433631

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


இந்த மீன் வலையில் சிக்காது. நீருக்குள் மனிதன் சிக்கினால் அவன் விரல் தப்பாது. ஒரே நறுக்.

# மிரட்டும் மீன்



இந்த மீனின் பெயர் பிரன்ஹா. சண்டித்தனம் இதன் கூடவே பிறந்த குணம்.
இதன் விஞ்ஞானப் பெயர்கள்-செறாசல்மஸ், மற்றும் பிகோசென்றஸ்.




பிரன்ஹா மீன் அப்படி ஒன்றும் உருவத்தில் பெரியதல்ல. 2 அடி அகலம்தான் இருக்கும். இதன் பற்கள்தான் படு பொல்லாதவை. சவரக்கத்தியின் கூர்மைகொண்டவை. மனிதனின் கை, கால் விரல்கள் இதன் பற்களில் சிக்கினால் போதும். காரட் நறுக்குவதுபோல் துண்டாக்கிவிடும். இதன் வாய் (தாடைப்பகுதி) மிகவும் பலமானது.

நன்னீர் மீனினத்தில் மிக ஆபத்தான மீன் இது. தென் அமெரிக்காவில் உள்ள பெரும் நதிகளின் அசைவற்ற நீர்ப்பரப்புக்களில்தான் அதிகமாகக் காணப்படுகிறது.

நீரில் சல சலப்பு தென்பட்டால் போதும். சண்டைக்கு தயாராகிவிடும். இதன் குணம் என்னவென்றால் சண்டையில் வெல்லும் வரை போராடும். அல்லது மோதலில் உயிரிழக்கும். நீரில் காணப்படும் முதலையை துண்டாடிமுடிக்க இதற்கு 5 நிமிடம் போதும். உருவத்தில் சிறியது. உக்கிரத்தில் வலியது.




ஸ்ரீ கல்யாணி ஜீவல்ஸ்

SRI KALYANY JEWELES

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

3236557

5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11


# எல்லாம் அவருக்காக




கின்னஸ் உலக சாதனைக்காக தயாரிக்கப்பட்டு அடுக்கிவைக்கப்பட்டுள்ள லட்டுக்களா இவை? என்று நினைக்க வேண்டாம்.


சாதனை படைக்கவல்ல, சத்யசாயிபாபாவுக்கு படைக்கப்பட செய்யப்பட்ட லட்டுக்கள்தான் இத்தனையும்.

சத்யசாயிபாபாவுக்கு உலகெங்கும் பக்தர்கள் இருக்கிறார்கள். அவரது 70வது பிறந்தநாள் விழாமட்டும் பத்துநாட்கள் வெகு விமரிசையாக நடந்தது. பக்தர்கள் பலர் வசதியானவர்கள் என்பதால் விமரிசைக்கு குறைவில்லை.

70வது பிறந்தநாளுக்காக பக்தர்களுக்கு லட்டுக் கொடுத்தார் பாபா. அவருக்கு படைக்கப்பட்டு, பின்னர் பக்தர்களுக்கு பரிமாறப்பட்டது. மொத்தம் 10 லட்சம் லட்டுக்கள்.

யம்மாடி! எவ்வளவு செலவாகியிருக்கும் என்று மலைக்காதீர்கள். பிறந்தநாள் பரிசாக பாபாவுக்கு கிடைத்த பொருட்களின் மதிப்பு இந்திய மதிப்பில் 160 கோடி ரூபாய்! அதில் சுத்தமான 23 கிலோ தங்கமும் அடக்கம். உலக சாதனைப் புத்தகத்தில் பதியப்படாவிட்டாலும் இவையும் உலக சாதனைதானே!

# புதிய பூமி



பூமியின் படத்தை புதுவிதமாக எடுத்த புகைப்படம் இது.

அண்டவெளியில் கிளெமென்ரைன் விண் கலத்தில் இருந்து, கம்யூட்டர் உதவியால் இயங்கும் கமராவினால் பிடிக்கப்பட்டது.


பூமியின் ஈர்ப்புச் சக்தியின் செறிவைக் காட்டுகிறது இப் புகைப்படம்.

மஞ்சள் வர்ணத்தில் காணப்படும் பகுதிகளில் சாதாரண ஈர்ப்புவிசையையும், சிவப்பு வர்ணத்தில் உள்ள பகுதிகள் அதைவிடக் கூடுதல் ஈர்ப்பு சக்தியும், பச்சை நீலப் பகுதிகளில் குறைவான ஈர்ப்பு விசையும் காணப்படுவதை படம் காட்டுகிறது.

மேல் வலது மூலையில் பெரிய சிவப்புத் திட்டுக்களாக காட்டப்பட்டுள்ள பகுதிகளுக்கு சமீபமாக பூமியை வலம்வரும் சந்திரன் காணப்பட்டதால் அங்கு ஈர்ப்புவிசை அதிகமாகக் காணப்பட்டது.

இவ்வாறு ஈர்ப்பு விசை அதிகமாகவுள்ள முழுப்பூரண நாட்களில் மனோநிலை பாதிக்கப்பட்ட நோயாளர்களின் நிலை மோசமாவதுண்டு.

அமெரிக்க விஞ்ஞான ஆராய்ச்சிப் பிரிவான நாசாவால் வெளியிடப்பட்ட இப்புகைப்படம்தான் அண்டவெளியில் இருந்து பூமியின் ஈர்ப்புவிசை செறிவைக் காட்டும் முதலாவது படம். அதனால் கின்னஸிலும் இடம்பிடித்துள்ளது.



# அழையா விருந்தாளி

பணம் கொடுக்காமல் ஓசிச் சாப்பாடு. என்ன ஒரு குசி. இலண்டன் உணவுவிடுதி ஒன்றில் பிடிக்கப்பட்ட சுவையான காட்சி.




# புதுமுகம் — புதுவிதம்

இந்திய கிரிக்கெட் அணியில் நீண்டகாலத்தின் பின்னர் ஒரு புதுமுகம் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளது. அவர்தான் சவுரவ் கங்குலி.

மனோஜ் பிரபாகர், வினோத் காம்ளி ஆகியோர் இந்திய அணியில் இல்லாத வெற்றிடத்தை நிரப்புவதற்கு புதியவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டது. அதில் முதலிடம் பிடித்திருப்பவர் கங்குலிதான்.

அறிமுகமான சூட்டோடு கங்குலி படைத்துள்ள சாதனைகள் கிரிக்கெட் ரசிக ரசிகைகளிடம் அவரை புதிய நட்சத்திரமாக்கியுள்ளது.

அறிமுகமான முதலாவது டெஸ்ட்டிலும், தொடர்ந்து இரண்டாவது டெஸ்ட்டிலும் சதம் அடித்தது. அதன் மூலம் அறிமுகமான டெஸ்ட்டிலும், அதற்கடுத்த டெஸ்ட்டிலும் சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் ஆறாவது இடம். 'கிரிக்கெட்டின் மக்கா' என்று அழைக்கப்படும் இங்கிலாந்து லோர்ட்ஸ் மைதானத்தில் அறிமுகமான முதலாவது டெஸ்ட்டில் சதம் அடித்த மூன்றாவது வீரர். இந்திய வீரர்களில் முதலாவது வீரர்.

இங்கிலாந்து-இந்தியா மூன்றாவது டெஸ்ட் போட்டிதான் கங்குலிக்கு இரண்டாவது டெஸ்ட் போட்டி. அதில் முதல் இன்னிங்ஸில் 136 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 48 ரன்களும் எடுத்தார். தான் விளையாடிய இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மூன்று இன்னிங்ஸ் பந்துவீசி மொத்தம் 6 விக்கெட்டுக்களை சாய்த்தது மற்றொரு அசத்தல்.

23 வயதான கங்குலி மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர். சகல துறை ஆட்டக்காரராக இருப்பது தான் அவரை மற்றொரு இளம்புயலாக அறிமுகமாக்கியுள்ளது.

வயதுண்டு வேகமும் உண்டு. கங்குலி இந்திய கிரிக்கெட் அணியில் சூப்பர் ஸ்டார்களில் ஒருவராவது உறுதி. இப்போதே பலரது உள்ளத்தை அள்ளிவிட்டார்.



[illegible] ஜூலை மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்